Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 20 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2046 ஆனி 08 செவ்வாய்க்கிழமை (23.06.2015) பக்கங்கள் 20 ஓசை – 266

## இரு இந்தியர்களுக்கு சிறைத்தண்டனை

### சட்டவிரோத வியாபாரம் காரணம்

(கரணவாய்)

சட்டவிரோதமான முறையில் நிஜாம் பாக்கு, சல்பார் துணி என்பவற்றை விற்பனை செய்த இரு இந்தியர்களுக்கு பருத்தித்துறை மாவட்ட நீதவான் மா.கணேசராஜாவால் கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

தமிழ் நாட்டில் இருந்துவந்து சட்டவிரோதமான முறையில் நிஜாம்பாக்கு, சல்பார் துணி என்பவற்றை விற்பனை செய்தவர்களை பொலிஸ்ார் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்தபோதே ஐந்துவருடத்திற்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனையும் ஒருவருட கடூழியச் சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

குற்றவாளிகளான சுப்பிரமணியம் செந்தில்குமரன், முருகானந்தன் தினேஸ்குமார் ஆகிய இருவரையும் உடனடியாக யாழ். சிறைச்சாலைக்கு மாற்றி அவர்களை நாடு கடத்துமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். இவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட 238 நிஜாம்பாக்குகளும், 800 சல்பார் துணிகளும் அரசுடமையாக்கப்பட்டுள்ளது. (18)

# ராஜிதவுடன் பசில் பேச்சு.



(கொழும்பு)

அமைச்சரவை பேச்சாளர் ராஜித சேனாரட்னவிற்கும் முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவிற்கும் இடையில் இரண்டு மணித்தியால பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த சனிக்கிழமை இரவு இந்த சந்திப்பு நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. பசில் ராஜபக்ஷ சிகிச்சை பெற்று வரும் கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள பிரபல தனியார் வைத்தியசாலையில் இந்த சந்திப்பு நடத்தப்பட்டுள்ளது.

அமைச்சர் ராஜித, பசில் ராஜபக்ஷவுடன் நீண்ட நேரம் பேச்சுவார்த்தை நடத்திய காரணத்தினால் பசிலை பார்க்கச் சென்ற பிரதேச சபை உறுப்பினர்கள்,



(19) ஆம் பக்கம் பார்க்க

# பாடசாலை நேரத்தில் மாணவர்கள் வீதிக்குவந்தால் கைது

(யாழ்ப்பாணம்)

தேவையற்ற விதத்தில் பாடசாலை சீருடையுடன் மாணவர்கள் வெளியில் திரிந்தால் உடனடியாக கைது செய்யப்பட்டு 14 நாட்களோ அதற்கு அதிகமாகவோ விளக்கமறியலில் வைக்கப்படுவர் என யாழ்ப்பாண பொலிஸ நிலையப் பொறுப்பதிகாரி வூட்லர் அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பொலிஸாருக்கும் இடையில் விழிப்புணர்வு கலந்துரையாடல் ஒன்று நேற்று நடைபெற்றது. அதன் போதே பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மேற்கண்டவாறு அறிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்கால சமூகமாக இருப்பவர்கள் இன்றைய மாணவர்கள். அவர்களது எதிர்காலம் சிறப்பதற்கு என்ன சேவையை வேண்டுமானாலும் செய்வதற்கு

(19) ஆம் பக்கம் பார்க்க

## ஆட்சி அமைக்க தமிழரின் ஆதரவு நிச்சயம் தேவை

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஆட்சியமைத்துக்கொள்வதற்கு தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் ஆதரவு நிச்சயம் தேவை என்று ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேன தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினாலோ அல்லது வேறு எந்த கட்சியினாலோ, சிங்கள பௌத்த வாக்குகளால் மட்டும் அரசாங்கத்தை அமைத்துவிட முடியாது என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நடந்த நுவரெலிய மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பிரதிநிதிகளுடனான சந்திப்பில், உரையாற்றிய



போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அரசாங்கம் ஒன்றை நிறுவ வேண்டுமாயின் சிங்கள பௌ

(19) ஆம் பக்கம் பார்க்க

## கூட்டு இராணுவப் பயிற்சி சீனாவுடன் இலங்கை



(கொழும்பு)

பட்டுப்பாதை பயிற்சி - 2015 போர்ப்பயிற்சியின் இரண்டாவது கட்டமே நேற்றுக் காலை புத்தலவில் உள்ள அதிகாரிகள் திறன்

(19) ஆம் பக்கம் பார்க்க

## "ரக்னா லங்கா"வின் வங்கிக் கணக்குகளை விசாரிக்க உத்தரவு

(கொழும்பு)

ரக்னா லங்கா என்று பெயரிடப்பட்டுள்ள தனியார் பாதுகாப்பு நிறுவனத்தின் வெவ்வேறான மூன்று வங்கிக் கணக்குகள் மீது விசாரணைகளை மேற்கொள்வதற்கு, இரகசியப் பொலிஸாருக்கு கொழும்பு பிரதம நீதவான் கிஹான் பிலபிட்டிய நேற்று உத்தரவிட்டார்.

## மகிந்தானந்தவிடம் நேற்று விசாரணை

(கொழும்பு)

விளையாட்டுத்துறை முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்தானந்த அளுத்கமகேயிடம் நிதி மோசடி குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நேற்று மூன்றரை மணி நேரம் விசாரணைகளை நடத்தியுள்ளனர்.

(19) ஆம் பக்கம் பார்க்க

க.பொ.த.சாதாரண தர மாணவர்களுக்கு

ஓர் நற்செய்தி



உங்களின் வேண்டுகோளுக்கிணங்க க.பொ.த.
சாதாரண தர பரீட்சைக்கு தோற்றவிருக்கும்
மாணவர்களுக்கான கணித பாட விசேட பயிற்சி வினா
விடைகளும் ஒவ்வொரு வியாழக்கிழமைகளும் வெளிவரும்
என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.
எதிர்வரும் வியாழக்கிழமை ஆரம்பித்து பகுதி I-A இற்குரிய 460
வினா விடைகளின் தொகுப்பு தொடர்ச்சியாக வெளிவரும்.

குறிப்பு:
எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிரசுரமாகவுள்ள வாரம்
ஒரு பாடசாலை இந்தவாரம் மட்டும் புதன்கிழமை
பிரசுரமாகும் என்பதையும் தங்களுக்கு அறிவித்துக்
கொள்கின்றோம்.

# தமிழர் பிரச்சினைக்கான தீர்வு தள்ளி வைக்கப்படுவது நியாயமா?

### துணைபோவோர் மீது கண்டனம்

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கான தீர்வு மீண்டும் மீண்டும் தள்ளி வைக்கப்படுவதற்கு துணைபோவோர் மீது கண்டனம் தெரிவித்து ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி விரிவான கண்டன அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அடுத்த பொதுத் தேர்தலுக்குப் பின்னர் தமிழர்களுக்கான பல விடயங்களை செய்தாக வேண்டும் என்ற பிடிக்குள் அரசு இருக்கிறது என கடந்த மாதம்

(19) ஆம் பக்கம் பார்க்க

# மக்களின் இடர் களைய மாமுனையில் சந்திப்பு



(மாமுனை)

வடமராட்சி கிழக்கு மாமுனை மக்கள் தமது பிரச்சினைகள் மற்றும் தேவைகள் குறித்து நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதித் தலைவருமான மு.சந்திரகுமாரின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளனர். நேற்று மாமுனைக்கு விஜயம் செய்த நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் அப்பகுதி மக்களுடன் கலந்துரையாடினார். இதன்போது, மக்களும், மக்கள் அமைப்புகளின் பிரதிநிதிகளும் தமது தேவைகள், பிரச்சினைகள் தொடர்பில் அவரின் கவனத்திற்கு கொண்டு வந்தனர்.

யுத்தத்தின் பின் மாமுனையில் மீள்குடியேறிய மக்களின் பல தேவைகள் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளபோதும், தொடர்ந்தும் தாம் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருவதாகத் தெரிவித்த மக்கள் பிரதிநிதிகள், பல்வேறு பிரச்சினைகளை நாடாளுமன்ற உறுப்பினரின் கவனத்திற்கு கொண்டுவந்தனர்.

தொழில் ரீதியாக எதிர்கொள்ளும் பிரச்சினைகளை சுட்டிக்காட்டிய அவர்கள், கடற்றொழிலையே பிரதான தொழிலாகக் கொண்டுள்ள அம்மக்கள் தொழில் உபகரணங்கள் இல்லாததால் தொழில் ரீதியாக முடங்கியுள்ளதாகக் குறிப்பிட்டனர். ஆழ்கடலுக்குச் சென்று தொழில் புரியும் வசதிகள் இல்லாததால் கரையை அண்டியே தொழிலை மேற்கொண்டுவருவதாகவும் இதனால் மிகக்குறைந்த அளவு வருமானத்தையே பெற்று வருவதாகவும் சுட்டிக்காட்டினர்.

2010 ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் மீள்குடியமர்த்தப்பட்ட மாமுனையில் 134 குடும்பங்களுக்கு வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டுள்ள போதும், மேலும் 55 வரையான குடும்பங்களுக்கு வீட்டுத்திட்டம் வழங்கப்படவில்லை என்பதையும் சுட்டிக்காட்டிய மக்கள், சுமார் ஐந்தரை இலட்சம் ரூபா ஒதுக்கீட்டில் வழங்கப்பட்ட வீட்டுத்திட்டத்தைப் பெற்றுக்கொண்ட பலருக்கு மூன்றரை இலட்சம் ரூபா மட்டுமே வழங்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டனர்.

மேலும், போக்குவரத்து தொடர்பிலும் பாரிய சிரமங்களை எதிர்கொண்டு வருவதாக குறிப்பிட்ட மக்கள், மாமுனைக்கு இன்றுவரை பேருந்து சேவைகள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் இலங்கை போக்குவரத்துச் சபையினரிடம் இது தொடர்பாக பல தடவைகள் தெரியப்படுத்தியபோதும், இதுவரை எந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் அவர் தெரிவித்தனர்.

இதேவேளை, இங்கு கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், மாமுனையில் சுமார் 55 இற்கும் அதிகமான குடும்பங்களுக்கு இதுவரை வீட்டுத்திட்டம் வழங்கப்படவில்லை. அவர்களிடம் காணி ஆவணங்கள் இல்லாததனாலேயே இப்பின்னடைவு ஏற்பட்டது. இதுபோன்று வடமராட்சி கிழக்கின் பல்வேறு பகுதிகளில் 250 வரையான குடும்பங்கள் காணி ஆவணங்களை பெறாதுள்ளனர். அவர்களுக்கு ஆவணங்களை வழங்குவதற்கான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. அதனடிப்படையில் விரைவில் அச்செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுமெனவும் தெரிவித்த அவர், இப்பகுதியூடான சுமார் 55 கிலோமீற்றர் கரையோர வீதியை புனரமைப்பதற்காக கடந்த காலங்களில் நாம் முயற்சிகளை மேற்கொண்டோம். அதனடிப்படையில் நிதி ஒதுக்கீடுகளும் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், இடையில் ஏற்பட்டுள்ள ஸ்திரமற்ற அரசியல் போக்கு பல வேலைத்திட்டங்களை மேற்கொள்வதில் இடையூறுகளை ஏற்படுத்தியுள்ளது. எனினும், அடுத்துவரும் காலங்களில் வீதி புனரமைப்பு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

நேற்றுக் காலை 10.30 மணிக்கு இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் மாமுனை கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க பொருளாளர் ரவிச்சந்திரன், அப்பகுதி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவி லியோ சத்தியா மற்றும் ஆலய நிர்வாகங்களின் தலைவர்கள், சமூக செயற்பாட்டாளர் தருமலிங்கம் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், மக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# வளலாய் வீதிகளை புனரமைக்க வேண்டுகோள்

(வளலாய்)

வளலாய் வீதிகளின் இரு மருங்குகளிலும் வளர்ந்துள்ள பற்றைகள், செடிகொடிகளால் பெரும் சிரமங் களை எதிர்கொள்வதாக வளலாய்ப் பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

கடந்த நான்கு ஆண்டுகளாக இந்த வீதிகள் செப்பனிடப்படாத நிலையில் இப்போது செடிகொடிகளும் மண்டியுள்ளதால், இவ்வீதிகளைப் பயன்படுத்தும் மாணவர்கள் அச்சத்துடன் செல்ல வேண்டியிருப்பதாக அப்பகுதி கிராம முன்னேற்றச் சங்கத்தின் தலைவர் த. தங்கராசா தெரிவித்தார்.

இந்த வீதிகள் 2010இல் நெல்சிப் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்டன. அதன் பின்பு இங்குள்ள பொது அமைப்புக்களின் நிர்வாகங்கள் சீர்குலைந்ததில் இக்கிராமத்தின் செயற்பாடுகள் தடைப்பட்டுள்ளன என அவர் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், இரவு வேளைகளில் இவ்வீதிகளில் அச்சத்துடனேயே பொதுமக்கள் செல்ல வேண்டியுள்ளது. இந்த வீதிகளைச் செப்பனிடல் மிகவும் அவசியம் எனக் குறிப்பிட்டார்.

வலி. கிழக்கு பிரதேச சபையின் கவனத்திற்கு விடயத்தை கொண்டு வந்துள்ளோம். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அவர் வேண்டுகோள் விடுத்தார். (168)

# ஊனமுற்றோருக்கான கொடுப்பனவு

சாவகச்சேரி பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவில் பதிவு செய்யப்பட்ட ஊனமுற்றோருக்கான வைகாசி மாதக் கொடுப்பனவிற்கான 3000 ரூபா காசோலை கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் வழங்கப்பட்டு வருகிறது. உரிய பயனாளிகள் சாவகச்சேரி சமூக சேவைகள் பிரிவினருடன் தொடர்பு கொண்டு காசோலையைப் பெற்றுக்கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகின்றது. (150)

# விளையாட்டு விழா


(வேலணை)

வேலணைப் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையில் வருடா வருடம் இடம்பெறும் விளையாட்டு விழாவின் இறுதி நாள் நிகழ்வு இன்று பிற்பகல் 2.00 மணியளவில் வேலணை துறையூர் ஐயனார் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வேலணைப் பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் நா. வேதநாயகன் கலந்துகொள்ளவுள்ளார்.

மற்றும் சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர் திருமதி இ. மோகனேஸ்வரன், கௌரவ விருந்தினர்களாக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் வு.ஜோன் குயின்ரன், யாழ். மாவட்ட விளையாட்டு அலுவலர் எம்.ஆர். மோகனதாஸ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (21)

# நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபைக்கு புதிய கட்டடம் திறப்பு






(யாழ்ப்பாணம்)

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் வடமாகாண உதவிப் பொது முகாமையாளர் அலுவலகம் மற்றும் யாழ். பிராந்திய முகாமையாளர் அலுவலகம் என்பன அடங்கிய நவீன கட்டடம் நேற்றுக் காலை கோலாகலமாக திறந்து வைக்கப்பட்டது.

நகர அபிவிருத்தி மற்றும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சர் ரவூப் ஹக்கீம் திறப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பெயர்ப் பலகையைத் திரை நீக்கம் செய்து வைத்ததுடன் நாடாவை வெட்டி கட்டடத்தை திறந்து வைத்தார்.

காலை 9.45 மணிக்கு ஆரம்பமான இந்நிகழ்வில் நீர்க்குளாய் பொருத்தும் பயிற்சி பெற்றவர்களுக்கான உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

யாழ். - கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதார செயற்திட்டத்தின் கீழ் நவீன பொறிமுறை வசதிகளுடன் கூடிய இந்த நவீன பசுமை நிறைந்த இக்கட்டடம் 282 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ளதுடன் ஆய்வு கூடம் மற்றும் பயிற்சிக் கூடம் என்பனவும் இக்கட்டடத்தில் அமைந்துள்ளதுடன் மக்களுக்கான சிறந்த சேவையை வழங்கும் வகையில் இந்த அலுவலகக் கட்டடம் அமைந்துள்ளது.

இந்நிகழ்வில் பிரதியமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை. சேனாதிராசா, சரவணபவன், மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம், ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், மேலதிக அரச அதிபர் செந்தில்நந்தனன் ஆகியோரும் திணைக்கள ஊழியர்கள், அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ)

# கடற்படையின் தாக்குதலால் மீனவர்கள் காயம்

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட இரணைதீவு கடற்றொழிலாளர்கள் மீது நடுக்கடலில் வைத்து கடற்படையினர் கண்மூடித்தனமாக தாக்குதல் மேற்கொண்டுள்ளமையினால் பிரதேச கடற்றொழிலாளர்கள் அச்சத்துடன் காணப்படுகின்றனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, கடந்த சனிக்கிழமையன்று வழமை போன்று இரணைமாதாநகரில் இருந்து தங்களின் பூர்வீக இடமான இரணைதீவுப் பகுதிக்கு இரண்டு படகுகளில் நான்கு கடற்றொழிலாளர்கள் தொழிலுக்குச்சென்றுள்ளனர். இதன் போது ஒரு படகின் இயந்திரம் பழுதடைந்ததன் காரணமாக இரணைதீவு, சின்னத்தீவு எனும் பகுதியில் நடுக்கடலில் இயந்திரத்தினை திருத்தும் நடவடிக்கையில் கடற்றொழிலாளர்கள் ஈடுபட்டு கொண்டிருந்த போது குறித்த இடத்திற்கு வருகைதந்த கடற்படையினர் நான்கு கடற்றொழிலாளர்கள் மீது பொல்லுகளால் கடுமையாகத் தாக்கியுள்ளனர்.

காலை ஒன்பது மணியாகியும் இயந்திரக் கோளாறு காரணமாக கரைக்கு திரும்ப முடியாது காணப்பட்ட கடற்றொழிலாளர்கள் மீதே கடற்படையினர் கடுமையான தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். இதனால் இரணைமாதாநகர் கடற்றொழிலாளர் தொழிலுக்கு செல்வதில் அச்சமுடன் காணப்படுகின்றனர். குறித்த கடல் பிரதேசம் கடற்றொழில் நடவடிக்கைகளுக்கு தடைசெய்யப்பட்ட பிரதேசம் அல்ல எனவும் குறிப்பிடும் கடற்றொழிலாளர்கள் காரணமின்றி தாங்கள் தாக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர். (29)

மீண்டும் எமது மக்களுக்கான தீர்வு பற்றி பேசியுள்ளோம்... மீண்டும் எமது மக்களுக்கான தீர்வு பற்றி அவர்களுக்கு எடுத்து சொன்னோம்... மீண்டும் அவர்கள் உன்னிப்பாக கேட்டுக்கொண்டனர்... மீண்டும் அரசுக்கு அதுபற்றி அறிவுறுத்துவதாக மீண்டும் எமக்குக் கூறியுள்ளனர்...



# காலமாகி விட்டதா தமிழ் மக்களுக்கான தீர்வு?

● மட்டுநகரிலிருந்து எழுகதிரோன்

சுதந்திர இலங்கையின் ஊடகங்கள் அதிகம் உபயோகித்த ஒரு சொல் எதுவெனக் கேட்டால் அது “தமிழ் மக்களுக்கான தீர்வு” என்கின்ற சொல்லாடல்தான் என்று அடித்துச் சொல்லலாம். இது சமஷ்டியில் தொடங்கி மாவட்ட சபை மாகாண சபை என்று ஒருபுறமும் தமிழீழம், தன்னாட்சி அதிகார சபை, என்று மறுபுறமுமாக அல்லோல கல்லோலப்பட்டு இறுதியாக 13 ஆவது சட்டதிருத்தத்தில் வந்து நின்றது.

அதன்படி உருவாக்கப்பட்ட மாகாண சபைகளுக்கு காணி பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை கடந்த கால ஆட்சியாளர்கள் தட்டிக்கழித்து வந்தனர். ஆனபோதிலும் அதுபற்றிய கோரிக்கைகளும் அவற்றுக்கு ஆதரவான இந்தியா போன்ற சர்வதேச நாடுகளின் நெருக்குவாரங்களும்கூட தொடர்ச்சியாக இருந்தே வந்தன. அதன் காரணமாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த கூட தன் 13க்கும் அப்பால் சென்று தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பேன் என்று பொய்யாகவேனும் வாக்குறுதிகளை வழங்க வேண்டியிருந்தது. அது ஒரு வகையில் தீர்வு ஒன்றின் அவசியத்தை தொடர்ச்சியாக உயிர்ப்புடன் வைத்துக்கொள்ள தமிழர் தரப்புக்கு வாய்ப்பான காலமாக இருந்தது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் காலத்துக்கு காலம் தமிழ் மக்களின் தீர்வு என்கின்ற விடயத்தை வைத்தே ஒவ்வொரு தேர்தலையும் எதிர்கொண்டு தமது பதவிகளை புதுப்பித்துக் கொள்வது வழக்கமானதொன்றாய் இருந்து வருகின்றது. இந்தத் தீர்வு என்கின்ற ஒரு சொல்லாடலை வைத்தே மாவையார் போன்றவர்கள் அடிக்கடி அரசுக்கு நிபந்தனைகளும் காலக்கெடுக்களும் விதிப்பது தமிழ் மக்கள் மறக்கமுடியாத விளையாட்டுக்கள் ஆகும்.

இலங்கைக்கு விஜயம் செய்யும் இராஜதந்திரிகள் அனைவரிடமும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் மூட்டுகின்ற கோள்களில் முதன்மையானதும் முக்கியமானதும் இந்த தமிழ் மக்களுக்கான தீர்வு என்பதேயாகும். தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரின் இந்திய விஜயம், அமெரிக்க விஜயம், தென்னாபிரிக்க விஜயம், இங்கிலாந்து விஜயம், என்று எங்கு சென்றாலும் அங்கு “எமது மக்களுக்கான தீர்வு பற்றி பேசியுள்ளோம் எமது மக்களுக்கான தீர்வு பற்றி எடுத்துச் சொன்னோம் அதை அவர்கள் உன்னிப்பாக கேட்டுக் கொண்டனர் விரைவில் அரசுக்கு அதுபற்றி அறிவுறுத்துவதாக எமக்கு வாக்களித்துள்ளனர்” என்கின்ற வார்த்தைகள் ஒவ்வொரு தமிழ் மக்களும் கேட்டு புளிச்சுப்போன வார்த்தைகள் ஆகும்.

அதைத்தொடர்ந்து அரசுக்கு நெருக்கடிகள் கூடப்போகின்றது, இனி இவர்கள் தப்பிக்க முடியாது, விரைவில் எமக்கான தீர்வு கிடைத்தேயாகும் என தமிழ்த்தேசிய ஊடகங்களின் பொழிப்புகள் சரமாரியாய் கொட்டும்.

தேர்தல்கள் வந்தால் – நமது தீர்வுக்கு காலம் கனிந்து விட்டது, நமது ஒற்றுமையை உலகுக்கு காட்ட வேண்டும், சர்வதேசம் பார்த்துக் கொண்டிருக்கின்றது, நல்லதொரு தீர்வு நெருங்கி வரும் வேளை ஒற்றுமை காப்பது தமிழ் மக்களின் கடமை என்பதையும் நம்பி மக்கள் ஏமாந்ததுதான் மிச்சம்.

மகிந்த இருக்கும் வரை 13 பற்றியாவது பேசப்பட்டது இப்போது அவர்கள் 19, 20 என்று எங்களை கைவிட்டு விட்டுப் போய்க் கொண்டே இருக்கின்றார்கள், என்று அங்கலாய்க்கும் நிலைக்கு இன்று வந்துள்ளோம்.

ஆனால் கடந்த காலங்களில் இந்த தீர்வுகள் முன்வைக்கப்படும் போதெல்லாம் அவ்வப்போது இருக்கின்ற எதிர்க்கட்சிகள் அவற்றை குழப்புவதில் போய் அது முடியும். தீர்வுத் திட்டங்களும் ஒப்பந்தங்களும் கிழித்தெறியப்படும். பண்டா– செல்வா ஒப்பந்தம் ஆனாலும் சரி சந்திரிகாவின் தீர்வு பொதியானாலும் சரி ஐக்கிய தேசியக் கட்சி அவற்றையெல்லாம் கிழித்தெறிந்த கதைகள் நாம் கடந்துவந்த நிஜங்கள்.

ஆனால் இவற்றுக்கெல்லாம் சளைக்காமல் எமது பக்கத்து அட்டைக்கத்தி வீரர்களும் இந்த தீர்வு குறித்து ஓயாது குரல் கொடுத்தே வந்திருக்கின்றார்கள். ஆனால் இப்போது மட்டும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு இந்த தீர்வு விடயத்தில் பேசா மடந்தைகளாக ஏன் பவனி வருகின்றனர்? புதிய ஜனாதிபதியின் வருகைக்கு ஓயாது உழைத்த கூட்டமைப்பினர் இன்றைய ஜனாதிபதிக்கு நிபந்தனை அற்ற ஆதரவு தெரிவித்து அவரை வெற்றியீட்டச் செய்தனர். அவரது 100 நாள் வேலைத்திட்டத்தில் தேசிய பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் வழங்க வேண்டியுள்ளதால் அதில் தமிழ் மக்களின் தீர்வு விடயத்தை இணைக்குமாறு வேண்டுவது சரியில்லை என்று பெரிய மனதுடன் ஒதுங்கிக் கொண்டனர். அதன்பின்னர் உருவாகும் தேசிய அரசாங்கம் தமிழ் மக்களுக்கான தீர்வு குறித்துப் பேசும் என்றனர்.

ஆனால் தேசிய அரசாங்கம் உருவான போது அதில் பங்கெடுக்காமல் விலகி நின்றதன் ஊடாக தமது பெருந்தன்மையை காட்டிக்கொள்வதாக நடித்தனர். அதனூடாக புதிய ஜனாதிபதிக்கு மட்டுமல்ல புதிய அரசாங்கத்துக்கும் புதிய பிரதமருக்கும் தமிழ் மக்களுக்கான தீர்வு என்னும் தலையிடியை கொடுக்காமல் நல்ல பேர் எடுத்துள்ளனர். தேசிய கொள்கை வகுப்பு நிறுவனமாக புதிய ஜனதிபதியால் உருவாக்கப்பட்ட தேசிய நிறைவேற்று சபையில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு அங்கம் வகித்தும் அதில் தமிழ் மக்களுக்கான தீர்வு பற்றி இன்னும் வாய் திறக்கவில்லை.

தமிழ் மக்களுக்கான தீர்வு ஒன்றினை உருவாக்கக் கூடிய தேசிய நிறைவேற்று சபையில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு அங்கம் வகிக்கும் இந்த சந்தர்ப்பம் போல இனிமேல் ஒரு சந்தர்ப்பம் கிடைப்பது அரிது. தமிழ் மக்களின் அல்லது சிறுபான்மை மக்களின் வாக்குகளால்தான் வென்றேன் என்னும் நன்றியை மறவாத ஒரு ஜனாதிபதியை இனி காண்பது அரிது. எதிர்க்கட்சி எது? ஆளும் கட்சி எது என்று தெரியாத தேசிய அரசாங்கம் என்று சொல்லப்படுகின்ற கூட்டரசாங்கம் ஒன்று தீர்வைப் பற்றி பேசினால் குழப்புவதற்கு எதிர்க்கட்சியே இல்லாத ஒரு அருமையான காலம் இனி கிடைப்பது அரிதிலும் அரிது. சர்வதேசத்துக்கு காட்டுவதற்காக கிழக்கு மாகாணசபை தேர்தலிலும் வடக்கு மாகாண சபை தேர்தலிலும் மக்கள் ஒற்றுமையாக வாக்களித்து ஆணையும் தந்துள்ள நிலைமை எந்நாளும் கிடைக்காது.

ஆனால் இவையனைத்தையும் வைத்துக்கொண்டு ஏன் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தமிழ் மக்களுக்கான தீர்வு பற்றி பேசுவதை நிறுத்திகொண்டுள்ளது. ஏன் தமிழ் மக்களுக்கான தீர்வுக்காக கடந்த காலங்களைப்போல காலக்கெடு எதையும் விதிக்க தயங்குகின்றது? தமிழ் மக்களுக்கான தீர்வு என்பது காலமாகி விட்டதா?

## திருமறைக் கலாமன்றம் நடாத்தும் தமிழ் விழா

திருமறைக் கலாமன்றத்தால் நடாத்தப்படும் தமிழ் விழா எதிர்வரும் 26 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரை மூன்று நாட்களுக்கு (வெள்ளி, சனி, ஞாயிறு) யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது. பகல் நிகழ்வுகளாக ஆய்வரங்குகளும் மாலை நிகழ்வுகளாக கலை நிகழ்வுகளுமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இத் தமிழ்விழாவில் மூன்று நாட்களும் காலை 8.45 மணி தொடக்கம் பி.ப 12.30 மணி வரையும் இதைத் தொடர்ந்து பி.ப.1.45 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரையும் ஆய்வரங்குகள் இல. 286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது கலையகத்திலும் கலை நிகழ்ச்சிகள் மாலை 6 மணி முதல் இல. 238, பிரதான் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கிலும் நடைபெறவுள்ளன.

நாவல்,பண்பாடு,ஊடகம்,இணையம்,சிறுகதை,விமர்சனம்,மலையக இலக்கியம்,கவிதை,நாடகம் உட்பட 24 தலைப்புக்களில் ஆறு அமர்வுகளாக ஆய்வரங்குகள் நடைபெறவுள்ளன.

### இரண்டாம் நாள் (சனிக்கிழமை) நிகழ்வுகள்

**முதலாவது அமர்வு** - சிறுகதை
**தலைமை** - திரு.ஜயாத்துரை
**ஆய்வுரைகள்** - குப்பிளான் சண்முகம் (படைப்பிலக்கிய நோக்கில் ஈழத்துச் சிறுகதைகள்), தியாகசேகரனும் (திசேரா) (ஈழத்துத் தமிழ்ச் சிறுகதை - கருத்து நிலையும் புதிய வரைபுகளும்), த.அஜந்தகுமார் (இன வரையியல் நோக்கில் தமிழ்ச் சிறுகதைகள்), இ.இராஜேஸ்கண்ணன் (ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகளின் பண்பாட்டு அடையாளமும் இருப்பியலும்).

**இரண்டாவது அமர்வு** - இலக்கிய விமர்சனம்
**தலைமை** - தெ.மதுசூதனன்
**ஆய்வுரை** - தி.செல்வமனோகரன், (ஈழத்து நவீன இலக்கிய விமர்சனமும், கலாரசனையும்), அப்துல் நஷாக் (கிழக்கிலங்கையின் விமர்சன வளர்ச்சி), சு.தவச்செல்வன் (மலையகத்தின் சமகால நவீன் இலக்கிய செல்நெறி), பொன்.பிரபாகரன் (மலையக இலக்கியத்தில் பண்பாட்டுக் கலைகள்)என்பன இடம்பெறும்.

**மாலையில் இடம்பெறும் கலைநிகழ்வுகள்** - மாலை நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் மற்றும் மன்னார் மாவட்ட சமூகத் தொடர்பு அருட்பணி மையமான “கலையருவி”யின் இயக்குநர் அருட்தந்தை தமிழ்நேசன் அடிகளார் வழங்குவார். இத்துடன் “ஊருக்கு நல்லது சொல்வேன்” எனும் தலைப்பில் க்விஞர் சோ.பத்மநாதன் வழங்கும் கவியரங்கமும் திருமறைக் கலாமன்றம் வழங்கும் குசேலர் இசை நாடகமும் இடம்பெறவுள்ளது.

[மூன்றாம் நாள் நிகழ்வுகள் பற்றிய விபரங்கள் நாளைய முரசில்]

## முத்திரை பயனாளிகளை அதிகரிக்குமாறு அச்சுவேலி மக்கள் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களுக்கான முத்திரைப் பயனாளிகளின் எண்ணிக்கையை அதிகரிக்குமாறு உயரப்புலம், அச்சுவேலி மேற்கு ஜே/287 கிராம சேவகர் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சுமார் 850 குடும்பங்களைக் கொண்டுள்ள இக் கிராம மக்கள் கல்லுடைத்தல் மற்றும் கூலித் தொழிலையே நம்பி வாழ்கின்றனர்.

இவர்களது வாழ்க்கை நிலைமைகளை கவனத்திலெடுத்து தற்போது 140 ஆகவுள்ள இந்த முத்திரைப்பயனாளிகளின் எண்ணிக்கையை வாழ்வெழுச்சித் திணைக்களம் அதிகரிக்க வேண்டுமென அப்பகுதி தந்தை செல்வா சனசமூக நிலையத்தின் பிரநிதியொருவர் குறிப்பிட்டார்.

யுத்தத்திற்குப் பிறகு உட்கட்டமைப்பு வசதிகள் எவையும் ஏற்படுத்தப்படாத நிலையில் அடிப்படை வசதிகள் இல்லாது எமது மக்கள் நெருக்கடிகளின் மத்தியிலேயே அன்றாட வாழ்க்கையை எதிர்கொள்வதாக அவர் குறிப்பிட்டார்.

இவர்களின் நிலையை கவனத்தில் கொண்டு இங்குள்ள முத்திரைப் பயனாளிகளின் எண்ணிக்கையை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அதிகரித்து வழங்க உதவ வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார். (168)

## 125 ஆவது ஆண்டு நிறைவையொட்டி கல்லூரி மாணவிகளால் நடைபவனி



வவுனியா இறம்பைக் குளம் மகளிர் கல்லூரியின் 125 ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடைபவனி பாடசாலையில் இருந்து அதிபர் அருட்சகோதரி திரேசம்மா சில்வா தலைமையில் அண்மையில் இடம் பெற்றது. நடைபவனி நிக்ழ்வை வவுனியா தெற்கு வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி செ.அன்ரன் சோமராஜா ஆரம்பித்து வைத்தார்.பாடசாலையிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட இந் நடை பவனி வவுனியா மணிக்கூட்டுக் கோபுர சந்தி ஊடாக வவுனியா பிரதான வீதியூடாக பாடசாலையை வந்தடைந்தது இந்நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் என பலர் கலந்து சிறப்பித்திருந்தனர்.

சில பேனாக்கள் சிந்திக்கச் சொல்கின்றன.
சிலவை சீரழிக்கச் செய்கின்றன. -அன்புவுளியூர்க் கவிராயர்-

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## ஊடகங்களுக்கான பொறுப்புணர்வு!

இன்றைய தினத்தில் உலக மாந்தர் அனைவரினதும் வாழ்வைப் பயமுறுத்திக் கொண்டிருப்பது எது என்று கேட்டால், அணுவாயுத உற்பத்தி, இன – மத – தேச நம்பிக்கைகளுக்காக ஒருவரையொருவர் கொன்றுவிடத் துடிக்கும் மனோபாவம், மாசடையும் சுற்றுச் சூழல், பூகோள வெப்பமாதல் என்று பல்வேறு பதில்களையும் சொல்வோம்.

ஆனால், இவற்றையும்விட இன்னொரு பயங்கரம்தான் மிகவும் பயப்பட வேண்டியதாக இருக்கிறது என்கிறார்கள் இன்றைய மானிடவியல் அறிஞர்கள். இத்தருணத்தில் நம்மைப் பயமுறுத்திக் கொண்டிருப்பது over communication என்பதுதான் என்கிறார்கள். அதாவது, உலகின் ஒரு புள்ளியில் இருந்துகொண்டு உலகின் மற்றெல்லாப் பகுதிகளிலும் என்ன நடந்துகொண்டிருக்கிறது என்று அறிய விரும்புகிற குணம்தான்.

நாங்கள் எல்லோருமே தொடர்புசாதனங்களின் வலையில் விரும்பிச் சென்று வீழ்பவர்களாக இருக்கிறோம். அவை இல்லாமல், எங்கு என்ன நடந்துகொண்டிருக்கிறது என்பதை அறிந்து கொள்ளாமல் ஒரு நாளைக் கூட கழிக்க முடியாத நிலைமை. ஆனால் இந்த தொடர்பூடகங்கள் நம்மை என்ன செய்கின்றன?

பொலிஸ், இராணுவம், சட்டம், சிறைச்சாலை போன்றவற்றை விட அதிகமான ஒடுக்குதலையும் கெடுதியையும் இந்தத் தொடர்பு சாதனங்களே மறைமுகமாகச் செய்கின்றன என்கிறார்கள் அறிஞர்கள். மதம், கல்வி, குடும்பம், தொடர்புச் சாதனங்கள் போன்ற மறைமுக ஒடுக்குதல் கருவிகளே மனிதகுலத்திற்குப் பெருந்தீங்கை விளைவிக்கவும் பயன்பட்டுக் கொண்டிருப்பதாகச் சொல்கிறார்கள்.

இவற்றில் மக்கள் தங்களைத் தாங்களே சீரழித்துக் கொள்ளும் வகையிலான கருத்துக்களை விழுங்க வைத்துக் கெடுதி செய்யும் சாத்தியங்களை அதிகம் கொண்டிருப்பவை தொடர்புச் சாதனங்களே.

குடும்பம், கல்வி, மதம் போன்றவற்றிலிருந்து தம்மை விலக்கித் துண்டித்துக் கொள்ள முடிகிறவர்களும் கூட தொடர்புச் சாதனங்களிடமிருந்து தம்மைத் துண்டித்துக்கொள்ள முடிவதில்லை. செய்திகளுக்கும், பொழுதுபோக்கு கேளிக்கைக்குமென்பதாக முன்வைக்கப்படுகிற இச்சாதனங்கள் மற்ற எவற்றையும் விட வலிமை வாய்ந்தனவாய் நம்மை ஆக்கிரமித்துக் கொள்கின்றன.

என்ன சாப்பிடுவது, எதை உடுத்துவது, எந்த சோப், பற்பசை, சருமப்பசைகளைப் பயன்படுத்துவது, வாங்க வேண்டிய மின் சாதனங்கள் என்று அவையே நமக்குச் சொல்லித் தருகின்றன.

தினந்தோறும் கொலை, கடத்தல், கொள்ளை, வல்லுறவு என்று பல்வேறு விதமாகத் தகவல்கள் நமக்குள் சேகரமாகின்றன. நம் மனங்களை வன்முறைக் கிட்டங்கிகளாகவும், நுகர்வுப் பைத்தியமாகவும், ஆதிக்கப் பிரிவினரின் கருத்தியலுக்குத் தாளங்களாகவும் ஆக்கிவிடுகின்றன.

அமெரிக்காவின் ஈராக் மீதான யுத்தம், அவர்களது குண்டு வீச்சும் படைநகர்வும் தொடங்குவதற்கு முன்பே பத்திரிகைகளிலும் தொலைக்காட்சிப் பெட்டிகளிலும் தொடங்கப்பட்டதை சுட்டிக் காட்டுகிறார்கள்.

வியட்நாம் யுத்தத்தின் போது போருக்கெதிராக அமெரிக்காவில் மக்கள் திரண்டதைப் போல ஈராக் யுத்தத்தின் போது நடக்கவில்லை. முன்பு மக்களைத் திரட்டி வீதிக்கு இறக்கியதில் பத்திரிகைகளுக்குப் பெரும் பங்கிருந்ததைத் தெரிந்துகொண்டிருந்த அமெரிக்கா, இம்முறை ஊடகங்களில் கவனமெடுத்துக் கொண்டது.

ஈராக் யுத்தத்தை நடத்தி முடித்த அமெரிக்கத் தளபதிகளில் ஒருவர் சொன்னார்: "வியட்நாம் யுத்த்த்திலிருந்து நாம் கற்றுக் கொண்ட பாடம் இதுதான். யுத்தத்தில் வெற்றி தோல்வியை நிர்ணயிப்பவை துப்பாக்கிகளும் வெடிகுண்டுகளும் மட்டுமில்லை, பத்திரிகைகளும் தொலைக்காட்சிகளும் கூடத்தான்..."

அரசியல்வாதிகளை விடவும், மதத் தலைவர்களை விடவும் அதிக பொறுப்புணர்வு இன்று ஊடகங்களைக் கையாள்பவர்களுக்கே தேவைப்படுகிறது.

- ஆசிரியர்

# எனது கைகள் சுத்தமானவை மோசடிகளில் ஈடுபடவில்லை

## பவித்ரா உறுதி

(கொழும்பு)

நான் இலஞ்சம் பெற்றதாகவும், அரசாங்கப் பணத்தை மோசடி செய்ததாகவும் குற்றம் சுமத்தினார்கள், ஆனால் எனது கைகள சுத்தமானவை, நான் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் இலஞ்ச ஊழல் மோசடிகளில் ஈடுபடவில்லை என முன்னாள் அமைச்சர் பவித்ரா வன்னியாராய்ச்சி தெரிவித்துள்ளார்.

கலவான பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் இன்று நெருக்கடியான அரசியல் நிலை ஒன்று உருவாகியுள்ளது. அபிவிருத்திகள் இடைநிறுத்தப்பட்டுள்ளது. சிறுபான்மை கட்சிகள் அரசாங்கத்தை ஆட்சி செய்கின்றது.

எனக்கு நல்லாட்சி அரசாங்கம் அமைச்சர் பதவியை பெற்றுக்கொள்ளுமாறு கோரியது. எனது கட்சியின் உத்தியோக பூர்வ தீர்மானத்திற்கமைய நானும் பெற்றுக்கொண்டேன்.

மக்கள் நினைத்தார்கள் நான் ஐக்கிய தேசியக் கட்சிக்கு சென்று விட்டதாக, நான் அப்படி கட்சி மாறவில்லை. ஒரு போதும் நான் மாறவும் மாட்டேன்.

இறுதியில் மக்களின் கொள்கைக்கு மதிப்பளித்து எனது பதவியை இராஜினாமா செய்து கொண்டேன். யார் என்ன சொனனாலும் மகிந்த ராஜபக்ஷவை சுற்றி மக்கள் கூட்டம் நிறைந்துள்ளது.

ஓய்வு பெற சென்ற மகிந்தவை மீண்டும் அரசியலுக்கு வருமாறு அழைப்பது இந்த 58 இலட்சம் மக்களே என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## வேகமான பருவக்காற்றால் மன்னாரில் கடற்றொழில் பாதிப்பு

மன்னார் மாவட்டத்தில் தற்போது கடற்றொழில் நடவடிக்கைகள் பாதிப்படைந்து வருவதாக மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர். கரையோரப பகுதிகளில் கடந்த மே மாதம் முதல் பருவக் காற்று மிக வேகமாக வீசி வருகின்றமையினால மீனவர்களின் கடற்தொழில் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால் நாளாந்தம் மன்னார் மாவட்ட மீனவர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங் கொடுத்து வருகின்றனர். குறித்த பருவக்காற்றை மீனவர்கள் 'சோளக்காற்று' எனக் கூறுகின்றனர். குறித்த பருவக் காற்று மே மாதம் முதல் ஒக்ரோபர் மாதம் வரையிலான சுமார் 6 மாதங்கள் வரை கடல்சார் கரையோரப் பிரதேசங்களில் வீசும். இதனால் குறித்த 6 மாத காலங்களிலும் மீனவர்கள் கடற்தொழில் நடவடிக்கைகள் பாதிப்படையும் இதனால் ஆழ்கடலுக்குச் செல்வதை குறைத்து கரவலை தொழிலை மீனவர்கள் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## விகாரைகளுக்கிடையில் பிளவுகளை ஏற்படுத்துகிறார் மகிந்த

### முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் குற்றச்சாட்டு

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இன்று விகாரைகளுக்கு அரசியலை கொண்டு சென்று விகாரைகளுக்கிடையில் பிளவுகளை ஏற்படுத்துவதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

கிராமத்தில் அரசியலை ஆரம்பித்த மகிந்த ராஜபக்ஷ அமைச்சராக நியமிக்கப்பட்டார். பின்னர் எதிர்க்கட்சி தலைவராகினார், தொடர்ந்து பிரதமரானார் அதனை தொடர்ந்து ஜனாதிபதியாகினார்.

முன்னாள் ஜனாதிபதி நிறைவேற்று அதிகாரங்களை முடிந்தளவு பயன்படுத்தினார். இன்று மகிந்த ராஜபக்ஷ நாடாளுமன்ற உறுப்பனராவதற்கு கனவு காணுவதாக நாடாளுமன்ற உறுப்பினர் சாகல ரத்நாயக்க மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# மக்களின் நிதியை அபிவிருத்திக்கு பயன்படுத்துவதே அரசின் நோக்கம்

## அமைச்சர் கயந்த கருணாதிலக்க உறுதி

மக்களின் நிதியை, அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துவதே தற்போதைய அரசாங்கத்தின் நோக்கமென அமைச்சர் கயந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

பத்தேகமவில் சிறுதேயிலை தோட்ட உரிமையாளர்களுக்கான மானியம் வழங்குவதற்கான நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

நல்லாட்சியின் கீழ், துஷ்பிரயோகம், மோசடி, அரச பணத்தை கொள்ளையிடல் என்பவற்றை நிறுத்துவதற்கே, மக்கள் ஆணையை வழங்கினார்கள். அவ்வாறு நடவடிக்கைகள் இடமபெறும் பட்சத்தில் அவற்றை கண்ணை மூடி, பார்த்துக்கொண்டு இருக்க முடியாது மக்களின் ஆணைக்கமைய அவர்களின் பணத்தை உரிய முறையில் அபிவிருத்தித் திட்டங்களுக்கு பயன்படுத்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றார்.

## இலங்கை - அமெரிக்க உறவு; வொஷிங்டனில் நாளை கலந்துரையாடல்

இலங்கை - அமெரிக்க உறவு முன்னேற்றம் குறித்த புத்திஜீவிகளின் கலந்துரையாடல் ஒன்று அமெரிக்காவில் நடைபெறவுள்ளது.

வொஷிங்டனில் நாளை இந்த கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. இலங்கையின் அமெரிக்க தூதுவர் பிரசாத் காரியவசம் தலைமையில் இடம்பெறும் இந்தக் கலந்துரையாடலை, தெற்காசிய நிலையம் மற்றும் அட்லாந்தின் சபையின் பதில் தலைவர் கலாநிதி பாரத் கோபால சுவாமி முன்னெடுக்கவுள்ளார்.

இலங்கையின் தேசிய பொருளாதாரம், நல்லிணக்கம் உட்பட்ட பல விடயங்கள் இதன் போது பேசப்படவுள்ளன. நிகழ்வின் போது உள்ளக இடப்பெயர்வு தொடர்பாக பல்வேறு நிபுணர்கள் பேசவுள்ளனர்.

## வீடமைப்பு தின தேசிய நிகழ்வு இன்று

(கொழும்பு)

தேசிய வீடமைப்பு தின தேசிய நிகழ்வு இன்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சர் சஜித் பிரேமதாஸவின் பங்களிப்பில் திஸ்ஸமாராம தெம்பரவெல அரங்கில் நடைபெறவுள்ளது.

ஒன்றிணைந்த வீடமைப்பு அபிவிருத்தி என்ற தொனிப்பொருளில் இம்முறை தேசிய வீடமைப்பு தின நிகழ்வு நடைபெறவுள்ளது.

வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சர் சஜித் பிரேமதாஸவின் அழைப்பின் பேரிலேயே பிரதம அதிதியாக பிரதமர் இந்நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளார். தேசிய வீடமைப்பு தினத்தன்று தேசிய வீடமைப்பு வாரத்தை பிரகடனப்படுத்தவும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. முதலாவது தேசிய வீடமைப்பு தின கொடி இன்று காலை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு அணிவிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தகுதியானவர்களை தெரிவு செய்ய வேண்டும்

(கொழும்பு)

தேர்தலின் போது தகுதியானவர்களைத் தெரிவு செய்ய வேண்டியதன் அவசியம் தொடரபில் நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக்க பத்திரண வலியுறுத்தியுள்ளார்.


மாத்தறை – உயன்வத்த பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத தெரிவித்துள்ளார்.

இதன்போது, முட்டாள்களை நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்ய வேண்டாம் என அவர் மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன், அரசாங்கத்தில் இருநதாலும், எதிர்க்கட்சியில் இருந்தாலும் அவர்களிடம் மக்களுக்கான வேலைத் திட்டம் உள்ளதா என கேட்குமாறும் தகுதியற்றவர்களை அடித்து விரட்டுமாறும் அவர் மக்களிடம் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

மகிந்தவுடைய ஆட்சிக்காலத்தில் தமக்கு கேட்டவையெல்லாம் கிடைக்கவில்லை. பிரதம செயலாளரை மாற்றவில்லை. ஆளுநரை மாற்றவில்லை என வசை மாரி பொழிந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தற்சமயம் தமக்கு பிடித்தமான ஆளுநரையும் தமக்கு ஏற்ற பிரதம செயலாளரையும் வடமாகாணசபைக்கு நியமித்து ஆட்சி செய்து வருகின்றனர்.

சுமார் ஆறுமாதங்கள் மத்தியிலும் மாகாணங்களிலும் ஆட்சி செய்து வருகின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரிடையே யார் பெரிது என்ற போட்டி ஆரம்பமாகிவிட்டதை வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஜனாதிபதி மைத்திரியை சந்தித்த போது வடமாகாணசபைக்கு தெரியாமல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நிதிஅளித்தமை




தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலருடைய தயவிலும் அத்துடன் மாகாண சபை உறுப்பினர்கள் சிலருடைய அழுத்தத்திலும் பொது நிர்வாக சுற்றறிக்கை, இலங்கை நிர்வாக சேவை பிரமாண குறிப்பு இரண்டையும் மீறி வடமாகாண சபையில் மட்டுமே செய்யப்பட்ட இந்த நூறுவீத அரசியல் நியமனங்கள் எதிர்காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பெறப் போகும் தபால் மூல வாக்குகள் குறைவடைவதற்கு வாய்ப்பாகின்றது.

இதேபோன்று பொது நிர்வாக சுற்றறிக்கை, இலங்கை நிர்வாக சேவை பிரமாண குறிப்பு இரண்டையும் மீறி இலங்கை திட்டமிடல் சேவையைச் சேர்ந்தவர்களுக்கு திணைக்களத் தலைவர்களாக முடிசூட்டி

# மழை விட்டும் தூவானம் நின்று விடவில்லை!

**நெல்சிப் திட்டத்தில் பாரியளவு ஊழல் இருப்பதாக கூறப்பட்டு பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. நெல்சிப் திட்டம் வடமாகாண சபை உள்ளூராட்சி அமைச்சின் கீழ் வருகின்ற உள்ளூராட்சி திணைக்களத்தின் மூலம் உள்ளூராட்சி சபைகளினுடைய வீதி அபிவிருத்தி செயற்றிட்டத்திற்கு பயன்படுத்தப்பட்டது. ஆனால் பெருமளவு நிதி பயன்படுத்தப்படாமல் மோசடி செய்யப்பட்டதாக வடமாகாண சபை உறுப்பினர்கள் பலர் போர்க்கொடி உயர்த்தினர். சாதாரண ஒரு சிறிய விடயத்திற்கே ஒரு பிரேரணையை நிறைவேற்றும் வடமாகாண சபை இந்த பாரிய நிதிமோசடி தொடர்பில் எந்தவொரு பிரேரணையும் நிறைவேற்றாதது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மீது சந்தேகத்தினை ஏற்படுத்தியுள்ளது.**

## ■ வீரவவுனியன்

தொடர்பில் பிரஸ்தாபித்தது கோடிட்டு காட்டுகிறது.

மக்கள் பணிசெய்வதில் இவர்களிடையே போட்டியில்லை. வடமாகாண நாடாளுமன்ற உறுப்பினர்களும், வடமாகாணசபை உறுப்பினர்களும் வடமாகாண தமிழ் பேசும் மக்களினால் மக்கள் பணிசெய்வதற்காக தமது பொன்னான வாக்குகளை அளித்து தெரிவு செய்யப்பட்டவர்கள் என்பதனை போட்டியாளர்கள் மறந்துவிட்டார்கள் போலும்.

மகிந்த அரசாங்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கோ அல்லது மாகாண சபை உறுப்பினர்களுக்கோ ஒன்றும் தரவில்லை என்று ஒப்பாரி வைத்தவர்கள் மைத்திரி அரசாங்கம் எனக்குத் தான் தரவேண்டும். உனக்குத் தரக்கூடாது என்ற கோதாவில் நிற்பது முழுத் தமிழ் மக்களையும் அதிர்ச்சியடைய வைத்துள்ளது.

மகிந்த அரசாங்கத்துடன் நெருக்கமாக இருந்த தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் கோடிக்கணக்கான ரூபாய்களை தாங்கள் சார்ந்த பிரதேச அபிவிருத்திக்காக செலவளித்ததனை மக்கள் இன்றும் நினைவில் வைத்திருக்கிறார்கள்.

நாடாளுமன்ற தேர்தலொன்று வருகின்ற நிலையில் பல சவால்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு உள்ளேயும் வெளியேயும் அந்தக் கட்சியினர் எதிர்நோக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பதிவு செய்யப்படாமை, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், மாகாணசபை உறுப்பினர்களுமிடையிலான அதிகார போட்டி, குறிப்பாக வடமாகாண சபையில் காணப்படுகின்ற குறைபாடுகள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலே சட்டத்தரணிகளுடைய மேலாதிக்கம், வெளிப்படையாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களை விமர்ச்சிக்கின்ற தன்மை ஆகியன இந்தக் கட்சியினுடைய எதிர்கால செயற்பாடுகளை ஒரு மந்த நிலைக்கு தள்ளியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு எக்காலத்திலும் சவால் விடுகின்ற அளவிற்கு தனித்துவமாக காணப்படுகின்ற ஜனநாயக மற்றும் முற்போக்கு சக்திகள், மைத்திரி அரசுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு ஏற்பட்டிருக்கின்ற முறுகல் நிலை, புலம்பெயர் தமிழர்களுடைய தற்கால நிலைப்பாடு ஆகியன தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைத்துவத்திற்கு அவ்வளவு மகிழ்ச்சிதரக் கூடியதாக இல்லை.

வடமாகாண சபையை பொறுத்தளவில் முன்னைய ஆளுநர் மற்றும் பிரதம செயலாளர் மாற்றப்பட்டிருக்கின்றார்கள். அமைச்சு செயலாளர்கள் உள்ளக ரீதியாக மாற்றப்பட்டிருக்கின்றார்கள், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளர் மாற்றப்பட்டிருக்கின்றார்.

மேற்கொண்ட மாற்றங்கள் ஒரு பெயரளவிலான மாற்றங்களாக மட்டுமே இருப்பதனை காணக்கூடியதாகவுள்ளது.

வடமாகாண சபை தேர்தல் நடைபெறுவதற்கு முன்னர் இருந்த காலத்தில் தொடங்கப்பட்ட நெல்சிப் திட்டத்தில் பாரியளவு ஊழல் இருப்பதாக கூறப்பட்டு பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

நெல்சிப் திட்டம் வடமாகாண சபை உள்ளூராட்சி அமைச்சின் கீழ் வருகின்ற உள்ளூராட்சி திணைக்களத்தின் மூலம் உள்ளூராட்சி சபைகளினுடைய வீதி அபிவிருத்தி செயற்திட்டத்திற்கு பயன்படுத்தப்பட்டது.

ஆனால் பெருமளவு நிதி பயன்படுத்தப்படாமல் மோசடி செய்யப்பட்டதாக வடமாகாண சபை உறுப்பினர்கள் பலர் போர்க்கொடி உயர்த்தினர்.

சாதாரண ஒரு சிறிய விடயத்திற்கே ஒரு பிரேரணையை நிறைவேற்றும் வடமாகாண சபை இந்த பாரிய நிதிமோசடி தொடர்பில் எந்தவொரு பிரேரணையும் நிறைவேற்றாதது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மீது சந்தேகத்தினை ஏற்படுத்தியுள்ளது.

அதிரடியாக நெல்சிப் திட்டத்திற்கு பொறுப்பான உள்ளூராட்சி ஆணையாளர் பதவி உயர்வு வழங்கப்பட்டு பேரவைச் செயலாளராக நியமிக்கப்பட்டார்.

மகிந்த ஆட்சியை ஊழல் நிறைந்த ஆட்சி என்று கூறிக் கொள்ளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமது ஆட்சி நடைபெறும் வடமாகாண சபையில் நெல்சிப் திட்ட ஊழலை கண்டும் காணாமல் இருப்பது ஏன்? என்ற கேள்வி தமிழ் மக்கள் மத்தியில் எழுந்துள்ளதை காணக்கூடியதாகவுள்ளது.

வடமாகாண சபையின் கீழ் வருகின்ற அமைச்சுக்கள் யாவற்றினதும், பொதுச் சேவை ஆணைக்குழுவினதும், பிரதம செயலகம், ஆளுநர் செயலகத்தினுடையதும் செயலாளர்கள், பிரதிப் பிரதம செயலாளர்கள், பேரவைச் செயலாளர் ஆகியோர் இலங்கை நிர்வாக சேவை விசேட ஆளணியைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டுமென்பது பொது நிர்வாக சுற்றறிக்கையிலும் இலங்கை நிர்வாக சேவை பிரமாண குறிப்பிலும் தெளிவாக கூறப்பட்டுள்ளது,

ஆனால், பிரதம செயலாளர், ஆளுநர் செயலாளர், பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளர், உள்ளூராட்சி அமைச்சு செயலாளர், சுகாதார அமைச்சு செயலாளர் ஆகியோர் மட்டுமே இலங்கை நிர்வாக சேவை விசேட ஆளணியைச் சேர்ந்தவர்களாக உள்ளனர்.

இதில் என்ன வேடிக்கையென்றால் விவசாய அமைச்சு செயலாளரும், பேரவை செயலாளரும் இலங்கை நிர்வாக சேவை தரம் ஒன்றிற்கு அண்மையில் நியமிக்கப்பட்ட சேவை மூப்பு குறைந்த உத்தியோகத்தர்கள். அழகுபார்க்கப்படுகின்றது.

உண்மையில் திணைக்களத் தலைவர்களாக கட்டாயம் இலங்கை நிர்வாக சேவையைச் சேர்ந்தவர்கள் இருக்க வேண்டுமென்பதே விதி. கடந்த ஆளுநர் மற்றும் பிரதம செயலாளர் காலத்தில் இடம்பெற்ற பல விடயங்கள் சரி பிழைக்கு அப்பால் நியாயப்படுத்தக் கூடியதாக இருந்தாலும் தற்போது தங்களுடைய ஆளுநர் தங்களுடைய பிரதம செயலாளர் என்று கூறிக் கொண்டு பிழையைச் சரியெனவும், சரியை பிழையெனவும் காட்டி அதிகாரிகளை வேண்டுமென்றால் ஏமாற்றலாம் ஆனால் மக்களை ஏமாற்ற முடியாது.

தவறுகள் திருத்தப்பட வேண்டும். ஒரு தவறை தொடர்ந்து செய்வதனால் தவறு சரியாகாது. பிழையானது சரிக்கு நிகராகாது. சரியை பிழையென்று காட்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு கடந்த காலத்தில் சரியென நினைத்து புள்ளடி (X) போட்ட மக்கள் எதிர்காலத்தில் பிழையை நினைத்து ஜனநாயக மற்றும் முற்போக்கு சக்திகளுக்கு புள்ளடி (X) போடவும் தயங்க மாட்டார்கள் என்பதனையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மனதில் நிறுத்திக்கொள்ள வேண்டும்.

**சுமார் ஆறுமாதங்கள் மத்தியிலும் மாகாணங்களிலும் ஆட்சி செய்து வருகின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரிடையே யார் பெரிது என்ற போட்டி ஆரம்பமாகிவிட்டதை வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஜனாதிபதி மைத்திரியை சந்தித்த போது வடமாகாணசபைக்கு தெரியாமல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நிதிஅளித்தமை தொடர்பில் பிரஸ்தாபித்தது கோடிட்டு காட்டுகிறது. மக்கள் பணிசெய்வதில் இவர்களிடையே போட்டியில்லை. காசு வாங்குவது என்று வந்துவிட்டால்தான் போட்டியும் பொச்சரிப்புகளும்.**

# மகிந்த தனிக்கட்சியில் போட்டியிட்டால் 70 ஆசனங்கள் கிடைப்பது உறுதி

## தயான் ஜயதிலக நம்பிக்கை



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரசியலுக்கு மீண்டும் வருவார், நிச்சயமாக பிரதமர் வேட்பாளராகவும் களமிறங்குவார். தேர்தலில் தனியாக அவர் களமிறங்கினால் 70 வரையான ஆசனங்கள் கிடைப்பது உறுதி என ஐக்கிய நாடுகள் சபைக்கான முன்னாள் வதிவிடப் பிரதிநிதி கலாநிதி தயான் ஜயதிலக தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் தொடர்ந்தும் இணைந்திருந்து அரசியல் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் எனவும். பிரதமர் வேட்பாளராக களமிறக்கப்பட வேண்டும் எனவும் கோரிக்கைகள் வெகுவாக எழுந்துள்ளன. இருப்பினும் குறித்த ஒரு தரப்பினர் அதனை தொடர்ச்சியாக எதிர்த்து வருகின்றனர்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு தெரிவித்தும் அரசியல் பிரவேசத்தை வலியுறுத்தியும் நுகேகொட, இரத்தினபுரி, மாத்தறை உள்ளிட்ட ஏனைய இடங்களில் முன்னெடுக்கப்பட்ட பொதுக்கூட்டங்களுக்கு வருகை தந்திருந்த மக்கள் தொகை அவரின் செல்வாக்கை எடுத்துக் காட்டுகின்றது.


அதன் அடிப்படையில் அவர் தேர்தல் ஒன்றில் தனியாக களமிறங்கும் நிலைக்கு தள்ளப்பட்டால் 70 வரையான ஆசனங்களை பெற்றுக்கொள்ளக்கூடிய நிலைமை காணப்படுகின்றது. அவ்வாறு இருக்கையில் அவருடைய மக்கள் செல்வாக்கை உணர்ந்து சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் இணைந்து பயணிப்பதா இல்லை மறுப்பதா என உறுதியான தீர்மானத்தை எடுக்கவேண்டும்.

சுதந்திரக் கட்சியின் அனுமதி மறுக்கப்பட்டால் பிறிதொரு அரசியல் கட்சியில் அவர் அரசியல் பிரவேசத்தை பெறும் நிலைமை தற்போது காணப்படுகின்றது. அதேநேரம் அவர் பிரதமர் வேட்பாளராகவே போட்டியிடுவதற்கான சாத்தியங்களே அதிகமாக உள்ளன்.

மேலும் கடந்த காலங்களில் தமிழர் அரசியலாக இருக்கலாம், முஸ்லிம் அரசியலாக இருக்கலாம் இல்லையேல் பெரும்பான்மை மக்களை அடிப்படையாகக் கொண்ட சிங்கள தேசிய அரசியலாக இருக்கலாம் இவற்றில் பிளவுகள் ஏற்பட்டு புதிய கடசிகள் ஆரம்பித்த வரலாறுகள் காணப்படுகின்றன.

குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து பிரிந்து சென்றே பண்டாரநாயக்க சிறிலங்கா சுதந்திரக் கட்சியை ஆரம்பித்தார் என்பதையும் நினைவுபடுத்த விரும்புகிறேன் என்றார்.

# ஜப்பானுடன் பரஸ்பர உறவு மங்களவின் பயணம் வெற்றி



(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தனது ஜப்பானுக்கான விஜயத்தை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஜப்பான் வெளிவிவகார அமைச்சரின் அழைப்பின் பேரில் அவர் அந்த நாட்டுக்கு விஜயம் செய்திருந்தார்.

புதிய அரசாங்கம் அமைக்கப்பட்ட பின்னர் இலங்கை அமைச்சர் ஒருவர் முதன்முறையாக ஜப்பானுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த விஜயத்தின் போது இரு நாடுகளுக்கும் இடையிலான பரஸ்பர நன்மைகள் மற்றும் நெருக்கமான உறவுகள் குறித்து அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

# பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒருகோடி; அரசின் வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை



(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு புதிய அரசாங்கம் அளித்த வாக்குறுதி இன்னும் நிறைவேற்றப்படவில்லை என ஹொரணை மாவட்ட சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் விதுர விக்ரமநாயக்க தெரிவித்துள்ளார்.

புதிய அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்தது.

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டை 50 இலட்சத்திலிருந்து ஒரு கோடி ரூபாவாக உயர்த்துவதாக வாக்குறுதி அளிக்கப்பட்டது. எனினும் யூலை மாதம் ஆரம்பமாகவுள்ள நிலையிலும் நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

எமது செயற்றிட்டங்கள் பெறறுக்கொள்ளப்பட்ட போதிலும் அதற்கான நிதி உதவிகள் வழங்கப்படவில்லை.

ஜனாதிபதியும், பிரதமரும், நிதி அமைச்சரும் இது குறித்து கவனம் செலுத்தி உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஊர்களுக்கும் கிராமங்களுக்கும் சேவையாற்றி கௌரவத்தை பாதுகாத்துக்கொள்ள நிதி ஒதுக்கீடு அவசியமானது என ஹொரணையில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் தெரிவித்துள்ளார்.

# மைத்திரி தலைமையில் பொதுத்தேர்தலில் போட்டி

## மேர்வின் சில்வா தெரிவிப்பு



(கொழும்பு)

தான் எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் களனித் தொகுதி ஊடாக போட்டியிடவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

களனி விகாரையில் இடம்பெற்ற மதவழிபாடுகளில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகவியலாளர்களை சந்தித்து கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

நான் பெலியத்தை பிரதேசத்தைச் சேர்ந்த பௌத்த சிங்களவன் எங்கள் ஊர்க்காரர்களுக்கு பயம் என்றால் என்ன என்று தெரியாது.

பயம் எந்த இடத்தில் இருக்கும் என்பதனை எனக்கும் தெரிவியுங்கள்.

கொழும்பு பிரதேச பக்கம் பயம் என்பது காணப்படுகின்றதா? களனி பிரதேசத்தில் என்றால் பயம் என்ற ஒன்று இல்லை. பயம் என்றால் என்ன என்பதனை அறியாத நான் தேர்தல் ஒன்றுக்கு பயப்படப்போவதில்லை.

நான் எப்போதும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்காரன், எதிர்வரும பொதுத் தேர்தலில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சுதந்திரக் கட்சியில் போட்டியிடுவேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஒரு இலட்சம் பேருக்கு காணி உறுதிப்பத்திரங்கள்

(கொழும்பு)

காணி உறுதியற்ற சுமார் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்டோருக்கு கடந்த காலத்திற்குள் காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளதாக காணி அமைச்சு தெரிவித்துள்ளது.

23 மாவட்டங்களிலுள்ளவர்களுக்கு வெவ்வேறு காணி உறுதிப்பத்திரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் எம்.கே. டி.எஸ். குணவர்தன குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதியின் ஆலோசனைகளுக்கு அமைய இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மாகாண அமைச்சு மற்றும் பிரதேச செயலகங்களினூடாக பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களுக்கமைய காணி உறுதிப் பத்திரங்கள் தொடர்ந்தும் விநியோகிக்கப்படுகின்றது.

கடந்த அரசாங்கத்தினூடாக பணம்படைத்தவர்கள், ஹோட்டல் உரிமையாளர்கள் மற்றும் தங்களின் குடும்ப உறவுகளுக்கும் காணி உறுதிப் பத்திரங்களை வழங்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது, அப்பாவி மக்களுக்கு காணி உறுதிப் பத்திரங்கள் வழங்கப்படவில்லை எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# மைத்திரி – மகிந்த இணைவை சீர்குலைக்கிறார் ராஜித

## கெஹலிய குற்றச்சாட்டு

ஜனாதிபதி மைத்திரியையும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷவையும் ஒன்றிணைக்கும் முயற்சிகள் சாதகமான நிலையில் சென்று கொண்டிருக்கும் நிலையில் அதனை சீர்குலைக்கும் வகையில் பொய்யான பரப்புரையை மேற்கொள்கிறார் அமைச்சர் ராஜித இவ்வாறு முன்னாள் ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல குற்றம் சுமத்தியுள்ளார்.

அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான ராஜித சேனாரட்ன, சுதந்திரக் கட்சியின் கூட்டம் தொடர்பில் பொய்யான தகவலை வெளியிட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் வேட்பு மனு வழங்கப்படாது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியதாக ராஜித தெரிவித்திருந்தார். எனினும், இந்தக் கருத்து போலியானதாகும்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவ்வாறான எவ்வித கருத்துக்களையும் வெளியிடவில்லை. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையும், முன்னாள் ஜனாதிபதியையும் இணைக்கும் ம்யற்சிகள் சாதகமான நிலையில் காணப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஜனாதிபதி ஒரு சாதகமான கருத்து தெரிவிக்கவில்லை என்பதனால் ராஜித தனது கருத்துக்கள் மூலம் இரண்டு தலைவர்களுக்குமிடையில் ஒற்றுமை ஏற்பட வாய்ப்பே இல்லை என்ற உணர்வை ஏற்படுத்த முயற்சிப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# எரிபொருள் விலை குறைப்பினால் கூட்டுத்தாபனத்திற்கு பாரிய நஷ்டம்

## நாடாளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார

எரிபொருள் விலைக் குறைப்பினால் ஏற்பட்டுள்ள நஷ்டத்தின் சுமையைத் தாங்கிக் கொள்ள முடியாத நிலையில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் காணப்படுவதாக எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

உலக சந்தையின் எரிபொருள் விலைச் சூத்திரத்தின்படி எரிபொருள் விலையைக் கொண்டு வந்து அதன் விலை அதிகரிப்பை மேற்கொள்வதற்கு அரசாங்கம் தற்பொழுது தீர்மானித்துள்ளது, தேர்தல் முடியும் வரையில் எரிபொருள் விலையேற்றத்தைத் தாமதப்படுத்தி வைத்துள்ளது.

தேர்தல் குண்டாகவே அரசாங்கம் இதுவரை எரிபொருள் விலையைக் குறைத்துக் கொடுத்துக் கொண்டிருக்கின்றது, இதனால், கூட்டுத்தாபனம் நாளுக்கு நாள் நஷ்டத்துக்கு முகம்கொடுத்து வருவதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

# யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின்

# நூல்கள் எண்ணிம நூலகத்தினூடாக வெளியீடு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் சமுதாய மற் றும் குடும்ப மருத்துவத்துறையின் பெருமளவு வெளியீடுகள் எண்ணிம நூலகத்தினூடாக வெளியிடப்பட்டன.

நூலக நிறுவனம் கடந்த பதினொரு ஆண்டுகளாக இலங்கையின் தமிழ்பேசும் சமூகங்களின் மரபுரிமை செல்வங்களினை சர் வதேச நியமங்களிற்கு இணங்க எண்ணிமப்படுத்திப் பாதுகாத்து அனைவருக்கும் இலவசமாக பகிர்ந்து கொண்டிருக்கின்ற ஒரு சமூகம் சார் தன்னார்வுத் தொண்டு நிறுவனமாகும். அந்த வகையில் பல்வேறு எழுத்தாளர்களினதும், நிறுவனங்களினதும் 15,000 இற்கும் அதிகமான வெளியீடுகள www.noolaham.org எனும் இணைய எண்ணிம நூலகம் மூலம் நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளில் வாழும் வாசகர்களுக்கும், ஆய்வாளர்களுக்கும் பகிரப்பட்டுள்ளன. இச்செயற்பாடுகளின் மேலுமொரு மைல்கல்லாக 2014 ஆம் ஆண்டு "யாழ்ப்பாணப பல்க லைக்கழக சமுதாய மற்றும் குடுமப மருத்துவத் துறையின் நூறுக்கும் மேற்பட்ட வெளியீடுகளினை மின்வருடி ஆவணப் படுத்தும் செயற்றிட்டம் ஆரம் பிக்கப்பட்டு இவ்வாண்டின் ஆரம்பத்தில் முடிவுக்கு வந்திருந்தது. அவ் வெளியீடுகளை நூலக நிறுவனததின் எண்ணிம நூலக வலைத்தளத்தில் திறந்து வாசிப்பிற்கு அனுமதிப்பதற்கான உத்தியோக பூர்வ அனுமதியினை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நூலக நிறுவன யாழ்ப்பாணக் கிளை அலுவலகத்தில் வைத்து துறைத் தலைவர் வைத்திய கலாநிதி. சு. சுரேந்திரகுமாரன் வழங்கியிருந்தார்.

இந்நிகழ்வில் நூலக நிறுவன இயக்குநர் சிவானந்தமூர்த்தி சேரன், தொழில் நுட்பக்கல்லூரியின் விரிவுரையாளரரும், நூலக நிறுவனத்தின் முன்னாள் தலைமை நிகழ்ச்சித்திட்ட அலுவலரும், தன்னார்வலர்களில் ஒருவருமான சி.இலம்போதரன் மற்றும் நூலக நிறுவனத்தின் ஏனைய சில செயற்பாட்டாளர்களும் கலந்து கொண்டனர். இந் நிகழ்வில் கருத்துத் தெரிவித்த துறைத் தலைவர் சுரேந்திரகுமாரன் மருத்துவத்துறை சார்ந்தவர்கள் பலரும் சமூகம் சார்ந்த செயற்பா டுகள் பலதிலும் ஈடுபட முன்வர வேண்டும் என்றும் குறிப்பிட்டார். மேலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் சமுதாய மற்றும் குடும்ப மருத்துவத்துறை ஆரம்பிக்கப் பட்டதிலிருந்து இது வரை செய்த சேவைகள், சாதனைகள் தொடர்பாக அத்துறையின் இது வரையான வெளியீடுகளை ஆய்வு செய்து சமூகத்துக்கு அளிக்கை செய்யும் ஒரு செயற்பாட்டினை நூலக நிறுவனத்துடன் இணைந்து முன்னெடுப்பதற்கான உறுதிப்பாட்டினையும் துறைத்தலைவர் வழங்கியிருந்தார். சி.இலம் போதரன் நூலக நிறுவனத்தின் ஆவண மாநாட்டு மலர் ஒன்றி னையும் துறைத்தலைவர் சுரேந்திர குமாரனுக்கு வழங்கி கௌரவித்தமையும் குறிப்பிடத்தக்கது.

# மாதகல் வாசிகளுக்கு மலேரியா தடுப்பூசி


வலிகாமம் தென்மேற்குப் பிரதேசத்தில் மாதகல் பகுதியில் உள்ள மக்களுக்கு மலேரியா தடுப பூசி போடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இப்பகுதியிலிருந்து மலேரியா நோயாளி ஒருவர் இரத்தப் பரிசோதனை மூலம் இனங்காணப்பட்டதை தொடர்ந்தே அப்பகுதியில் வசிக்கும் மக்களுக்கு மலேரியா தடுப்பூசி போடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பத்து வருடங்களுக்கு மேலாக இந்தியாவில் வசித்து வந்த மாதகலைச் சேர்ந்த 35 வயதுடைய ஆண் ஒருவர் கடந்த மாதம் இலங்கை வந்து தனது சொந்த ஊரான மாதகலில் வசித்து வந்தார். காய்ச்சலினால் பாதிக்கப்பட்ட இவர் யாழ்ப்பாணம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட போது அவர் மலேரியா நோயினால் பாதிக்கப்பட்டது தெரிய வந்தது.

இதனையடுத்து அப்பகுதியில் மலேரியாத் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள முன்வந்துள்ள சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி அப்பகுதியில் வசிக்கும் மக்கள் அனைவருக்கும் மலேரியா தடுப்பு ஊசி போடுவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

# தொழில்நுட்ப உதவியாளர்களுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கல்



(யாழ்ப்பாணம்)

வடமாகாண விவசாய திணைக்களத்தின் விரிவாக்கல் சேவைகளுக்கென தொழில நுட்ப உதவியாளர்களாகத் தெரிவு செய்யப்பட்ட 14 பேருக கான நியமனக் கடி தங்கள் வடமா காண விவசாய அமைச சின் அலுவலகத்தில் வைத்து கடந்த திகதி சனிக்கிழமை வடமா காண விவசாய அமைச்சர் பொன்னுத்துரை ஐங்கரநேசன் வழங்கினார்.

நியமனக் கடிதங்களை வழங்கிய பின்னர் உரையாற்றிய அமைச்சர்,

விவசாயப் போதனாசிரியர் பதவி நியமனம் பெறுவதற்கு விண்ணபபதாரி க.பொ.த. உயர்தரத்தில் உயிரியல் பிரிவில் மூன்று பாடங்களும் . சித்தி அடைந்திருப்பதோடு, விவசாயத்தில் டிப்ளோமா பட்டமும் பெற்றவராக இருக்க வேண்டும்.

ஆனால், க.பொ.த. உயர்தரத்தில் உயிரியல் பிரிவில் மூன்று பாடங்களும் சித்தி அடைந்திருப்பவர்கள் விவசாயப் போதனாசிரியர்களாக வர விரும்புவதில்லை. வேறு துறைகளுக்குச் செல்லவே விரும்புகிறார்கள். இதனால் போதனாசிரியர்களுக்குப் பற்றாக்குறைவு நிலவுகிறது.

வடக்கில் போதிய அளவுக்கு விவசாயப் போதனாசிரியர்கள் இல்லாமல் இருப்பதால் எமது விவசாய அபிவிருத்தி வெகுவாகப் பாதிக்கப்படுகிறது. இதைக் கருத்திற்கொண்டு க.பொ.த. சாதாரணப் பரீட்சையிலும் சித்தியடைந்து விவசாயத்திலும் டிப்ளோமா பட்டம் பெற்றிருந்தால் அவர்களை சேவையில் இணைத்துக் கொள்ளும் வகையில் விவசாய விரிவாக்கத்துக்கான தொழில் நுட்ப உத்தியோகஸ்தர் என்னும் புதிய பணி நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

இதற்கான சேவை பிரமாணக் குறிப்பு உருவாக்கப்பட்டு, நேர் முகத்தேர்வு மூலம் 14 பேர் புதிதாக உள்வாங்கப்பட்டுள்ளனர். ஏற்கெனவே 15 பேர் மத்திய அரசின் தொழில் நுட்ப உதவியாளர்கள் நியமனத்தின் மூலம் வடக்கு விவசாய அமைச்சில் இணைகப்பட்டுள்ளனர். இன்னும் இப்பணி நிலையில் 11 வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன என்றார்.

வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளர் பற்றிக்டிறஞ்சன், மாகாண விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார், பிரதி விவசாயப் பணிப்பாளர் திருமதி. ஜெ.ஜெகநாதன் ஆகியோரும் இதில் கலந்துகொண்டனர்.

# கால்நடைகள்,பனைமரங்கள் திருட்டு அச்சுவேலி தெற்கு விவசாயிகள் விசனம்

மேய்ச்சலுக்காக திறந்த புல்வெளிக்குச் செல்லும் தமது கால்நடைகள் திருடப்பட்டதாக அவற்றின் உரிமையாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அச்சுவேலி தெற்கில் கிழக்கு வெளி என அழைக்கப்படும் பாரிய புல்வெளிப் பிரதேசத்தில் இங்குள்ள 8 கிராம சேவகர் பிரிவுகளையும் சேர்ந்த ஆயிரக்கணக கான கால்நடைகள் மேய்ச்சலுக காக திறந்து விடப்படுகின்றன.

நீண்டகாலமாக கால்நடைகளின் மேய்ச்சல் நிலமாக இருந்து வரும் இப் புல்வெளியில் அடிக்கடி கால்நடைகள் காணாமற் போவது சமகாலத்தில் அதிகரித்திருப்பதாக அச்சுவேலி தெற்கு விவசாய சம்மேளனத் தின் பிரதிநிதி அ.வேந்தன் தெரிவித்துள்ளார்.

கிழக்குவெளி பாரிய பிரதேசமாக இருப்பதால் கால்நடைகள் திருட்டுப் போவதை கண்காணிப்பது எமக்கு இயலாத காரியம் இத். திருட்டுக்களை கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் ,வெளியாரும் இணைந்து கண்காணிப்பதன் மூலமே முடிவுக்கு கொண்டுவர முடியுமென அவர் மேலும் தெரிவித்தார்.

இது தவிர இப் புல்வெளியை அண்டியுள்ள காணிகளில் இருந்து பனைமரங்கள் இரவோ டிரவாக தறித்து வாகனங்களில் ஏற்றிச் செல்லப்படுகின்றன.

பொலிஸார் இத் திருட்டுக்களை தடுத்து நிறுத்தாவிடின் இப் புல்வெளியை சூழவுள்ள பனை மரங்கள் அனைத்துமே காணமற்போய் விடும் ஒரு நிலை எதிர்காலத்தில் ஏற்படலாம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது எமது பகுதி மக்களுக்கு கிடைத்திருக்கும் இயற்கையான வளம். இவற்றைப் பேணிப் பாதுகாத்துக் கொள்வதில் தொடர்புபடும் அதிகாரிகளின் உதவியை நாம் எதிர்பார்த்திருக்கின்றோமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (168)

# வடக்கின் வசந்தத்தின் கீழான மின்னிணைப்பை நீடிக்க தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தின் கீழ் மீளக் குடிய மர்ந்தோருக்குகடந்த காலங்களில் வழங்கப்பட்ட இலவச மின்னிணைப்பு சலுகை இவ் வருடம் இரண்டாவது மாதத்திலிருந்து காலாவதியாகியது.

இவ் இலவச மின்னிணைப்பு சலுகையினை தீவகப் பகுதிக்கும் மற்றும் அதனுள் உள்ளடங்கும் ஊர்காவற்றுறை பகுதி மக்களின் நன்மை கருதியும் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்த வேண்டுமென ஊர்காவற்றுறை பிரதேச சபையினரின் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. மின்னிணைப்பை நீடிக்க வேண்டுமென சம்பந்தப்பட்டவர்களுடன் கோருவதென தீர்மானிக்கப்பட்டது இச் சபையினால் முன்னெடுக்கப்பட்ட தீர்மானத்தினை ம.பெ.பெ.அல்பேட் முன்மொழிய அ.சாள்ஸ்ஜான்சன் வழிமொழிந்தார்.

## முரசின் இன்றைய பலன்

(23.06.2015 செவ்வாய்க்கிழமை

மன்மத வருஷம் ஆனி மாதம் 8 ஆம் திகதி.
சப்தமி-திதி / சித்தாமிர்தம் - யோகம்.
பூரம் நட்சத்திரம் பி.ப.- 4.43 வரை பின் உத்தரம்
இராகுகாலம் 2.54 - 4.24 வரை சுப நேரம் 10.24 - 11.54 வரை



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்**: எதிரி எதிர்ப்பட்ட வேளை முரண்படாது செல்வது நன்மை பயக்கும்

**ரிஷபம்**: பொறுப்பில்லாது கொடுத்த கடனை மீளப் பெற முறைப்பாடு செய்ய முனைதல்

**மிதுனம்**: வாகன யோகங்கிட்டபிதாவின் கருணை கிடைத்தல்

**கடகம்**: விசாரித்த வேளை மணமகன் பற்றிய தகவல் நன்றாக இருத்தல்

**சிம்மம்**: சுபகாரியம் எதிர்பாராது ஏற்பட்டதனால் கடன்பட நாலுபேரினை நாடல்

**கன்னி**: உதவி கேட்ட நண்பரைப் பற்றிய நல்லெண்ணம் இன்மையால் கை விரித்து விடல்

**துலாம்**: ஏழரைச்சனி நடைபெறுவதனால் புதிய முயற்சியில் ஈடுபட விரும்பாமை

**விருச்சிகம்**: மூத்த சகோதரர் கருணையால் சொத்துப்பிரச்சினை சுமூகமாக தீர்வடைதல்

**தனுசு**: முரண்பட்டிருந்த மாமனார் உறவில் சுமூக நிலை ஏற்படல்

**மகரம்**: மன அமைதிக்காக யோகா தியானத்தை நாட விரும்புதல்

**கும்பம்**: நன்கு திட்டமிட்டதினால் பணிச்சுமை வெகுவாகக் குறைந்து விடல்

**மீனம்**: நன்மை செய்த சகோதரர் ஏறெடுத்துப் பாராமை கண்டு துயர் அடைதல்

# கோபா அமெரிக்க கால்பந்து காலிறுதிக்குள் பிரேசில்



(சான்டியாகோ)

கோபா அமெரிக்க கால்பந்து தொடரில் வெனிசூலாவை வீழ்த்திய பிரேசில் காலிறுதிக்குள் முன்னேறியது.

44ஆவது கோபா அமெரிக்க கால்பந்து போட்டி சிலியில் நடைபெற்று வருகிறது. தென் அமெரிக்க கண்டத்தின் ஜாம்பவான் யார் என்பதை நிர்ணயம் செய்யும் இந்தப்போட்டியில் 12 நாடுகள் பங்கேற்றன.

சி பிரிவில் கடைசி ஆட்டங்கள் நேற்று முன்தினம் நடந்தது. இதன் ஒரு ஆட்டத்தில் பிரேசில் வெனிசூலா அணிகள் மோதின.

8 முறை சம்பியனான பிரேசில் ஆட்டத்தின் தொடக்கத்திலேயே ஆதிக்கம் செலுத்தியது. 9ஆவது நிமிடத்தில் அந்த அணி வீரர் தியாகோ சில்வா கோல் அடித்தார். முதல் பாதி ஆட்டத்தில் 1:0 என்ற கணக்கில் முன்னணியில் இருந்தது.

2ஆவது பாதி ஆட்டத்தில் பிரேசில் அணி மேலும் ஒரு கோல் அடித்தது. 52ஆவது நிமிடத்தில் ராபர்ட்டோ பிர்மினோ இந்தக் கோலை அடித்தார். ஆட்டம் முடிய 5 நிமிடம் இருந்த போது வெனிசூலா வீரர் மிகு கோல் அடித்து அந்த அணியை உற்சாகப்படுத்தினார். இறுதி வரை மேலும் கோல் விழவில்லை.

இதனால் பிரேசில் 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிக்கு தகுதி பெற்றது.

இதே பிரிவில் நடந்த இன்னொரு ஆட்டத்தில் கொலம்பியா, பெரு அணிகள் மோதின. இந்த ஆட்டம் கோல் எதுவுமின்றி சமநிலை ஆனது. கோல் அடிக்க இரு அணி வீரர்களும் மேற்கொண்ட முயற்சி பலன் அளிக்கவில்லை.

இந்தப் பிரிவில் பிரேசில் 2 வெற்றி, 1 தோல்வியுடன் 6 புள்ளிகள் பெற்று முதல் இடத்தையும், பெரு, கொலம்பியா அணிகள் 1 வெற்றி, 1 சமநிலை, 1 தோல்வியுடன் தலா 4 புள்ளிகள் பெற்று 2 ஆவது, 3ஆவது இடங்களையும் பிடித்து காலிறுதிக்கு நுழைந்தன. வெனிசூலா 1 வெற்றி, 2 தோல்வியுடன் 3 புள்ளிகள் பெற்று கடைசி இடத்தை பிடித்து வெளியேறியது.

நேற்றுமுன்தினத்துடன் லீக் ஆட்டம் முடிந்தன. இதன் முடிவில் சிலி, பொலிவியா ஏ பிரிவு, அரஜன்ரீனா, பராகுவே, உருகுவே பி பிரிவு, பிரேசில், பெரு, கொலம்பியா சி பிரிவு ஆகிய அணிகள் காலிறுதியில் நுழைந்தன. ஈக்வடோர், மெக்சிகோ, ஜமைக்கா, வெனிசூலா அணிகள் வெளியேற்றப்பட்டன.

காலிறுதி ஆட்டம் 24ஆம் திகதி ஆரம்பமாகிறது. அன்று சிலி-உருகுவே அணிகள் மோதுகின்றன. மற்ற காலிறுதி ஆட்டங்களில் பொலிவியா பெரு (25ஆம் திகதி), அர்ஜன்ரீனா கொலம்பியா (26ஆம் திகதி), பிரேசில், பராகுவே (27ஆம் திகதி) மோதுகின்றன.

பரம்பரை எதிர்களான பிரேசிலும், ஆர்ஜன்ரீனாவும் அரை இறுதியில் மோத வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

## பெண்கள் உலக கால்பந்து கால் இறுதியில் சீனா, ஜேர்மனி



பெண்களுக்கான 7ஆவது உலக கோப்பை கால்பந்து போட்டி கனடாவில் நடந்து வருகிறது.

24 அணிகள் கலந்து கொண்ட இந்த போட்டியில் லீக் முடிவில் 16 அணிகள் 2 ஆவது சுற்றுக்கு முன்னேறின. 2 ஆவது சுற்றில் நேற்று முன்தினம் இரண்டு ஆட்டங்கள் நடந்தன.

ஒரு ஆட்டத்தில் உலகின் முதல்தர அணியான ஜெர்மனி 4-1 என்ற கோல் கணக்கில் சுவீடனை சுலபமாக விரட்டியடித்து கால்இறுதிக்குள் நுழைந்தது. மற்றொரு ஆட்டத்தில் சீனா 1-0 என்ற கோல் கணக்கில் கமரூனை தோற்கடித்து கால் இறுதியை எட்டியது.

## மினி உலக கிண்ணத்திற்கு தகுதி பெற்றது பங்களாதேஷ்

மினி உலக கோப்பை என்று அழைக்கப்படும் சம்பியன்ஸ் கோப்பை கிரிக்கெட் போட்டி 2017 ஆம் ஆண்டு இங்கிலாந்தில நடைபெறவுள்ளது.

போட்டியை நடாத்தும் நாடு மற்றும் செப்ரெம்பர் மாத நிலவரப்படி தரவரிசையில் சிறந்த நிலையில் உள்ள முதல் 7 அணிகள் என மொத்தம் 8 அணிகள் மட்டுமே இந்த போட்டிக்குத் தகுதி பெற முடியும்.

இந்தியாவுடனான வெற்றியின் மூலம் பங்களாதேஷ் அணி (93 தரவரிசை புள்ளிகளுடன் 7ஆவது இடம்) சம்பியன்ஸ் கோப்பை போட்டிக்கு தகுதி பெறுவதற்கான போதுமான தரவரிசை புள்ளிகளை எட்டி விட்டது. பங்களாதேஷ் அணி சம்பியன்ஸ் கோப்பைக்குத் தகுதி பெற்றிருப்பது உறுதியாகி இருப்பதன் மூலம் மேற்கிந்திய அல்லது பாகிஸ்தான் ஆகிய முன்னணி அணிகளில் ஒன்று வாய்ப்பை இழக்க நேரிடும்.

## ஹாலே ஓப்பன் சம்பியனானார் பெடரர்



(ஹாலே)

ஹாலே ஓப்பன் ரென்னிஸ் (கெர்ரி வெபர்) போட்டி ஜேர்மனியில் நடைபெற்று வருகிறது. ஒற்றையருக்கான இறுதிப் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் முன்னணி வீரரான ரோஜர் பெடரர், தென் ஆபிரிக்காவின் அன்ட்ரியாஸ் செபியை எதிர்கொண்டார்.

இதில் பெடரர் 7-6 (1), 6-4 என்ற நேர்செட் கணக்கில் செபியை வீழ்த்தினார். முதல் செட்டில் செபி கடும் நெருக்கடி கொடுத்ததால் டை பிரேக்கர் வரை சென்றது. இறுதியில் பெடரர் வெற்றி பெற்றார். ஆனால், 2ஆவது செட்டை 6-4 என எளிதில் கைப்பற்றி 2-0 என நேர்செட்டில் செபியை வீழ்த்தி பெடரர் சம்பியன் பட்டம் வென்றார்.

10 முறை ஹாலே இறுதிப போட்டிக்கு நுழைந்துள்ள பெடரர் 8 முறை சம்பியன் பட்டம் வென்றுள்ளார்.

## ஏகன் ரென்னிஸ் தொடர் கிண்ணம் வென்றார் முர்ரே

ஏகன் சம்பியன்ஷிப் ரென்னிஸ் தொடரின் ஒற்றையர் பிரிவில் பிரிட்டனின் அன்டி முர்ரே சம்பியன் பட்டம் வென்றார். இறுதிப் போட்டியில் தென் ஆபிரிக்காவின் கெவின் அண்டர்சனை வீழ்த்தினர்.

லண்டனில், ஏகன் சம்பியனஷிப் ரென்னிஸ் தொடர் நடந்தது. இதன் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில், பிரிட்டனின் அன்டி முர்ரே, தென் ஆபிரிக்காவின் கெவின் அண்டர்சன் மோதினர்.



அபாரமாக ஆடிய முர்ரே 6:3, 6:4 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று 4ஆவது முறையாக (2009, 2011, 2013, 2015) கோப்பை வென்றார். இதன்மூலம் இத்தொடரில் அதிக முறை பட்டம் வென்ற வீரர்கள் பட்டியலில் அமெரிக்காவின் ஜோன் மெக்னராய், ஜேர்மனியின் போரிஸ் பெக்கர், அமெரிக்காவின் அன்டி ரோடிக், அவுஸ்ரேலியாவின் ஹெவிட் ஆகியோருடன் முர்ரே இணைந்தார். இவர்கள் தலா 4 முறை கோப்பை வென்றனர்.

பெண்களுக்காக பர்மிங்காமில் நடந்த ஏகன் கிளாசிக் ரென்னிஸ் தொடரின் இறுதிப் போட்டியில் ஜேர்மனியின் கெர்பர், செக்குடியரசின் கரோலினா பிலிஸ்கோவா மோதினர். இதில் அசத்தலாக ஆடிய கெர்பர் 6:7, 6:3, 7:6 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தை கைப்பற்றினார்.

## ஹபீஸ் பந்து வீச்சில் மீளவும் சர்ச்சை

(காலி)

பாகிஸ்தான் அணியின் முன்னணி சகலதுறை வீரர்களில் ஒருவர் முகமது ஹபீஸ். இவரது பந்துவீச்சு சந்தேகம் அளிக்கும் வகையில் இருப்பதாக கடந்த ஆண்டு குற்றம் சாட்டப்பட்டது. ஐசிசி. நிரணயித்த விதி முறைக்கு மாறாக அவரது பந்துவீச்சு சட்ட விரோதமாக இருந்தது. கடந்த ஏப்ரல் மாதம் சென்னையில் நடந்த பரிசோதனையில் ஹபீஸ் சரியான முறையில் வீசி வெற்றி பெற்றார். இதைத்தொடர்ந்து அவருக்கு பந்துவீச்சு அனுமதி அளிக்கப் பட்டது.

இந்த நிலையில் ஹபீஸ் பந்துவீச்சு குறித்து மீண்டும் நடுவரால் புகார் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இலங்கைக்கு எதிராக காலி மைதானத்தில் நடந்த முதல்



டெஸ்டில் பாகிஸ்தான் 10 விக்கெட்டில் வெற்றி பெற்றது. இந்த டெஸ்டில் தான் அவரது பந்துவீச்சு சந்தேகம் அளிக்கும் வகையில் இருப்பதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இந்த டெஸ்டில் ஹபீஸ் 20 ஓவர் வீசி 2 விக்கெட் கைப்பற்றினார்.

ஒரே ஆண்டுக்குள் ஹபீஸ் மீது இதே மாதிரியான புகார் 2ஆவது முறையாக கூறப்படுவதால் அவருக்கு 1 ஆண்டு தடை விதிக்கப்படலாம் என்று தெரிகிறது.

## அணித்தலைவர் பதவியிலிருந்து விலகிக் கொள்ளத் தயார்

### டோனி அறிவிப்பு

இந்திய அணியில் ஏற்படும் அனைத்து மோசமான சம்பவங்களுக்கும் நான் காரணமாக இருந்தால் அணித்தலைவர் பதவியில் இருந்து விலகத் தயார் என்று டோனி தெரிவித்துள்ளார்.

இந்திய அணி வங்கதேசத்தில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. இதில் ஒருநாள் தொடரை மோசமான முறையில் இழந்துள்ளது. இதனால் அணித்தலைவர் டோனி மீது விமர்சனங்கள் எழுந்துள்ளன.

இந்நிலையில் போட்டி முடிந்த பிறகு செய்தியாளர் சந்திப்பின் போது பேசிய டோனி, என் மீதுதான் அதிக பொறுப்பு சுமத்தப்படுகிறது.

அனைத்து மோசமான விடயங்களுக்கும் நான் தான் காரணம் என்று குற்றம்சாட்டப்படுகிறது. ஆனால் இதைக்



கேட்டு வங்கதேச ஊடகங்கள் கூட சிரிக்கின்றன.

நான் எப்போதுமே அணித்தலைவர் ஆக வேண்டும் என வரிசையில் நின்றது இல்லை. என்னைப் பொறுத்த வரையில் அணித்தலைவர் யார் என்பது ஒரு விடயமே இல்லை.

என்னை அணித்தலைவர் பதவியில் இருந்து நீக்குவது நியாயம் என்று நினைத்தால், அதன் பிறகு இந்திய அணி சிறப்பாக விளையாடும் என்று நினைத்தால் நான் அணித் தலைவர் பதவியில் இருந்து விலகி விட்டு ஒரு வீரராக மட்டும் தொடரத் தயாராக உள்ளேன். அதில் எனக்கு எவ்வித வருத்தமும் இல்லை என்று தெரிவித்துள்ளார்.

# யாழ்.ஐக்கியத்தை வெற்றிகொண்டு அடுத்த சுற்றுக்குள் ஐயனார்




கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் நடாத்திவரும் 'கிங் ஒப் ஜப்னா உதைபந்தாட்டத் தொடரில் கடந்த 16 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை நடைபெற்ற உதைபந்தாட்டப போட்டியில் யாழ்.ஐக்கிய விளையாட்டுக்கழகத்தினை வென்று அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றது வேலணை துறையூர் ஐயனார் அணி.

மாலை 5 மணிக்கு கொலின்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் யாழ்.ஐக்கிய விளையாட்டுக் கழகத்தினை எதிர்த்து வேலணை துறையூர் ஐயனார் அணி மோதியது.

இதில் முதல் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் போராடிய நிலையில் ஐயனார் விளையாட்டுக்கழகம் 1 கோலைப் போட்டு முன்னிலையில் இருந்தது.அடுத்த பாதி ஆட்டத்தின் போது துறையூர் ஐயனார் அணி தடுத்து இருகோலைப் போட்டது. ஆட்ட நேர முடிவில் துறையூர் ஐயனார் அணி 3.0 என்ற கோல் கணக்கில் யாழ்.ஐக்கிய விளை யாட்டுக் கழகத்தினை வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

இதில் ஜனோஜ், கோகுலன், சுபராஜ் ஆகியோர் தல.1 கோல்களைப் போட்டனர். இதற்கு முன்னைய போட்டியில் ஐயனார் வடமராட்சி பொம்மர்ஸ் விளையாட்டுக்கழகத்திற்கு 2 கோல்களை அடித்து வெற்றி யீட்டியமை குறிப்பிடத்தக்கது.

# பொது விளையாட்டு மைதானம் பளையில் புனரமைப்பு

(பளை)

பச்சிலைப்பள்ளி (பளை) பிரதேசத்தின் பொது விளையாட்டு மைதானம் நெல்சிப்திட்டத்தின் கீழ் 10 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுள்ளதாக பச்சிலைப் பள்ளி பிரதேச சபை தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிரதேச சபையின் தலைமைக்காரியாலயத்துக்கு அண்மையில் வசதிகள் குறைந்த நிலையில் இருந்த இந்த மைதானத்தை புனரமைத்துத் தருமாறு அப்பகுதி மக்கள் பிரதேச சபையிடம் கோரிக்கை முன்வைத்தனர்.

மக்களின் கோரிக்கையை அடுத்து நெல்சிப் திட்டத்தில் 10 மில்லியன் ரூபா செலவில் மைதானம் புனரமைக்கப்பட்டது.


# மாவட்ட மட்ட பளுதூக்கலில் வல்வை வீராங்கனை முதலிடம்



யாழ்.மாவட்ட பளுதூக்கல் சங்கத்தினால் நடாத்தப்பட்ட பளு தூக்கல் போட்டியில் பெண்கள் பிரிவில் வல்வெட்டித் துறையைச் சேர்ந்த செல்வி தசாந்தினி இராமகிருஷ்ணன் யாழ் மாவட்டத்தில் முதலிடம் பெற்றுள்ளார்.

சைனிங்ஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த செல்வி தசாந்தினி முன்னரும் பாடசாலை மட்டத்திலும் பல வெற்றிகளை பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# தேசிய விளையாட்டு விழா 2016 யாழ்.கிளிநொச்சி மாவட்டங்களில்



2016 ஆம் ஆண்டுக்கான தேசிய விளையாட்டு விழாவை யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் நடாத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன்படி நிகழ்ச்சி ஏற்பாட்டுக்குழுவொன்றை அமைக்க சுற்றுலா மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் நவீன் திஸாநாயக்கவினால் முன்வைக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

41 ஆவது தேசிய விளையாட்டு விழாவுக்காக ஏற்கனவே ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் ஒருசில போட்டி நிகழ்ச்சிகள் ஏற்கனவே முடிவடைந்துள்ளன.

இதன்படி நிகழ்ச்சி ஏற்பாட்டுக்காக குழுவொன்றை அமைக்க சுற்றுலா மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நவீன் திசாநாயக்கவினால் முன்வைக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரங்களுக்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

# தொண்டைமானாறு உதைபந்து வல்வை வி.கழகம் வெற்றி

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு கலைவாணி விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடாத்தும் அணிக்கு 9 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் வரிசையில் நேற்றுமுன்தினம நடைபெற்ற ஆட்டத்தில் கல்வளைவிநாயகர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வல்வை விளையாட்டுக் கழகம் மோதியது. இந்த ஆட்டத்தில் வல்வை விளையாட்டுக்கழகம் 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அனுமதியுடன் தொண்டைமானாறு கலைவாணி விளையாட்டுக்கழகத்தின் 25ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டும், அமரர் கந்தையா குணசிங்கம், குணசிங்கம் பரமேஸ்வரி ஆகியோரின் ஞாபகார்த்தமாகவும் இந்த சுற்றுப்போட்டி நடைபெற்று வருகின்றது.




போட்டிகள் தொண்டைமானாறு கலைவாணி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.



2015 ஆம் ஆண்டிற்கான தென்மராட்சி பிரதேச செயலக விளையாட்டு விழாவின் அனைத்துப் போட்டிகளின் புள்ளி ரீதியான முதலாமிட வெற்றிக்கழகமாக மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகம் தெரிவு செய்யப்பட்டுள்ளது..

வெற்றிக்கிண்ணத்தை பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் நா. வேதநாயகன் வளர்மதி விளையாட்டுக்கழகத் தலைவர் சி. சுஜுவனிடம் வழங்குவதனையும் தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அ. சாந்தசீலன் மற்றும் வளர்மதி சனசமூக நிலையத் தலைவர் சி.டினேசன் ஆகியோர் நிற்பதையும் காணலாம். (90)

# பளுதாக்கும் போட்டியில் யாழ்.இந்துக் கல்லூரி சாதனை



வடமாகாண பளுதூக்கும் போட்டி யாழ் இந்துக்கல்லூரியில் நடைபெற்றது.இப் போட்டியில் யழ்ப்பாணம்இந்துக்கல்லூரி 31பதக்கங்களுடன் முதலிடம் பெற்று சாதனை படைத்தது.

கடந்த 2013 ஆம் ஆண்டு முதல் இப் பளுதூக்கும் போட்டிகளில் பங்குபற்றி வரும் யாழ் இந்துக்கல்லூரி பங்குபற்றிய முதல் வருடம் முதல் இவ் வருடம் வரை தொடர்ச்சியாக 3 வருடங்கள் ( 2013,2014,2015) வடமாகாண சம்பியன்கள் எனும் பட்டத்தை தக்க வைத்துக் கொண்டுள்ளது.

இவ்வருடம் இடம்பெற்ற போட்டிகளில் யாழ் இந்துக் கூல்லூரி 17 வயதுப்பிரிவில் 17 பதக்கங்களுடன் முதல் இடத்தையும் 19 வயதுப்பரிவில் 14 பதக்கங்களுடன் முதல் இடத்தையும் பெற்று வட மாகாண சம்பியன்கள் எனும் அந்தஸ்த்தை தொடர்ந்து தக்க வைதத்துக்கொண்டுள்ளது 48



# நாபா — 3 நண்பனா தோழனா தலைவனா?

- ராம் -

மலையகம், திருகோணமலை, மட்டக்களப்பு, தம்பிலுவில் திருக்கோவில் என பல இடங்கள் பயணித்தோம். மலையகத்தில் பரிபூரன் (ஈரோஸ்), திருமலையில் 10ஆம் நம்பர் செஞ்சி வீடு, மட்டக்களப்பில் உமாவுடன் தங்குவோம். ஒருதடவை மட்டக்களப்பில் இருந்து உன்னிச்சை 7ஆம் கட்டண்டயில் திருக்கோயில் வங்கிக் கொள்ளையில் சம்பந்தப்பட்டு காயமடைந்து ஒளித்திருந்த சி-ரி என்பவரைச் சந்திக்க நாபாவை மோட்டார் சயிக்கிளில் கூட்டிச்சென்றேன். அந்த நேரம் நாபாவும் தேடப்படும் நபர் என்பதுதான் வேடிக்கை. பல இயக்கத்தவருடன் நாபா சகஜமாக பழகுவார் உதவுவார். மட்டக்களப்பில் என்.எல்.எப்.ரி விஸ்வா, நாகபடை உறுப்பினர்கள் எனப் பலருடனும் தோழமையுடன் பழகுவார்.

நாபாவுடன் நிறைய பயணங்கள் செய்த எனக்கு அவர் ஒரு புரியாத புதிராகவே இருந்தார். எந்த சூழ்நிலையிலும் மனம் தளர்வதில்லை. உணவு அவருக்கு ஒரு பொருட்டே அல்ல. எவ்வளவு தூரம் என்றாலும் நடப்பது அவர் செயல். மலையகத்தில் இருந்தவேளை முல்கம்பொலவில் இருந்து கண்டிவரை நடந்தே செல்வோம். அங்கு முத்துவின் (முத்துலிங்கம்) தாயார் தரும் ரொட்டி அல்லது பேராதனை பல்கலைக்கழக அக்பர் விடுதியில் பரிபூரன் (கொழும்பு கரையோர போலிசுக்கு அருகில் அவர் கொண்டு சென்ற சூட்கேஸ் குண்டு வெடித்ததில் இறந்தவர்) வாங்கித்தரும் 1 பணிஸ் 1 ரோல் தான் அன்றைய உணவு.

ஒருநாள் மிகுந்த பசி. காலையில் இருந்து உணவில்லை. முல்கம்பொல பௌவ்வல வீதியை அண்மித்தே பாலகிருஸ்ணன் (மேர்ஜ் மற்றும் சரிநிகர் பத்திரிகை) வீடு இருந்தது. அங்கு சென்றோம். வீட்டில் நுழையும் போதே பருப்பு வாசனை வந்தது. பாலா காங்கேசன்துறை வந்த போது நாபா வீட்டில் தங்கியுள்ளார். மிக நெருக்கமான தோழமை. அவர் மனைவியும் நாபாவை அறிவார். வரவேற்பு நன்றாக இருந்தது. குளிருக்கு இதமாக தேநீர் தந்தார். நாபாவும் பாலாவும் நீண்ட நேரம் மலையக அரசியல் பற்றி பேசினர். நான் குசினிப் பக்கம் பார்த்தபடி இருந்தேன். திடீரென எழுந்த நாபா ஓ கே தோழர் நீங்கள் தூங்கவேண்டும் நாங்கள் போய்வருகிறோம் என சிரித்தபடி விடைபெற்றார். நாபாவுக்கு ஒரு கொடை அவர் சிரிப்பில் அவர் முகவாட்டம் களைப்பு எல்லாம் மறைக்கப்பட்டு விடும். விட்டு விட்டு அவர் சிரிப்பது வயிறுபுடைக்க் திண்டவர் போல் அவரை காட்டும். பாதி தூரம் வந்தபின் கேட்டேன் ஏன் சாப்பாட்டைப் பற்றி பேசவில்லை என்று. நாபா சிரித்தபடி கேட்க வெட்கமாக இருந்தது அதுதான் வந்துவிட்டேன் என்றார். அன்று கொலைப்பட்டினி. என்றாலும் கதவு நிலைகளில் மற்றவர்கள் செருகிவைத்திருந்த குறைச் சுருட்டின் புகை எம்வயிற்றை நிரப்பியது. அன்று அவரின் செயலால் கோவம் வந்தது ஆனால் விட்டு விலகவில்லை. தொடர்ந்தும் அவருடன் விரும்பி அலையும் தோழமை தொடர்ந்தது.

ஒருமுறை நான், நாபா, குஞ்சி மூவரும் திருமலையில் இருந்து மூதூர், வெருகல் ஊடாக மட்டுநகர் பயணித்த போது ஓட்டமாவடி பாலத்தில் புகையிரதம் போக கடவை மூடப்பட்டிருந்தது. மூவரும் இறங்கி பாலத்தருகே சிறுநீர் கழித்துக் கொண்டிருந்த வேளை வேகமாக வந்த பொலிஸ் ஜீப் அருகாமையில் நின்று பொலிசார் குதித்து ஓடிவந்தனர். நானும் குஞ்சியும் கலவரப்பட்டு வெளியேற்றத்தை நிறுத்திவிட்டோம். நாபா நிதானமாக வெளியேற்றத்தை தொடர்ந்தார். பொலிஸ் ஓடியது புகையிரதத்தில் வந்த யக்கடையா என்ற கள்வனைப் பிடிக்க. பஸ் பயணம் தொடர்ந்தபோது எம்மைப் பார்த்து நாபா சிரித்தது இன்னும் என் மனத்திரையில்.

திருமலை 10ஆம் நம்பரில் செஞ்சி வீட்டில் தங்கும்போது உணவுக்குப் பஞ்சமில்லை. இரவில் படுக்க கடற்கரை மண்டபம். அந்த வேளைகளில் நாபா தன் குடும்பப் பின்னணியை ஒருநிமிடம் கூட எண்ணாத மிக மிக சாதாரண நிலைக்கு தன்னை உட்படுத்தியது எனக்கு விநோதமானது. வசதிகளை தேடுவோர் மத்தியில், இருந்தும் இல்லாத வாழ்க்கை வாழ்ந்த ஒருவராக என்வாழ்வில் நான் கண்டது நாபாவை மட்டுமே.

ஒரு தடவை மட்டக்களப்பு போய்ஸ் ரவுணில் ஒரு கருத்தரங்கு. அதில் பேச வடக்கில் இருந்து வ்ரதன் தெற்கில் இருந்து தயான், திராணகம, முத்து போன்றோர் வந்திருந்தனர். நிகழ்ச்சி முடிந்து தெற்கில் இருந்து வந்தவர் போனபின் பொலிசார் அவ்விடம் வர குஞ்சி தந்திரமாக நாபாவை தப்பவைக்க வரதன் உட்பட பலர் கைதானார்கள். அப்போது பார் றோட்டில் தங்கியிருந்த என்னிடம் காலில் செருப்பு கூட இல்லாமல் நாபாவை தன் சயிக்கிளில் வந்தாறுமூலை பாலா (பின்னாளில் பாம்புகடித்து இறந்தவர்) கூட்டிவந்தார். சிறிது நேரத்தில் வந்த குஞ்சி நாபாவை உடனடியாக கண்டிக்கு அழைத்துச் செல்ல சொன்னார். அப்போது குருநா ல் வரைதான் பஸ் கிடைத்தது. இரவு 12மணியானதால் கண்டி பஸ் காலை 5 மணிக்கு என்றார்கள். நாபா நோபுரப்ளம் என கூறி வாசித்த பத்திரிகையை நிலத்தில் விரித்து பஸ்ராண்டில் படுத்துவிட்டார். காலையில் சக பயணிகள் தட்டி எழுப்ப கண்டி பயணித்தோம்.

(தொடரும்)

# இயலா விட்டால் வழியை விடுங்கள்!

- மாதவன் சஞ்சயன். -



தனிமனித விருப்பு வெறுப்புகள் எம் இனத்தை பாதித்தது போதாதென்றா எந்த ஒரு விட்டுகொடுப்புக்கும் சமரசத்துக்கும் தயாரின்றி செயற்படுகிறார் கஜேந்திரன். ஒருநாடு இருதேசம் கேட்பதற்கு நன்று அதை பெறுவதற்கு வழி?

புலிகளின் பலத்தில் செயற்பட்டவர்கள் இன்று சர்வதேசத்திடம் சாய்ந்து நிற்கின்றனர். புலிகளையே கைவிட்ட சர்வதேசம் தன் நலன் சார்ந்த விடயங்களைத்தான் எங்கும் செய்யும். பல மாநிலங்களை கொண்ட இந்திய அனுசரணை அதற்கு கிடைக்குமா? அதற்காக நாம் தொடர்ந்தும் போராடவேண்டும் என்கிறார். யார் போராடுவது எவ்வளவு காலம்? சிந்தியுங்கள்.

பாராளுமன்றம் செல்வது மட்டுமே என்செயல் எனும் பிரேமச்சந்திரன் நடத்தும் உள்ளக விமர்சனங்களால் உணர்ச்சிகளைத் தூண்டலாமே தவிர வேறெதை செய்யமுடியும். ஈழத்துக்குப் போராடி மாகாணசபையை ஏற்று முதல் சபையிலும் உறுப்பினராக இருந்து பின் சிலமாதங்களில் பாராளுமன்றம் சென்றவர் அப்போது அதிகாரப்பகிர்வு கேட்டு மத்தியுடன் மோதிய அந்த சபைக்காக எதனை மத்தியிடம் பெற்றுக் கொடுத்தார் என்பதை அதன் அன்றைய முதல்வரிடம் கேளுங்கள்.

அதிகாரப்பரவலுக்கான அலகாக இதுவரை எமக்கு கிடைத்திருப்பது மாகாணசபை மட்டுமே. அதை முழுமைப்படுத்தி வடக்கு கிழக்கு மாகாண சபைகளின் நிர்வாகத்தின் மூலம் எமது பிராந்தியத்தை நாமே நிர்வகிக்கக்கூடிய நிலைமையை ஏற்படுத்தினால் எம் பிரச்சினையின் மையப்புள்ளியை நாம் இலகுவாக தீர்க்கலாம்.

எதிர்பார்க்கப்படும் மாற்றத்தை நாம் அனைவரும் ஒருமித்த நோக்கில் பயன்படுத்தினால் மட்டுமே எம்மால் அழிவுகளில் இருந்து மீள் எழுந்து வரமுடியும். வெறுமனே வஞ்சம் தீர்க்கும் மனநிலையில் இருந்தால் நாம் தான் தொடர்ந்தும் பாதிப்புக்குள்ளாவோம். இரண்டு அணுகுண்டுகளை தன் மண்ணில் போட்ட அமெரிக்காவை ஜப்பான் வென்றது எதிர்ப்பைப் பாராட்டாத அதன் பொருளாதார அபிவிருத்தியால்.இறுதி அழிவுக்கு பழிவாங்க சர்வதேச விசாரணை கேட்பவர்கள் புலிகள் (பெருமளவில் செய்தவர்கள்) உட்பட மற்றவர்களும் செய்த படுபாதக செயல்களுக்கு உள்ளக விசாரணையாவது வைக்கத் தயாரா? பல தசாப்தங்களாக வாழ்ந்த வடக்கு முஸ்லிம்களை சில மணி நேரத்தில் சகலதையும் பறித்து பஞ்ச பராரிகள் போல் வெளியேற்றியதை விசாரிப்பார்களா? எனக்கொரு நீதி அடுத்தவனுக்கொரு நீதியா? சிந்தியுங்கள்.

வெறுமனே பாராளுமன்ற கதிரைகளுக்காக நாலுகால்கள் போல சண்டையிடாமல் இனியாவது ஒரு பொது முடிவிற்கு வாருங்கள். சாம்பலில் இருந்து மீண்டு வருவது பீனிக்ஸ் பறவை மட்டுமல்ல எம் ஈழத் தமிழ் இனமும் தான் என்பதை நிகழ்த்திக் காட்டுவோம்.

உங்களால் ஒன்றுபட முடியவில்லை என்றால் பகிரங்கமாக அதைத் தெரிவித்து விட்டு விலகி வடக்கு கிழக்கில் ஏன் தெற்கிலும் வாழும் எம் புத்திஜீவிகளுக்கு கல்விமான்களுக்கு சமூகசேவையாளருக்கு வழிவிடுங்கள்.

தொடர்ந்தும் குண்டுச்சட்டிக்குள் குதிரை ஓட்டியது போதும். நீங்கள் ஏற்படுத்திய அழிவுகளுக்கு நீங்களே நிவாரணம் ஆகுங்கள். இல்லை என்றால் இன அழிப்புக்கு வித்திட்டவர்கள் துணைபோனவர்கள் என்ற தீராப்பழி உங்களை வரலாற்றில் பதியும்.

# கடைக்குள் வீடு!


லண்டனில் உள்ள ஒரு பிரபல ஹோட்டல், “வீட்டுச் சூழலுடன் உணவு மற்றும் பெட் கோப்பி” என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த ஹோட்டலில், நாற்காலிகளுக்குப் பதிலாக, ஆடம்பரமான படுக்கைககள் போடப்பட்டுள்ளன. வாடிக்கையாளர்கள், தங்கள் குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப, “சிங்கிள்” அல்லது “டபிள் பெட்”டை தேர்வு செய்யலாம்.



தங்களுக்கு வேண்டிய உணவு வகைகளை ஓர்டர் செய்து, படுக்கையில் படுத்தபடியோ, அமர்ந்தபடியோ, குடும்பத்தினருடன் அளவளாவியபடி, “ஃபுல்” கட்டு கட்டிவிட்டு, அங்கேயே, ஒரு குட்டித் தூக்கமும் போடலாம்.

“என்ன செய்வது... போட்டி அதிகமாகி விட்ட்து; வித்தியாசமாக ஏதாவது செய்தால் தான், தொழிலில் நிலைக்க முடியும்...” என்று கூறுகின்றனர் ஹோட்டல் நிர்வாகத்தினர்.

# கண்ணும் கருத்தும்!



கண்ணுக்கு மை அழகு என்பார்கள். கண்ணை அழகு செய்ய பயன்படுத்துகிற பொருட்கள் கண்ணுக்கு ஒத்துக் கொள்ளவில்லை என்றால் கண் பார்வையே பாதிக்கப்படும் அபாயம் உள்ளது என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.


கண்ணை அழகுபடுத்த பயன்படுத்தும் பொருட்கள் தயாரிக்கப்பட்டு ஓராண்டுக்கும் மேல் ஆகிவிட்டால் அதைக் குப்பைக் கூடையில் போட்டுவிடுங்கள். அவற்றைப் பயன்படுத்தினால் கிருமிகளால் கண்கள் பாதிக்கப்படும்.

கண் மை காய்ந்து போய்விட்டால் அதை தண்ணீரில் கலக்கி பயன்படுத்தக் கூடாது. அப்படிப் பயன்படுத்திக் கொண்டே இருந்தால் கண் மை மிகவும் பழையதாகி கிருமிகளின் உறைவிடமாகிவிடும்.

ஒருவர் பயன்படுத்தும் கண் மேக் அப் பொருட்களை இன்னொருவர் பயன்படுத்தக் கூடாது. ஒருவரிடம் இருந்து இன்னொருவருக்கு கிருமித் தொற்று ஏற்படும்.

கண்ணின் கீழ் இமையில் மை தடவும்போது அந்த மை புதிதாக - கண்ணுக்கு கேடு செய்யாததாக இருக்க வேண்டும். ஏனென்றால் அந்த மை கண்ணோடு நேரடி தொடர்பு உள்ளது. தீங்கு விளைவிக்கும் கண் மை, கண் பார்வையையே பாதிக்கக் கூடும். கீழ் இமையில் மை தடவும்போது, கண்ணில் குத்திவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

# நகைச்சுவைக்கு ஒரு நடனம்!



எல்லோரும் பத்திரிகைகளில் மட்டுமே வரைந்து கொண்டிருந்த போது, ஓவியர் நடனம் ம்யூரல்க்ள் எனப்படும் புடைப்போவியங்கள் வரைவதில் சிறப்பான புகழ் பெற்று விளங்கினார். இயற்பெயர் : நடராஜன்.


அவருடைய ம்யூரல்கள் பல கல்லூரிகளிலும், ஹோட்டல்களிலும், விமான நிலயத்திலும் நிறையவே இடம் பெற்றிருக்கின்றன. வந்தவாசியில் உள்ள ஒரு பெருமாள் கோயில் மண்டபத்தில் ஃபைபர் கிளாஸ் ஓவியங்கள் வரைந்திருக்கிறார். எல்லாமே கிருஷ்ண லீலைகள். இப்படி ஃபைபர் கிளாஸைப் பயன்படுத்துவது இதுவே முதல் முறை என்கிறார்கள்.

மரம், உலோகம், செரமிக், ஃபைபர் கிளாஸ் என இப்படி பலவிதப் பொருட்களையும் கலந்து உருவாக்கப்படும் மிகப்பெரிய புடைப்போவியங்களை ஆங்கிலத்தில் ம்யூரல்கள் என்றழைக்கிறார்கள்.

நகைச்சுவை எழுத்தாளர்களுக்கு நடனத்தின் ஓவியங்கள் உறுதுணையாக இருந்தன. எழுதுகிறவர், தம் எழுத்தில் பாதி நகைச்சுவையைக் கொண்டு வந்தால் போதும். மீதி நடனத்தின் படம் வாசகரைப் படிக்க வைத்துவிடும் என்று பேசப்பட்ட ஓவியர் அவர்.

ஜோக்குகள் ஆகட்டும், நகைச்சுவைக் கட்டுரைகள் ஆகட்டும், நகைச் சுவைக் கதைகள் ஆகட்டும், நடனத்தின் சித்திரங்கள் இருந்துவிட்டால் போதும். சீரியஸ் கதைகளை விட்டுவிட்டு, அவர் படம் போட்ட கதை-கட்டுரைகளைப் படிக்க அவை நம்மை நிச்சயம் தூண்டிவிடும்.

தேவன் நூல்கள், சோ எழுதிய புத்தகங்கள் எல்லா்வற்றுக்கும் நடனம் வரைந்த அட்டைச் சித்திரங்கள் கவர்ச்சிகரமானவை.




சுஜாதா "முதல்வன்" படத்துக்குக் கதை வசனம் எழுதிய போது, அர்ஜுனின் தந்தையாக நடிக்க நடனத்தை சிபாரிசு செய்ய, நடனமும் அதில் நடித்தார். ஓவியரான தந்தையாக!

"ஐந்து வயதில் விளையாட்டாக ஓவியம் வரைய ஆரம்பித்த என்னை பள்ளிப் படிப்பு முடிந்தவுடன் எழுத்தாளர் கரிச்சான் குஞ்சு சென்னைக்கு அழைத்து வந்து அவரது நண்பரான எழுத்தாளர் தி.ஜானகிராமனின் இல்லத்தில் தங்க வைத்தார். "சிறகு முளைத்து பறக்கும் வரையில் இங்கேயே தங்கிக்கொள்" என்று சாப்பாடும் போட்டு அடைக்கலம் கொடுத்தார் தி.ஜானகிராமன். ஓவியர் சாகரிடம் பயிற்சி. பிறகு கல்கி இதழில் துணுக்குகளுக்கான படங்கள். ஆர்.வி தந்த முதல் வாய்ப்பு கலைமகள் குழுமத்திலிருந்து அப்போது வெளிவந்து கொண்டிருந்த "கண்ணன்" இதழில் தொடர்ந்து வாய்ப்புகள் கிடைத்தன. அங்கிருந்தே நான் வளர்ந்தேன்" என்று பேட்டியில் சொல்லியிருக்கிறார் நடனம்.

# விவசாயிகளின் மேன்நிலையாக்கத்தில் அமைப்பாக்க செயற்பாடுகளின் முக்கியத்துவம்

**- சாலையூரான் -**



விவசாயிகளுக்கான அமைப்புக்களை முறையாக செயற்படுத்துவதில் நிலவும் குறைபாடுகளால் குடாநாட்டின் பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் சீர்குலைந்துள்ளதை இத்துறைசார் தொழிற்சங்க பிரதிநிதிகள் மற்றும் பாதிப்புக்குள்ளான விவசாயிகள் பலரும் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

நீண்ட தொடர் யுத்தத்தில் விடுதலையின் பெயரால் விவசாயத்துறையை வழிநடாத்த முயன்ற அரசியல் தலைமைகள் வெறுமனே வரி அறவீட்டுக்கான ஒரு வழிமூலமாக மாத்திரமே இத்துறைசார்ந்த அதிகாரிகளையும் கூடவே பயிர்ச்செய்கை முயற்சியாளர்களையும் பயன்படுத்திக் கொண்டதில் தமிழ் மக்களின் விவசாயம் பெரும் முடக்க நிலைக்குள் தள்ளப்பட்டதை குறிப்பிட வேண்டும்.

இன விடுதலையின் பெயரால் அரச விரோத செயற்பாடுகளை முன்னெடுத்த இந்த தேசிய விடுதலைப் போராட்டம் காரணமாக உணவுக்கான பயிர்த்தொழில் உற்பத்தியின் அடிஆதாரங்களை பாதுகாக்க முடியாமற் போனது மட்டுமன்றி பயிர்ச்செய்கைக்கான அரச வளங்கள் அதி உச்ச அளவில் துஷ்பிரயோகம் செய்யப்படுவதற்கும் வழியேற்படுத்தியது.

இதன் மற்றுமொரு காத்திரமான அனுபவமாய் அமைந்தது - தமக்கு வசதியாக விடுதலை அமைப்புக்களை மட்டுமன்றி அரச நிர்வாகத்தின் மொத்த கட்டமைப்பையும் எவ்வாறு ஏமாற்றி தவறாக வழிநடத்தலாம் என்பதை இதில் தொடர்புபட்ட அரச அதிகாரிகள் கற்றுத் தேறியிருப்பதாகும்.

போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட இந்த 6ஆண்டு காலத்தில் வடக்கு கிழக்கின் தமிழ் சூழலில் பயிர்ச்செய்கை முன்னெடுப்பில் எவ்வாறான ஒரு அணுகுமுறை பின்பற்றப்பட வேண்டுமென்பதை அரசுத்தலைமைக்கு முன்வைக்க தவறியதில் இந்த அதிகாரிகளின் அரசியல் உள்நோக்கங்கள் தெளிவாக வெளிப்பட்டிருக்கின்றன.

போரில் பாதிப்புக்குள்ளான மக்களுக்கென வடக்கில் வாழ்வாதாரத்தின் பெயரால் பயிர்ச்செய்கைக்காக அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்ட உதவிகள் மற்றும் கடன் திட்டங்கள் இப்போது என்ன நிலையில் இருக்கின்றன என்பது இதற்கு மிகச் சிறந்த உதாரணம்.

இதில் விவசாயத்தையே முழு நேரமாகக் கொண்டுள்ளவர்களுக்கென கிராம மட்டத்தில் தொடங்கி மாவட்டம், மாகாணம் வரை உருவாக்கப்பட்ட சட்ட ரீதியான தொழிற்சங்க கட்டமைப்புக்கள் சீரழிவான ஒரு நிலைக்கு தள்ளப்பட்டிருப்பதும் இந்த நிலைமைக்கு பிரதான காரணம்.

ஒரு கால ஒழுங்கில் இந்த விவசாயிகளுக்கான புதிய நிர்வாகங்ளை தேர்ந்து கொள்வதில் கடைப்பிடிக்கப்படும் திட்டமிட்ட கால தாமதமும் இழுத்தடிப்பும் சம்பந்தப்படும் அதிகாரிகளால் நீண்ட காலமாகவே மேற்கொள்ளப்படுவதை இந்த அமைப்பு வடிவங்களை முறையாக பேணவென போராடி வரும் விவசாய தொழிற்சங்க பிரதிநிதிகள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

தாம் கூறுபவை எல்லாவற்றுக்கும் தலையாட்டுபவர்களையே நிர்வாகத்தில் தொடர்ந்திருக்க வழிவகைளை மேற்கொள்வது, அனைத்து விவசாயிகளும் ஒன்றுகூட முடியாத சந்தர்ப்பங்களில் அவர்களுக்கான கூட்டங்களை ஒழுங்கு செய்வது, பயிர்த் தொழிலில் ஈடுபடாதிருப்பவர்களுக்கும் அரசின் உதவிகளை சட்ட ஒழுங்கு விதிகளுக்கு முரணாக கிடைக்க வழிசெய்வது, மொத்தத்தில் கிராம மட்டத்திலான இந்த தொழிற்சங்க அமைப்புக்கள் சீராக இயங்காமற் போவதையே இந்த அதிகாரிகள் கண்டும் காணாமல் இருப்பது ஆகியன இந்த அதிகாரிகளின் செயற்பாடுகளில் சிலவாகும்.

இந்த நிலைமையின் பிரதான விளைவு, எந்தவித பாதுகாப்புமற்ற ஒரு சூழலில் தனது வாழ்வாதாரத்துக்கான இப்பயிர்த்தொழிலை முன்னெடுக்க ஒரு விவசாயி நிர்ப்பந்திக்கப்பட்டிருப்பதாகும்.

ஒரு பயிரை நாட்டுவதற்கான விதையை பெறுவதிலிருந்து அதற்காக தேவைப்படும் இடைத்தர உபகரணங்களை தரமானவையாக நியாய விலையில் பெற்றுக் கொள்வது, அறுவடையான தனது உற்பத்திக்கு சந்தையில் நல்ல விலையை பெற்றுக் கொள்வது வரை அவனது எல்லா முயற்சிகளுமே எந்தவித பாதுகாப்போ உத்தரவாதமோ இல்லாத ஒரு ஜீவ மரண போராட்டமாகவே நடந்து கொண்டிருக்கிறது.

விவசாயி எதிர்கொள்ளும் இந்த நெருக்கடி குறிப்பாக குடாநாட்டின் அனைத்து விவசாயிகளும் எதிர்கொள்ளும் பரந்துபட்ட ஒரு விவகாரமாக இப்போது உணரப்பட்டிருக்கும் நிலையில் தாம் அனைவரும் கூட்டாக தம்மை முறையாக பிரதிநிதித்துவம் செய்யும் ஒரு அமைப்பின் கீழ் ஒன்றுபடுவதற்கான அவசியத்தை இப்போது உணரத் தலைப்பட்டிருக்கிறார்கள்.

குறிப்பாக வடக்கு மாகாணம் தழுவி ஒன்றுபடுவதற்கான இந்த அவசியம் காலத்தின் கட்டாயமென்பதையும் விவசாயிகள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

# சரியான பாதை

அடர்ந்த பெரிய காடு. அக் காட்டில், பல மிருகங்கள் இருந்தன. எனவே, அச்சப்பட்டு யாரும் காட்டுக்குள் செல்வதில்லை.

அதனால் காடு அழியாமல் செழிப்பாக இருந்தது. அதைச சார்ந்து வளமான ஊர்களும் இருந்தன. காட்டுக்குச் செல்லும் வழியில் ஒரு குடிசை. அதில் வசித்த மாடசாமியிடம் இரண்டு பன்றிகள் இருந்தன. அவை ஈன்ற குட்டிகளை விற்று, அவன தன் வாழ்க்கையை நடத்தி வந்தான்.



அவற்றை வளர்ப்பதில், அவன் தனிக் கவனம் எதுவும் எடுத்துக் கொள்வதில்லை.

பன்றிகள் ஊரைச் சுற்றித் திரிந்து, மனிதக் கழிவுகளை உண்டு தாமாகவே வளர்ந்து விடும.

சரியான பருவம் வந்ததும், குட்டிகளை நல்ல விலைக்கு விற்றுவிடுவது மாடசாமியின் வழக்கம்.

ஒருமுறை தாய்ப்பன்றி வழக்கம் போல் பல குட்டிகளை ஈன்றது. அவை உர்... உர் என்று உறுமியபடி ஊரைச் சுற்றித் திரிந்தன.

குட்டிகளும் கிடுகிடுவென வளர்ந்தன. விற்பனைக்கு ஏற்ற வகையில் இருந்தன. ஆதலால், பன்றிகளை விற்றுவிடத் திட்டமிட்டான் மாடசாமி.

குடிசையின் பின்புறம் படுத்திருந்த ஒரு பன்றிக்குட்டியைப் பிடிக்க, மாடசாமி பதுங்கிப் பதுங்கி மெதுவாகச் சென்றான். அவன் மனைவி மாரியும் அவனுக்கு உதவ வந்தாள்.

என்னதான் ரகசியமாகப் பதுங்கி வந்தாலும் எப்படியோ கவனித்து விட்ட குட்டிப்பன்றி, சட்டென எழுந்து ஓடியது.

விடாமல் விரட்டிக்கொண்டே ஓடினான் மாடசாமி. அவன் மனைவி மாரியும் பின்னாலேயே ஓடிவந்தாள். தனக்குத் தெரிந்த நாலு தெருவுக்குள் நுழைந்து ஓடிய பன்றி, ஊரைவிட்டுக் காட்டுக்குள் ஓடத் தொடங்கியது.

பன்றியின் பின்னாலேயே ஓடி ஓடிக் களைத்த மாடசாமி சோர்ந்து போனான். மனைவி மாரியிடம், இரவு எப்படியும் தானே வீட்டுக்கு வரும், அப்பப் பிடிச்சுக்கலாம், வா! என்று சமாதானம் சொனனான். காட்டுக்குள் செல்ல அஞ்சி இருவரும் வீட்டுக்குத் திரும்பினர்.

காட்டுக்குள் ஓடிய குட்டிப் பன்றியோ வழி தெரியாமல் அலைய நேர்ந்தது. எந்தப் பக்கம் பார்த்தாலும் அடர்ந்த பசுமையான செடிகளும், மரங்களும் மட்டுமே கண்ணுக்குத் தெரிந்தன.

அந்த நேரத்தில் உர்... உர்... என உறுமல் ஓசை!

குட்டிப் பன்றி, ஓசை வந்த திசையில் திரும்பிப் பார்த்தது.

ஆகா, என்ன ஆச்சரியம்! தன்னைப் போலவே ஒரு பெரிய பன்றி சற்று தூரத்தில் நிற்பது தெரிந்தது! உடனே, குட்டிப் பன்றி விறுவிறுவென அதன் அருகில் ஓடியது.

காட்டுப்பன்றி ஊருக்குள்ளிருந்து ஓடி வந்த குட்டிப் பன்றியைப் பார்த்ததுமே, ஏய்! அப்படியே நில்... நீ யார்? எங்கே இருந்துவந்தாய்? என மிரட்டலுடன் கேட்டது.

குட்டிப்பன்றிக்கு ஒன்றும் புரிய வில்லை. மாபெரும் வீரனிடம் மாட்டிய கோழை போல் பயந்து நடுங்கியது. பிறகு, நான் பக்கத்து ஊரிலிருந்து வழி தெரியாமல் வந்து விட்டேன். உருவத்தில் என்னைப் போலவே இருக்கும் நீதான எனக்கு உதவி செய்ய வேண்டும்! என்று கெஞ்சியது.

ஊர்ப் பன்றியா?... சீ... உடனே இந்தக் காட்டை விட்டு ஓடிப் போய்விடு! இல்லை என்றால் உன்னைக் கொன்று விடுவேன், ஓடிப் போ! உறுமியது காட்டுப் பன்றி.

குட்டிப்பன்றி பரிதாபமாய்ப் பார்த்தது.

நான் வழி தெரியாமல் வந்து விட்டேன் எனக்கு உதவக கூடாதா?... நீண்ட நேரம் சுற்றிய தால் பசிக்கிறது... இங்கே சாப்பிட எதுவுமே இல்லையே!... என்ன செய்ய...? என்று இரக்கம் கனியக கேட்டது.

குட்டிப் பன்றியை ஏளனமாய்ப் பார்த்தது காட்டுப் பன்றி: அட மடப் பன்றியே! இந்தக் காட்டிலா உண்பதற்கு எதுவு மில்லை என்கிறாய்?

ஆமாம், மரம் செடி கொடி தவிர இங்கே என்ன இருக்கிறது?

மனிதனோடு இணைந்து ஊருக்குள் சென்றதால் உன் நிலையே மாறிவிட்டது. இந்தக் காட்டில் எங்கே தோண்டினாலும் கிழங்குகள் கிடைக்கும்! அதைச் சாப்பிட்டுத்தான் நான் இப்படி வாட்ட சாட்டமாக இருக்கிறேன்! நீயோ, மனிதனின் கழிவுகளை மட்டும் சாப்பிட்டுப் பழகியதால் உணவைத் தேடித் தோண்டி உண்ணும் இயல்பைக் கூட இழந்து நிற்கிறாய்!.. உன் நிலையைக் கண்டு நான் வருத்தப்படுகிறேன்! கோபப்படுகிறேன்! என முழங்கியது காட்டுப் பன்றி.

நாட்டுப் பன்றிக்குட்டிக்குப் பேச நா எழவில்லை. எனக்குப் பசிக்கும் போதெல்லாம் நிலத்தைத் தோண்டி கிழங்கை உண்பதால், என் உணவில் எந்தக் கலப்படமும் இல்லை. ஆனால் உனக்குப் பசி வந்தால் மனிதனின் பின்னால் ஓட வேண்டும்... சீ... நினைத்தாலே அருவருப்பாய் இருக்கிறது. அது உனக்குப் பழகி விட்டது.

காட்டுக்குள் இருக்கும் என் நிலை வேறு... ஊருக்குள் இருக்கும் உன் நிலை வேறு... ஆகையால் எந்த நாளும நீ என் இனமாக முடியாது. எப்போது நீ உன் நிலையை உணர்ந்து பழக்கத்தை மாற்றிக் கொள்கிறாயோ, அப்போது தான உன் இழிநிலை மாறும். அதோ தெரிகிறதே பனைமரம். அந்த வழியாக ஊருக்குள் போகும பாதை இருக்கிறது... ஓடிப் போய்விடு! என்றது காட்டுப்பன்றி.

என் இழிநிலை புரிகிறது. நான் இங்கேயே இருந்து விடுகி றேன்! பூமியைத் தோண்டி உன்போல் உழைத்து உணவு தேடிக் கொள்கி றேன்! தயவு செய்து என்னை விரட்டிவிடாதே! என்று மன்றாடியது குட்டிப் பன்றி.

காட்டுப் பன்றிக்குக் கொஞ்சம் கனிவு ஏற்பட்டது. என் றாலும், ஆறறிவு படைத்த மனிதனோடு இருக்கும் உன் இனத்துக்கு மரியாதை இழந்து, மானம் இழந்து வாழ்வது வாழ்க்கை இல்லை என்பதை எடுத்துச் சொல்ல நீ ஊருக்குள் போகத்தான் வேண்டும்! என்று கட்டளையிடுவதுபோல் பேசியது.

அதை உணர்ந்த குட்டிப் பன்றி, காட்டுப் பன்றி காட்டிய வழியில் நடந்தது.

## தெரியுமா?




புளோவரைத் தவிர பிற பறவைகளை இரையாகச் சாப்பிட நினைக்கும் முதலை, தன்மீது குச்சிகளைப் பரப்பியபடி, அமைதியாக நீரில் காத்திருக்கும். கூடுகட்ட குச்சிகளைக் தேடிவரும் பறவைகள் குச்சிகளை எடுக்க அருகில் வந்ததும் பிடித்துச் சாப்பிட்டு விடும்.



எகிப்திய கழுகுக்கு மிகவும் பிடித்தமான உணவு நெருப்புக் கோழியின் முட்டைகள் ஆகும். கடினமான ஓட்டையுடைய முட்டையை அலகால் கொத்தி உடைக்க முடியாது என்பதால் பெரிய பெரிய கற்களை முட்டைமீது தூக்கிப் போட்டு உடைத்துச் சாப்பிடும்.




## படம் பார்த்து வரைக



# போக்குவரத்து வசதிகளின்றி முட்கொம்பன் மக்கள் அவதி



(கிளிநொச்சி)

கிளிநொச்சி, பூநகரி பிரதேச செயலகத்துக்குட்பட்ட முட்கொம்பன் கிராமத்துக்கு போதிய போக்குவரத்து வசதிகள் இன்மையால் வைத்தியசாலை உள்ளிட்ட தேவைகளுக்காக மக்கள் நடந்து சென்று வருகின்றனர் என முட்கொம்பன் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் தெரிவித்தனர்.

இந்தக் கிராமத்தினூடாக கிளிநொச்சி நோக்கி காலை மற்றும் மாலை நேரங்களில் பஸ்கள் சேவையில் ஈடுபடுகின்றன. ஆனால், இடைப்பட்ட நேரத்தில் எவ்வித பஸ்களும் சேவையில் ஈடுபடுவதில்லை.

முட்கொம்பன் கிராமத்திலிருந்து 20 கிலோமீற்றர் தூரத்திலுள்ள பூநகரியின் மருத்துவமனை, பிரதேச செயலகம் ஆகியவற்றுக்கு பயணிப்பதில் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதனால், 10 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள அக்கராயன் மருத்துவமனைக்கு மக்கள் நடந்து சென்று வருகின்றனர். 530 குடும்பங்கள் வசிக்கும் இந்தக் கிராமததுக்கு மேலதிக போக்குவரத்துச சேவைகள் நடாத்தப்பட வேண்டும் என அபிவிருத்திச் சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.(160)

# நோன்பு தினத்தில் பழங்கள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

புனித மிகு ரமழான் மாதத்தின் முதல் நோன்பு கடந்த வியாழக்கிழமை இலங்கை பூராகவும் ஆரம்பமாகியுள்ளன.

நோன்பு திறக்கும் நேரத்தில் யாழ்.மானிப்பாய் வீதி மொஹைதீன் பள்ளிக்கு காரைநகர், தரைப் படைமுகாம் லெப்டினன் கேணல் சசிகா பெரேரா தலைமையில் படை வீரர்கள் 50 பேர் வரை வருகை தந்து நோன்பு திறப்பதில் கலந்து கொண்டார்கள்.

சம்பிரதாய முறைப்படி தேசிய கொடி ஏற்றப்பட்டு சமய நல்லுறவை பேணும் வகையில் படைத் தலைவரினால் பழங்கள் வழங்கப்பட்டன. அதே நேரம் முஸ்லிம்களின் நோன்பு தீறப்பதற்கான விருந்துபசாரத்திலும் முழுமையாக பங்கு பற்றினார்கள்.

நோன்பின் மகிமைபற்றிய பிரசங்கத்தை ஆலிம் மர்லின் சாஹிப் எடுத்துரைத்தார். இவ் ஒன்று கூடலில் பள்ளிவாசல்தலைவர் எம்.எல். லாபிர், செயுலாளர் பி.எஸ்.ச்ரபுல் அனாம், மற்றும் உலமாக்கள், மஹல்லாபிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (105)

# பொறியியலாளர் என ஏமாற்றி பருத்தித்துறையில் பண மோசடி

பொறியியலாளர் என தன்னை அறிமுகம் செய்து வீட்டின் கட்டடப் பணிக்கு மணல் தருவதாக கூறி மோட்டார் சைக்கிளில் அழைத்துச் சென்றவர், இடம் பெயர்ந்திருக்கும் குடும்பஸ்தர் ஒருவரிடமிருந்து ஒன்பதாயிரம் ரூபா பணத்தை ஒழுங்கையில் வைத்து சூறையாடிக் கொண்டு ஏமாற்றி சென்றுள்ளார்.

இத்துணிகர சம்பவம் அண்மையில் பட்டப்பகல்வேளை பருத்தித்துறை ஓராம் கட்டைப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது,

பச்சிலைப்பள்ளி பளையிலிருந்து இடம்பெயர்ந்து புலோலி கிழக்கு உத்திராவத்தை பகுதியில் வசித்து வரும் செ.சிவசங்கர் என்பவர், புலோலி கிராமக் கோட்டு வீதி யில் புதிய வீடு ஒன்றை அமைத்து வருகின்றார். இந் நிலையில், கடந்த வாரம் இவரது வீட்டுக்கு சென்ற ஒருவர் தன்னை பொறி யியலாளர் என்று அறிமுகம் செய்து அளவளாவிய பின்னர் உங் கள் வீட்டின் கட்டட வேலைக்கு இரண்டு லோட் மணல் தன்னால் வழங்க முடியும் என்றும், ஆசை வார்த்தை கூறியுள்ளார்.

அத்துடன் மணல் குவிக்கப் பட்டிருக்கும் இடத்தைக் காண்பிப்பதற்காக இடம் பெயர்ந்த குடும்பஸ்தரை தனது மோட்டார் சைக்கிளில் ஏற்றிச் சென்ற அவர பருத்தித்துறை ஓராம் கட்டை ஒழுங்கையில், வேறொரு கட்டடப் பணிக்கு குவிக்கப்பட்டிருந்த மண் குவியலை காண்பித்துள்ளார்.

மணல் பெறுவதில் பெரும் இக் கட்டான நிலை இருக்கும் இவ் வேளையில் குறித்த குடும்பஸ்தரும் பொறியியலாளரின் ஆசை வார்த்தையையும், செயற்பாடுகளையும் நம்பிய அதே வேளை அவரது மோட்டார் சைக்கிளில் தனது வீட்டுக்குச் சென்றார். அங்கு மனைவியிடம் ஒன்பதாயிரம் ரூபா பணத்தை பெற்றுக் கொண்டு மீண்டும் அவரது மோட்டார் சைக்கிளிலேயே மணல் குவியல் இருந்த இடத்தை நோக்கி பயணித்துக் கொண்டிருந்த சமயம், இடைவழியில் தனது மோட்டார் சைக்கிளை திடீரென நிறுத்திய பொறியியலாளர் மோட்டார் சைக்கிளில் எரிபொருள் முடிந்து விட்டது நான் எரிபொருள் நிரப்பிக் கொண்டு வருகின்றேன். வந்ததும் மணலை ஏற்றி இறக்க ஏற்பாடு செய்கிறேன் எனக் கூறியவர் இடம்பெயர்ந்த குடும்பஸ்தரின் சேட் பொக்கற்றிலிருந்த ஒன்பதாயிரம் ரூபா பணத்தையும் சூறையாடிக் கொண்டு சென்றுள்ளார்.

மணல் கிடைக்கும் என்ற மகிழ்ச்சியில் பாதையில் பல மணிநேரம் காத்து நின்ற இடம் பெயர்ந்த குடும்பஸ்தர் மணலுமின்றி, பணமும் இன்றி ஏமாற்றத்துடன் கால் நடையாக தனது வீட்டைச் சென்றடைந்தார்.

பொறியியலாளர் என்று அறிமுகம் செய்த ஏமாற்றுப் பேர்வழிக்கு சுமார் 32 வயதிருக்கும், என்றும் தாடி ஓரளவு வளர்த்திருந்தார் என்றும், 'அப்பாச்சி' இன வெள்ளை நிறமுடைய 3757 இலக்க மோட்டார் சைக்கிளையே பயன்படுத்தியதாக பணத்தை பறிகொடுத்தவர் தெரிவித்துள்ளார். (166)

# பதிவிறக்கப் பெட்டகம்

லண்டனில் ஒரு தொலைக்காட்சிப் பேட்டியில், "எல்லோருக்கும் மைத்திரிபாலவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் என்ன இருக்கின்றது என்பதுதான் தெரியும். ஆனால், என்ன அதிலிருந்து நீக்கப்பட்டதென்பது தெரியாது. ஒற்றையாட்சி என்கின்ற பதத்தை நீக்குவதற்கான காரணகர்த்தாவாக நானதான் இருந்தேன்" என்றார் த.தே.கூ நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன். ஆனால், ஜாதிக ஹெல உறுமயவுடன் ஜனாதிபதி மேற்கொண்ட ஒப்பந்தம் ஒற்றையாட்சியை பயங்கரவாதத்திலிருந்து காப்பாற்றும் ஒப்பந்தம் என்றுதான் நாம் அறிந்திருக்கின்றோம். மேலும், பிரதம மந்திரியாக ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் தான் ஆற்றிய முதல் உரையில் ஒற்றையாட்சியை வலியுறுத்தியபோது அங்கு இருந்த சுமந்திரன் மைத்திரிபாலவின் தேர்தல் விஞ்ஞாபனத்தைச் சுட்டிக் காட்டி அதனைத் திருத்தவில்லையே. அல்லது அதனையும் இரகசியமாகத்தான் செய்தாரோ?

– சாந்தி சச்சிதானந்தம்

தமிழர் பிரதிநிதித்துவத்தைப் பற்றி ஒவ்வொரு தேர்தலுக்கு முன்னும் பேசப்படும். அவ்வாறே முஸ்லிம் பிரதிநிதித்துவத்தைப் பற்றியும் பேசப்படும். ஆனால் வென்றவர்கள் யாருடைய பிரதிநிதிகளாக இருந்துள்ளனர் என்று விசாரித்திருக்கிறோமா? தேர்தல்களில் வெல்ல ஏகப்பட்ட பணம் தேவை. அது எங்கிருந்து வருகிறது என்று விசாரித்திருக்கிறோமா? எனவே தமிழர் பிரதிநிதித்துவம் என்பது தமிழரிடையே உள்ள இனஉணர்வுக்குப் போடப்படும் ஒரு தூண்டிலே ஒழிய வேறல்ல என்பது நமக்கு விளங்க வேண்டும்.

– கோகர்ணன்

பொதுத் தேர்தலுக்குப் பின் தேசிய அரசாங்கத்தின் மூலம் என்று ரணில் கூறியதையே புதிய பாராளுமன்றத்தில் இனப் பிரச்சினைக்குத் தீர்வு என்று சம்பந்தன் சொல்கிறார். தேசிய அரசாங்கம் அமையும் என்றும் அது தீர்வை நடைமுறைப்படுத்தும் என்றும் கொண்டுள்ள நம்பிக்கையின் அடிப்படையில் இவ்வாறு கூறுகின்றாரென்றால் அவர் சமகால யதார்த்தத்தையும் புரிந்துகொள்ளவில்லை, பிரதான கட்சிகளின் நிலைப்பாட்டையும் விளங்கிக் கொள்ளவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியும் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தீர்வை முன்வைக்கப் போவதில்லை. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் தீர்வை முன்வைக்கப் போவதில்லை. தமிழ் மக்களின் வாக்குகளுக்காக மேலோட்டமாகச் சில வார்த்தைகளைக் கூறலாம். கூட்டமைப்பும் அடுத்த பாராளுமன்றத்தில் எவ்வாறான தீர்வு என்று சொல்லத் தயாராக இல்லை... என்னவென்று தெரியாத தீர்வுக்காக தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டிய நிலை.

– சிவா சுப்பிரமணியம்

மேற்குலகின் சதிராட்டத்துக்குள் நாம் சிக்கியிருந்தாலும் எமது அடிப்படைப் பிரச்சினைகளை அரசாங்கங்களோடு பேசியாக வேண்டியது அவசியம். அதனைத் தவிர்ப்பது என்பது என்றைக்குமே பலன்களைத் தராது. பேச்சுக்களில் நம்பிக்கையில்லாவிட்டாலும் பேச்சுக்கள் எத்தனை தடவை தோல்வியடைந்தாலும், நாம் மீண்டும் மீண்டும் நேரடிப் பிணக்காளர்களோடு பேச வேண்டியிருக்கின்றது. அவர்களோடு பேசுவதைத் தவிர்ப்பது இராஜதந்திர ரீதியிலும் வெற்றிகளைப் பெறுவதற்கான வழிகளை அடைத்துவிடும்.

– புருஜோத்தமன் தங்கமயில்

1947 பொதுத் தேர்தலில் இருந்து தமிழ் காங்கிரஸ், தமிழரசுக்கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி இன்றுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என பெயர்கள் மாறினாலும், அவைகளின் இனவாத, பிற்போக்கு கொள்கைகளில் மாற்றம் வரவில்லை. இருந்தும் 'சுற்றிச் சுற்றி சுப்பற்றை கொல்லைக்குள்' என்பது போல தமிழ் மக்கள் வேறு எந்த மாற்றுத் தலைமையையும் ஆதரிக்காது இந்த தவறான தலைமைகளையே ஆதரித்து வந்துள்ளனர். தமிழ் மக்களின் இந்த மாறா நிலையியல்வாதம் அவர்களது இரத்தத்துடனும் மரபுடனும் ஊறியதா அல்லது பழக்க தோசமா என்பது புரியாத புதிராக இருக்கிறது. உலகில் இவர்கள் மட்டும் ஏன் மற்றைய இனங்களைவிட எல்லா விடயங்களிலும் வித்தியாசமாக இருக்கிறார்கள் என்பது உயிரியல் விஞ்ஞானிகளுக்கும், மானிடவியல் ஆராய்ச்சியாளர்களுக்கும் உரியது. இருந்தாலும் இந்த வழிமுறை அவர்களுக்கு ஒரு போதும் பயனளிக்கப் போவதில்லை என்பதை சொல்லித்தான் ஆக வேண்டும். அதுமட்டுமல்ல, அவர்கள் மாற்று கொள்கைகளையும், மாற்று தலைமைகளையும் பரீட்சித்துப் பார்க்க வேண்டிய தேவை இன்று உருவாகியுள்ளது என்பதையும் சுட்டிக்காட்டுவது அவசியம்.

– வானவில் தலையங்கத்தில்

# தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பிடம் தீர்வு இல்லை

## நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார்





தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான திட்டங்கள் எதுவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் இல்லை. ஏனெனில் அரசாங்கத்திடம் அதுசார்ந்த எந்த வலியுறுத்தல்களையும் அவர்கள் இதுவரை விடுக்க வில்லை என நாடாளுமன்ற உறுப்பினரும நர்டாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார் கடந்த சனிக்கிழமை தொல்புரம் கலைவாணி சனசமூகநிலைய நிர்வாகத்தினரைச் சந்தித்து கலந்துரையாடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார் அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில்

கடந்த கால யுத்த வடுக்கள் இன்னமும் எமது மக்களின் மனங்களிலிருந்து மாறவில்லை யுத்தத்தின் முடிவில் எதிர்கொண்ட பாரிய தாக்கங் களும் இழப்புக்களும் மக்களின் மனங்களில் ஆழப்பதிந்துள்ளன இதனால் இவற்றுக்கெல்லாம் பொறுப்பானவர் என்றவகையில் மகிந்தராஜபக்ஷ அரசாங்கத்தின் மீது தமிழ் மக்களுக்கு இயல்பாகவே வெறுப்புணர்வு காணப்பட்டது.


இது ஒரு புறமிருக்க ஜனாதிபதித் தேர்தலில் மாற்றத்தைக் கொண்டு வருவதனூடாக தமிழ் மக்கள் இதுவரை கால மும் எதிர்கொண்ட பிரச்சினைகள் அனைத்திற்கும் தீர்வு காணமுடியும் என்ற நம்பிக்கை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரால் மக்களுக்கு ஊட்டப்பட்டது அதன் அடிப்படையில் தமிழ் மக்கள் இன்றைய ஜனாதிபதிக்கு வாக்களித்தனர் ஜனாதிபதித்தேர்தலில் மைத்திரிபால சிறிசேன அவர்கள் வெற்றி பெற்றதும் அவரது வெற்றிக்கு பெரும் பங்காற்றியவர்கள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினரே என அவர்கள் வெளிப்படையாகவே உரிமைகோரியிருந்தனர்.

இந்நிலையில் புதிய அரசாங்கத்தால் பிரகடனப்படுத்தப்பட்ட 100நாள் வேலைத்திட்டம் முடிவுக்கு வந்துள்ளபோதும் தமிழ்மக்களின் எதிர்பார்ப்புக்கள் எவையும் நிறைவேற்றப்படவில்லை. ஒருசில பொருட்களுக்கான விலைகுறைப்பை எதிர்பார்த்து தமிழ் மக்கள் வாக்களிக்கவில்லை தமிழ் மக்களுக்கான நிறைவான அரசியல் தீர்வு மற்றும் படைக்குறைப்பு,காணாமற் போனோரைக்கண்டுபிடிப்பது தொடர்பான விடையங்களை முன்னெடுத்தல், நீண்டகாலமாக சிறையில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை ஆகியவற்றுடன் யுத்த பாதிப்பை எதிர்கொண்ட மக்களுக்கு இயல்பு வாழ்வை ஏற்படுத்தி தொடர்ந்தும் அபிவிருத்தியினூடாக அவர்களின் வாழ்வை கட்டியெழுப்புதல் உள்ளிட்ட பல விடயங்களை அடிப் படையாகக் கொண்டே தமிழ் மக்கள் வாக்களித்தனர் ஆனால் ஆட்சி மாற்றம் நிகழ்ந்து ஆறு மாதங்களை எட்டுகின்ற நிலையிலும் தமிழ் மக்களின் எவ்விதமான எதிர்பார்ப்புக்களுக்கும் தீர்வு கிட்டவில்லை என்றார்.

மு.ப. 10.30 மணிக்கு தொல்புரம் கலைவாணி சனசமூக நிலையத்தில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் வலிகாமம் அமைப்பாளரும வலி.மேற்கு பிரதேசசபை உறுப்பினருமான பாலகிருஸ்ணன் (ஜீவன்) வலிமேற்கு பிரதேச சபை உறுப்பினர் செல்வகுமார் ஆகியோரும் மற்றும் கலைவாணி சனசமூக நிலையத்தின் தலைவர் சுஜீந்தன் அதன் செயலாளர் றொபின் பொருளா ளர் பிரசாத் மற்றும் உபதலைவர் சோதிராசா ஆகியோரும் மற்றும் அங்கத்தவர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

இதேவேளை சங்கானை ஸ்ரீபாரதி சனசமூகநிலைய நிர்வாகத்தினரையும் மற்றும் அராலி வடக்கு பாரதி சனசமூகநிலைய நிர்வாகத்தினரையும் விளையாட்டுக்கழக அங்கத்தவர்களையும் அப்பகுதி மக்களையும் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் அவர்கள் சந்தித்து கலந்துரையாடியதோடு அப்பகுதி மக்களின் தேவைகள் மற்றும் பிரச்சினைகள் குறித்தும் கேட்டறிந்தார்.

# 15,490 டெங்கு நோயாளர்கள்



(கொழும்பு)

கடந்த 6 மாத காலத்திற்குள் டெங்கு நோயாளர்கள் என சந்தேகிக்கப்படும் 15,490 பேர் தொற்றுநோய் தடுப்பு பிரிவில் பதிவாகியுள்ளனர்.


அந்நோயாளர்களில் 47.12 வீதமானமவர்கள் மேல் மாகாணத்திலேயே பதிவாகியுள்ளனர். அதிகமான நோயாளர்கள் நான்காம் வாரம் பதவாகியுள்ளனர்.

நுளம்புகள் பரவும் சாத்தியமுள்ள இடங்களை தொடர்ச்சியாக துப்புரவுபடுத்த வேண்டிய தேவை உள்ளதென்பது இதனூடாக தெளிவாகிறது. மேலும் காய்ச்சல் 3 தினங்களுக்கு பின்னரும் தொடருமாயின் உடனடியாக மருத்துவர் உதவியை நாடுமாறு தொற்றுநோய் தடுப்புப் பிரீவினர் மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளர்.

# ஜெலி மீன்கள் மார்பில் தாக்கினால் மரணம்

## உல்லாசப்பயணிகளுக்கு தடை





(கொழும்பு)

மாத்தறை- பொல்ஹேன கடற்கரைப் பகுதியில் ஜெலிமீன்கள் படையெடுத்துள்ளமையினால் மறு அறிவித்தல் வரையில் அங்கு செல்லவேண்டாம் என பொலிஸார் உல்லாசப்பிரயாணிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

ஜெலிமீன்கள் தாக்குதலுக்குள்ளான 4 உல்லாசப்பிரயாணிகள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஜெலிமீன்கள் மார்புப்பகுதியில் தாக்கினால் மரணம் சம்பவிக்கும் அபாயம் காணப்படுவதாக மாத்தறை பொலிஸார் தெரிவித்தனர்.

ஜெலி மீன்களில் விஷத் தாக்கம் உள்ளமையினால் பொல்ஹேன கடற்கரை பிரதேசத்திற்கு உல்லாசப்பிரயாணிகளின் வருகையை தடை செய்ய மாத்தறை பொலிஸார், அனர்த்த முகாமைத்துவப் பிரிவு, மாத்தளை சுகாதார அதிகாரி அலுவலகம் மற்றும் மாநகரசபை ஆகியன இணைந்து தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உக்ரேனில் உதயங்க வீரதுங்க குற்றச்சாட்டுகளுக்கும் மறுப்பு



தாம் உக்ரேனில் வாழ்ந்து வருவதாக ரஷ்யாவிற்கான முன்னாள் இலங்கைத் தூதுவர் உதயங்க வீரதுங்க அறிவித்துள்ளார். பிபிசீ செய்திச் சேவைக்கு கடிதம் ஒன்றின் மூலம் அவர் அறிவித்துள்ளார்.

உக்ரேன் கிளர்ச்சியாளர்களுக்கு ஆயுதங்களை விற்பனை செய்ததாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் முற்று முழுதாக பொய்யானவை எனவும் இலங்கை அரசாங்கம் பொய்யான குற்றச்சாட்டை சுமத்தி வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமக்கு எதிராக எவ்வித குற்றவியல் விசாரணைகளும் உக்ரேன் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படவில்லை எனவும் இது குறித்து உறுதியளித்த ஆவணமொன்றை அந்நாட்டு அரசாங்கம் தமக்கு வழங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

உக்ரேன் தலைநகர் கிவில் தாம் வாழ்ந்து வருவதாக உதயங்க தெரிவித்துள்ளார். குற்றச்செயலில் ஈடுபட்டிருந்தால் அங்கு வாழ்வதற்கு அனுமதிக்கப்பட்டிருக்குமா என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

மொழிபெயர்ப்பாளராக கடமையாற்றிய நொயல் ரணவீர வீதி விபத்தில் உயிரிழந்ததாகவும் இதனால் விசாரணைகள் நடத்தப்படவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

உக்ரேனும் ரஸ்யாவும் தமக்கு ஆதரவளித்து வருவதாக எழுத்து மூல உறுதி அளிக்கப்பட்டுள்ளது என் அவர் குறிப்பிட்டுள்ளார். அரசியல் பழிவாங்கல்கள் காரணமாக தாம் இலங்கைக்கு திரும்ப விரும்பவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, உதயங்கவிற்கு எதிரான குற்றச்சாட்டுக்களை மறுக்கவோ ஏற்றுக்கொள்ளவோ இல்லை என உக்ரேன் அரசாங்கம் முன்னதாக பி.பி.சீக்கு அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தேர்தலில் போட்டியிடுமாறு குவியும் அழைப்புகள்

## திஸ்ஸ அத்தநாயக்க

(கொழும்பு)

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுமாறு பல கட்சிகள் தனக்கு அழைப்பு விடுத்துவருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளரும், முன்னாள் சுகாதார அமைச்சருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஊடகவியலாளர்களை சந்தித்த போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அங்கு அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில.

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுமாறு பல கட்சிகள் எனக்கு அழைப்பு விடுத்துவருகின்றன. ஏற்கனவே சில கட்சிகளுடன் தேர்தலில் போட்டியிடுவது குறித்து பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தேர்தலில் போட்டியிடுவது குறித்தும் எந்தக் கட்சியில் போட்டியிடுவ்து என்பது குறித்தும் இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை எனத் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளராக பதவி வகித்து வந்த திஸ்ஸ அத்தநாயக்க ஜனாதிபதித் தேர்தல் காலத்தில், முன்னாள் ஜனாதிபதி மகிந்தவுக்கு ஆதரவளித்ததுடன், சுகாதார அமைச்சராகவும் நியமனம் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

# வடக்கில் களப்புக்களின் எல்லைகளை வரையறுப்பதற்கு நடவடிக்கை

நந்திக்கடல் உள்ளிட்ட வடமாகணத்தின் பிரதானமாக காணப்படும் களப்புகளின எல்லைகளை வரையறுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கரையோர பாதுகாப்புத் திணைகளம் தெரிவித்துள்ளது.

களப்புகளை பாதுகாக்கும் நோக்கிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பிரபாத் சந்திர கீர்த்தி தெரிவித்துள்ளார்.


இதேவேளை களப்புகளை எல்லைப்படுத்துவதன் ஊடாக அதனை அண்மித்து வாழும் மீனவர்களின் பொருளாதார நிலை மேம்படுதோடு மீன்பிடியில் ஏற்படக்கூடிய பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ள முடியும்.

நாடளாவிய ரீதியில் சுமார் 74 பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள களப்புகளை எல்லைப்படுத்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது

அந்த வகையில் கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மற்றும் தம்பலகாமம் பகுதிகளில் உள்ள களப்புகளின் எல்லை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை இந்த நடவடிக்கையானது நாடு பூராகவும் உள்ள அனைத்து களப்புகளிலும் முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(06) படத்தில் ஒரே அளவிலான சதுரமுகிகள் பல அடுக்கப்பட்ட ஒழுங்கமைப்பைக் காணலாம். மறைந்திருக்கும் சதுரமுகிகள் மற்றைய சதுரமுகிகளைத் தாங்குவதற்கு மட்டுமே உள்ளன



35. இந்த ஒழுங்கமைப்பில் எத்தனை சதுரமுகிகள் உள்ளன
1) 9 2) 10 3) 13

36. இவ்வமைப்பில் எத்தனை சதுரமுகிகள் மறைந்துள்ளன
1) 5 2) 4 3) 3

(07) 37ஆம், 38ஆம் வினாக்கள் உண்மைகள் மற்றும் அபிப்பிராயங்கள் ஆகியவற்றுக்கிடையே உள்ள வேறுபாட்டை அடிப்படையாகக் கொண்டன

37. பின்வருவனவற்றுள் எது ஒரு அபிப்பிராயமாகும்?
1) சோறு மாப்பொருள் அடங்கிய உணவாகும்
2) சோறு இலங்கையின் பிரதான ஆகாரம்
3) சோறு சம்பலுடன் சுவையானது

38. பின்வருவனவற்றில் எது உண்மை?
1) இறைச்சி புரதம் அடங்கியுள்ள ஓர் உணவு
2) இறைச்சி மட்பாண்டப் பாத்திரங்களில் சமைக்கும் போது சுவையானது
3) இறைச்சி சிறுவர்களால் மிகவிட விரும்பப்படுகிறது

(08) கீழே தரப்பட்ட கணிதச்செய்கையை அவதானித்து விடை தருக


கத்தரிக்காய் 1kg
வெண்டிக்காய் 1kg
ரூபா 60.00


வட்டக்காய் 1kg
கத்தரிக்காய் 1kg
ரூபா 65.00


வெண்டிக்காய் 1kg
வட்டக்காய் 1kg
ரூபா 75.00

39. கத்திரிக்காய் 1kg எவ்வளவு?
1) ரூபா 35.00 2) ரூபா 25.00 3) ரூபா 40.00

40. வெண்டிக்காய் 1kg எவ்வளவு?
1) ரூபா 35.00 2) ரூபா 30.00 3) ரூபா 15.00

## நேற்று பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்

| | | | |
|---|---|---|---|
| (01) 1. இலங்கை | 2. வடக்குதிசையில் | 3.. இந்தியா | 4. சிங்கப்பூர், மலேசியா |
| 5. ஆசியா | 6. அருகில், பக்கத்தில் | 7. காடு | 8. இலங்கை |
| 9. 1947ம்ஆண்டு | 11. குஞ்சு | 12. கத்தும் | 13. உழவுத்தொழில் |
| 14. | 15. ற | 16. ன | 17. தேயிலை |
| 18. 21 நாட்கள் | 19. ஓவியன் | 20. நூலகம் | (02) 21. மரக்கறி |
| 22. முத்திரை | 23. மண்வெட்டி | 24. பணம் | 25. வதிவிடச்சான்றிதழ் |
| (03) 26. 3 | 27. 1 | 28. 2 | 29. 3 |
| 30. 2 | 31. 1 | 32. 2 | 33. 1 |
| 34. 1 | (04) 35. 10+7, 14+3, 13+4 | | |
| 36. 17 | 37. 18 | 38. 934 | 39. 13 |
| 40. 48.00 | 41. 587 | 42. 23 | 43. 2தடவை |
| 44. 2மணித்தியாலம் 30நிமிடம் | (05) 45. புலமைத்தேர்வு | 46. மாதம் ஒரு முறை | 47. 30.00 |

**இப் பயிற்சி வினாக்களின் விடைகள் நாளை வெளியாகும்**



## தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை முன்னோடி - 2015

பகுதி - I
1 மணி 30 நிமிடம்


# கல்வி முரசு



எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க


(01) 1ஆம், 2ஆம் வினாக்கள் ஏதோ ஒரு விதத்திற்கேற்ப சோடிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது அதற்கேற்ப சரியாகப்பிரிக்கப்பட்ட கூட்ட விடையின் கீழ் கோடிடுக

01.





1) A யும் C 2) B யும் E 3) D யும் F

02.




1) A யும் F 2) B யும் D 3) C யும் E

03. ஒத்த உருச்சோடியைக் கொண்ட விடையின் கீழ் கோடிடுக



1) A யும் B 2) B யும் C 3) A யும் C

புள்ளிக்கோட்டில் வரும் விடையைக் கண்டு கோடிடுக

04.

| | | | | |
|---|---|---|---|---|
| 16 | 25 | 33 | 40 | ---- |

1) 44 2) 46 3) 52

05.


| | | | | |
|---|---|---|---|---|
| 96 | 87 | 79 | 72 | ---- |

1) 68 2) 66 3) 58


(02) கீழே தரப்பட்ட வசனங்களில் சில சொற்கள் உரிய முறையில் இல்லாது மாற்றியும் அதற்கு அடையாளங்கள் மாறியும் உள்ள அதற்குரிய சரியான அடையாளத்தைக் கண்டுபிடித்துக் கீறிடுக

- அம்மா இப்போ நன்றாக உணவு சமைப்பாள் - V ⊔ O X ◇
- அது இப்போ சரி வரும் - ⊙ ⊓ ∧ ⊔
- சுசி நன்றாக கறி சமைப்பாள் - < O ◇ ≠

06. சமைப்பாள் என்ற சொல்லிற்கான அடையாளம் எது?




07. இப்போ என்ற சொல்லிற்கான அடையாளம் எது?




08. உணவு என்ற சொல்லிற்கான அடையாளம் எது?



09. இத்தராசு சமநிலையில் உள்ளது எனின் தராசில் உள்ள படிகளுக்கு இடையிலான சரியான தொடர்பு எது?




10. புள்ளிக்கோட்டில் வரக்கூடிய எண் எதுவெனக் கண்டு கீறிடுக




1) 24
2) 27
3) 36

11. வினாக்குறி வந்துள்ள இடத்தில் வரக்கூடிய எண்ணைக் கண்டு கீறிடுக




1) 27
2) 30
3) 32

12. தளவாடி ஒன்றின் முன்னால் கடிகாரம் ஒன்று வைக்கப்பட்டுள்ளது அதன் போது தளவாடியில் நேரம் என்னவாகக் காட்டும்




1) 9.10
2) 10.10
3) 2.50


13. கீழே உள்ள அமைப்பில் நிறந்தீட்டப்பட்டுள்ளது முழு உருவிலும் என்ன பங்கு



1) $\frac{1}{3}$ 2) $\frac{1}{5}$ 3) $\frac{1}{4}$

14. கீழே வெற்றுக் கூட்டினுள் வரக்கூடிய அமைப்பு யாது?







(03) அட்டவணையில் தரப்பட்ட ஒவ்வொரு எழுத்துக்கும் 0 - 9 எண்களில் ஒன்று வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு எழுத்துக்களின் எண்களின் கூட்டுத்தொகை கிடையாகவும், செங்குத்தாகவும் தரப்பட்டுள்ளன $P = 5, D = 0$ எனக் கொள்க

| | | | | | |
|---|---|---|---|---|---|
| G | R | A | S | S | 19 |
| G | R | A | N | D | 16 |
| C | R | A | N | E | 21 |
| E | R | A | S | E | 21 |
| P | R | I | C | E | 31 |
| 34 | 20 | 21 | 13 | 20 | |


15. எழுத்து E இற்கு வழங்கப்பட்ட எண் யாது?
1) 4 2) 5 3) 6

16. எழுத்து I இற்கு வழங்கப்பட்ட எண் யாது?
1) 5 2) 6 3) 9

17. எழுத்து C இற்கு வழங்கப்படும் எண் யாது?
1) 7 2) 5 3) 4

18. எழுத்து G இற்கு வழங்கப்படும் எண் யாது?
1) 8 2) 7 3) 5

(04) கீழே A, B, C, D, E, F ஆகிய ஆங்கில எழுத்துக்கள் குறிக்கப்பட்ட சதுரமுகி கீழே தரப்பட்டுள்ளது அதனை அவதானித்து விடை தருக



19. A க்கு எதிர்த்திசையில் வரும் எழுத்து யாது?
1) E 2) F 3) D

20. B க்கு எதிர்த்திசையில் வரும் எழுத்து யாது?
1) A 2) D 3) F

21. C க்கு எதிர்த்திசையில் வரும் எழுத்து யாது?
1) D 2) A 3) B

(05) அடைப்புக்குள் இருக்கும் இரு கோலங்களையும் ஒன்றன் மீது ஒன்று வைக்கும் போது கிடைக்கும் உருக்களைத் தெரிவு செய்க

22.



(i) (ii) (iii)

23.



(i) (ii) (iii)

24. வெற்றிடத்துக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க

| 6 | 7 | 8 | | 5 | 6 | 7 | | 4 | 5 | 6 | | -------------- |

(i) | 7 | 6 | 8 | (ii) | 3 | 4 | 5 | (iii) | 2 | 3 | 4 |

# தமிழகத்திலிருந்து மீள்குடியேற வரும் மக்களுக்கான ஏற்பாடுகள் என்ன?

## அரசிடம் கேட்கிறார் டக்ளஸ்



யாழ். குடா நாட்டில் தங்களது சொந்த இடங்களிலிருந்து 90களில் வெளியேறி, இந்தியா - தமிழகம் சென்று, அங்கு முகாம வாழ்க்கை வாழ்ந்து வந்த மக்களை தற்போதைய ஆட்சியில் இலங்கை வந்து மீளக் குடியேறுமாறு அழைப்பு விடுக்கப்பட்டது. இதற்கமைய சில குடும்பங்கள் இலங்கை வந்துள்ள நிலையில், இம் மக்கள் தங்களது சொந்த நிலங்களில் மீளக் குடியேற இயலாத நிலையில் பரிதவித்து வருவதாக தெரிவிக்கின்றனர். எனவே, இம் மக்களின் மீள் குடியேற்றத்திற்கான ஏற்பாடுகள் என்ன? என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)யின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா அரசிடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

இவ் விடயம் தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ள அவர், தமிழ் நாட்டிற்கு இடம் பெயர்ந்து சென்றிருந்த எமது மக்கள், அங்கு பல்வேறு துயரங்களுக்கு மத்தியில் முகாம் வாழ்க்கை வாழ்ந்து வருகின்றனர். தங்களது வாழ்க்கையை ஓரளவிற்குக் கொண்டு செல்லும் இவர்கள், எந்தவிதமான பொருளாதார வசதிகளையும் உடையவர்களல்லர்.

இந்த நிலையில், இலங்கையில் தங்களது சொந்த நிலங்களில் வந்து மீள் குடியேறுமாறும், இவ்வாறு வருபவர்களுக்கு பல்வேறு வசதிகள் செய்து கொடுக்கப்படுமென்றும் தற்போதைய அரசு அழைப்பு விடுத்திருந்தது. இதற்கமைய குறிப்பிட்ட சிலர் இலங்கை வந்துள்ளனர். இவ்வாறு வருகை தந்தவர்கள் கோலாகலமாக வரவேற்கவும் பட்டனர்.

தமிழகத்தில் இம் மக்கள் வாழ்ந்திருந்தபோது, துயரங்கள் நிறைந்திருந்தும், குடியிருக்கத் தக்க வசதிகளை இந்திய அரசு செய்துகொடுத்திருந்தது. எனினும் தங்களது சொந்த நிலங்களில் வாழ வேண்டும் என்ற உணர்வுகளுடனும், இலங்கை அரசு தங்களது மீள் குடியேற்றத்திற்கான வசதிகளை செய்து கொடுக்கும் என்ற நம்பிக்கையுடனும் இலங்கை திரும்பிய இம் மக்கள், இன்று அநாதரவான நிலையில் கைவிடப்பட்டுள்ளதாகக் குற்றஞ் சுமத்துகின்றனர்.

இந்த மக்களின் மீள் குடியேற்றத்திற்கான வசதிகளை செய்து கொடுப்பது அரசின் கடமையாகும். இதனை உணர்ந்து அரசு, உடனடி நடவடிககைகளை முன்னெடுக்கவேண்டுமென டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தியுள்ளார்.

## றமழான் சிந்தனை



அல்லாஹ்பிச்சைப் பள்ளி

நோன்பு மனிதனுக்கு ஒரு கேடயம். அதனை உடைக்காமலிருக்கும் வரைக்கும் அது பொய், புறம் பேசுவதினாலாகும். - நூல் நஸாயீ

ஸஹர் முடிவு : அதிகாலை 4.24
நோன்பு திறக்கும் நேரம் : மாலை 6.35

(105)

# பாலி ஆற்றை இடைமறித்து 600 ஏக்கரில் நெற்செய்கை

## வெள்ளாங்குளம் விவசாயிகள் மகிழ்ச்சி

(கிளிநொச்சி)

கடலுக்குச் செல்லும் பாலி ஆற்று நீரை திருப்பியதில் இதுவரைகாலமும் 20 ஏக்கரில் மேற்கொள்ளப்பட்ட தமது நெற்செய்கை 600 ஏக்கருக்கு விஸ்தரிக்கப்பட்டமைக்கு வெள்ளாங்குளம் விவசாயிகள் மகிழ்ச்சி வெளியிட்டுள்ளனர்.

வெள்ளாங்குளத்தில் ஏ32 வீதிக்கு கிழக்காக அமைந்துள்ள இக்குளம் போதிய நீர்வளத்தை கொண்டிராமையால் இதுவரைகாலமும் அதனை அண்டியுள்ள 20 ஏக்கர் மாத்திரமே நெற்செய்கை மேற்கொள்ளபபட்டு வந்தது.

கடந்த 2012 இல் அரச சார்பற்ற நிறுவனமொன்றின் நிதி உதவியுடன் அங்கிருந்து 3 கிலோ மீற்றர் தொலைவில் கடலுக்குச் செல்லும் பாலி ஆற்றில் அணைக கட்டொன்றை நிறுவி இக்குளத்துக்கு நீர் நிரப்பிவிடப்பட்டது.

இதற்கான வாய்க்கால் புனரமைப்புப் பணிகள் இந்த வருடத்தில் பூர்த்தியாகியதை அடுத்து முதன்முறையாக 600 ஏக்கரில் நெற்செய்யை மேற்கொள்ளும் வாய்ப்பு இங்குள்ள விவசாயிகளுககு கிட்டியிருப்பதாக அப்பகுதி கமக்காரர் அமைப்பின் பிரதிநிதி ஒருவர் திருப்தி தெரிவித்துள்ளார்.

இக்குளத்தில் இன்றும் கூடுதலான நீரை தேக்கும் வாய்ப்பு கிட்டுமாயின் இந்த 600 ஏக்கரை மேலும் ஆயிரமாக விஸ்தரிக்க முடியும். அதற்கேற்ற வகையில் குளம் விஸ்தரிக்கப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டார்.

வடக்கு நோக்கி இந்த நீர் திருப்பிவிடப்படுமாயின் முழங்காவில் பகுதி உட்பட அதனை அண்டியுள்ள நெற்செய்கை நிலங்களும் வழங்கொழிக்கும் பூமியாக மாறும் என்பதில் ஐயமில்லையென அவர் மேலும் தெரிவித்தார்.

# நாகர் கல்வெட்டு சாசனங்கள் வந்தாறு மூலையில் கண்டுபிடிப்பு



(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வந்தாறு மூலை விஸ்ணு ஆலயத்தில் கி.மு இரண்டாம் நூற்றாண்டிற்கு முற்பட்ட நாகர் கல்வெட்டு சாசனங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

வந்தாறுமூலையைச் சேர்ந்த ஆசிரியரான செல்வநாயகம் பத்மநாதன் ஆலய முன்றலில் இருந்த இரு கருங்கற் தூண்கள் அரை. வட்ட வடிவ கருங்கல்லிலும் எழுத்துக்கள் இருப்பதை அவதானிக்கப்பட்டதையடுத்து அவற்றை வரலாற்றுத்துறை தகைசார் பேராசிரியரும் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தருமாகிய சி.பத்மநாதனிடம் தெரியப்படுத்தியதை அடுத்து பேராசிரியர் கல் வெட்டினை ஆய்வு செய்து பின்வரும் விடயங்களை உறுதிப்படுத்தினார்.

ஆலய முன்றிலில் காணப்பட்ட 5அடி 8அங்குலம் உடைய அரை வட்டக் கருங்கல்லை ஆய்வு செய்தபோது அதில் கி.மு இரண்டாம் நூற்றாண்டிற்கு முற்பட்ட தமிழ் பிராமிக் வரிவடிவம் காணப்பட்டது. குறித்த கல்லில் குறிப்பிடப்படும் விடயமானது மணிநாகன் பள்ளி வேள் கண்ணன் என எழுதப்பட்டுள்ளது. மணிநாகன் ஏ்ன்பது நாகர்களது வழிபாட்டுத் தெய்வமாகிய நாக தேவனை குறிப்பதாகும், மணிநாகன் பள்ளி என்பது நாகர்களது வழிபாட்டுத் தலம் என்பதாகும். மணிநாகன் பள்ளி வேள் கண்ணன் என்பது வேள் கண்ணன் எனும் நாகமன்னனால் அமைக்கப்பட்ட ஆலயம் என்பதாகும். வேள் கண்ணன் என்பது நாகரசனின் நாமம் ஆகும். வேள் என்பது அரசர்களுக்கு வழங்கும் சிறப்புப் பட்டமாகும்.

இங்கு காணப்படும் அரை வட்டக் கருங்கல்லானது நாகர்களது வழிபாட்டுத் தலத்திற்கு முன்பாக வைக்கப்படுவதாகும். இதில் அதிகளவில் நாக பந்தங்களின் உருவம் காணப்படுகின்றது.

## பரிசில் நாள் நிகழ்வு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி மீசாலை விக்னேஸ்வர மகாவித்தியாலய பரிசில் நாள் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு வித்தியாலய முதல்வர் வி.கணபதிப்பிள்ளை தலைமையில் வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வின் முதன்மை விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஸ்ணகுமார் கௌரவ விருந்தினராக வித்தியாலய பழைய மாணவன் கே.ரகுநாதன் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (11)

# மாசடைந்துள்ள சூழலால் நோய் ஏற்படும் அபாயம்

## கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர் எச்சரிக்கை

(வலிகாமம்)

வலிகாமம் கிழக்கு, கோப்பாய் தெற்கில், பிரதேச சபையின் கீழ்வரும் பொதுமலசல கூடம் முறையான பராமரிப்பின்மையால் அப்பகுதியை சூழவுள்ள குடும்பங்கள் பெரும் அசௌகரியங்களை எதிர் கொண்டுள்ளன.

மலசலகூடத்தை அண்டியதாக அமைந்துள்ள நீர்த்தேக்கமும், குப்பை கூழங்களால் நிரம்பியுள்ள நிலையில், துர்நாற்றம் வீசுவதாகவும், இதில் தேங்கியுள்ள நீரால் சூழவுள்ள மக்கள் டெங்கு அபாயத்தை எதிர்நோக்கியுள்ளதாக கோப்பாய் தெற்கு கிராம முன்னேற்றச் சங்கத்தின் தலைவர் இ.தியாகராஜா தெரிவித்தார்.

மலசல கூடத்தையும் நீர்த்தேக்கத்தையும் புனரமைப்பதன் மூலம் இங்குள்ள மக்கள் எதிர்கொள்ளும் சுற்றாடல் பிரச்சினைகளை முடிந்தளவுக்கு தவிர்க்க முடியுமென அவர் தெரிவித்துள்ளார்.

பலதடவைகள் இவ்விடயத்தை வலி.கிழக்கு பிரதேச சபையின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளோம். சம்பந்தப்பட்ட அதிகாரி இப்பிரச்சினையின் பாதிப்பைக் கண்டு கொள்வதாக இல்லையென அவர் தனது ஆதங்கத்தை வெளியிட்டார்.

இங்குள்ள நீர்த்தேக்கம் இப்போது கழிவுகள் கொட்டப்படுமாக மாறியுள்ளதால் பிரதேச சபை இதனை கவனத்திலெடுத்து மலசல கூடத்தையும் நீர்த்தேக்கத்தையும் புனரமைக்க உடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (168)

# இரும்புக் கூண்டுக்குள் ஐ.எஸ். மரணப் பயிற்சி

(டமஸ்கஸ்)

ஐ.எஸ். தீவிரவாத அமைப்பு, தீவிரவாதிகளுக்கு தரும் புதிய பயிற்சி முறைகள் அடங்கிய வீடியோ சமூக வலைத்தளங்களில் காட்டுத்தீயாக பரவி வருகிறது.

இந்தப் புதிய பயிற்சி முறையில், மல்யுத்தப் போட்டிகளைப் போன்று பிரமாண்டமான இரும்புக் கூண்டு ஒன்றை அமைத்து, அதில், இளைஞர்களையும், சிறுவர்களையும் ஒரு கூண்டில் அடைத்து விடுகின்றனர். பின்னர் அவர்களை நேருக்கு நேர் மோத விடுகின்றனர். கூண்டைச் சுற்றியிருக்கும் ஏராளமான ஆயுத மேந்தியவர்கள் அவர்களை உற்சாகப்படுத்துகின்றனர். சில முகமூடி அணிந்த சிறுவர்கள் தங்கள் தலையால் கல்லை(Tiles) உடைக்கின்றனர். மேலும் சிலர் தற்காப்பு பயிற்சிகள், துப்பாக்கி சுடுதல் ஆகியவற்றிலும் ஈடுபடுகின்றனர். இந்த வீடியோ ஈராக்கில் உள்ள ஐ.எஸ். அமைப்பின் தளத்தில் எடுக்கப்பட்டதாக கருதப்படுகிறது.

இந்த பயிற்சி வீடியோவை வெளியிட்டுள்ளதன் மூலமாக மற்ற நாடுகளைச் சேர்ந்த இளைஞர்களைக் கவர ஐ.எஸ். அமைப பினர் முயற்சி செய்வதாக சமூக ஆர்வலர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

# ஆப்கான் நாடாளுமன்றம் மீது தற்கொலைப்படைத் தாக்குதல்



ஆப்கானிஸ்தான் நாடாளுமன்றத்தின் அவைக்குள்ளும், வளாகத்திலும் நேற்றுக் காலை அடுத்தடுத்து குண்டுகள் வெடித்தன. நாடாளுமன்றத்தினுள் நுழைந்த தீவிரவாதிகளுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் இடையே சில மணி நேரமாக நடந்த துப்பாக்கிச்சூட்டை அடுத்து 6 தீவிரவாதிகள் கொல்லப்பட்டதுடன் 18 பொது மக்கள் காயமடைந்தனர்.

முன்னதாக நேற்றுக் காலை கீழவைக் கூட்டம் நடந்து கொண்டிருந்தபோது, அங்கு முதல் குண்டு வெடிப்பு நடந்தது. இதனைத் தொடர்ந்து நாடாளுமன்ற வளாகத்தில் அடுத்தடுத்து குண்டு வெடிக்கும் சத்தம் கேட்டது. இதனால் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதற்றமடைந்தனர்.


நாடாளுமன்றத்தில் செய்தி சேகரித்த உள்ளூர் தொலைக்காட்சி நிறுவனம் இதனை நேரலையில் ஒளிபரப்பியது. அவைகுள்ளே நடந்த தாக்கு தலைத் தொடர்ந்து வளாகத்தின் வெளியேயும் கார்க்குண்டு வெடித்தது. நாடாளுமன்றத்தி லிருந்து அதிக அளவில் புகை கிளம்பியதை அடுத்து பொது மக்களும் பீதி அடைந்தனர்.

முன்னதாக, ஆப்கான் நாடாளுமன்றத்துக்குள் பல முஜாகிதீன்கள் நுழைந்திருப்ப தாகவும் கடுமையான சண்டை தொடர்வதாகவும் தலிபான் தீவிரவாத இயக்கச் செய்தித் தொடர்பாளர் சபிஹில்லா முஜாஹித் தனது ட்விட்டர் பக்கத்தில் தெரிவித்திருந்தார்.

புதிதாக பதவியேற்றிருக்கும் பாதுகாப்பு அமைச்சர் அவையில் தன்னை அறிமுகம் செய்து கொண்ட போது, தாக்குதல் நடந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாடாளுமன்ற வளாகத்திலிருந்து எம்.பி.க்கள் அனைவரையும் பாதுகாப்பு அதிகாரிகள் பத்திரமாக வெளியேற்றியதாக பொலிஸ் செய்தித் தொடர பாளர் எபதுல்லா கரிமி தெரிவித்தார்.

# உலகின் உயரமான கட்டம் முறுக்கிய நிலையில் சீனாவில் வடிவமைப்பு



(பெய்ஜிங்)

சீனாவின் வர்த்தக நகரமான ஷாங்காயில் உலகிலேயே மிகப் பெரிய 2 ஆவது கட்டடம் கட்டப்படுகிறது. இக்கட்டடம் 2,086 அடி, அதாவது 632 மீற்றர் உயரம் உள்ளது. இக்கட்டடம் முக்கோண வடிவில் அமைந்துள்ளது.

இக்கட்டடம் 120 டிகிரி வளைவுகளுடன் முறுக்கிய நிலையில் கட்டப்பட்டுள்ளது. சீன மக்களின் முற்போக்குத் தன்மையின் அடையாளமாக இந்த முறுக்கிய வளைவுகள் அமைக்கப் பட்டுள்ளன. மேலும் இந்த கட்டடம் எதிர்காலத்தில் சீனாவின் அடையாளமாகத் திகழும் வகையிலும் வடிவமைக்கப் பட்டுள்ளது.

இக்கட்டடத்தில் 110 மாடிகள் உள்ளன. இது ரூ. 15 ஆயிரம் கோடி செலவில் கட்டப்பட்டுள்ளது. உலகின் 2ஆவது மிகப்பெரிய கட்டடமாக திகழும் இங்கு உலகின் 2ஆவது மிகப்பெரிய ஹோட்டலும் அமைந்துள்ளது.

அது 84ஆவது மாடியில் அமைக்கப்பட்டுள்ளது. இக் கட்டடம் கோடை காலத்தில் குளிர்ச்சியாகவும், குளிர் காலத்தில் இதமான வெப்பத்துடன் இருக்கும் வகையிலும் உருவாக்கப்பட்டுள்ளது. இது ஒரு இராட்சத தெர்மாஸ் பாட்டில் ஆக திகழும் என இதை வடிவமைத்த அமெரிக்க தலைமை கட்டட நிபுணர் மாரஷல ஸ்ட்ராபெலா தெரிவித்துள்ளார்.

இக்கட்டடம் விரைவில் திறக்கப்படவுள்ளது

# விஷச்சாராயம் அருந்தி மும்பையில் 105 பேர் பலி



மும்பை மால்வாணியில் கடந்த 17ஆம் திகதி சட்ட விரோதமாக விற்பனை செய்யப்பட்ட சாராயத்தை அந்தப் பகுதியைச் சேர்ந்த கூலித் தொழிலாளிகள் அருந்தினர். விஷத்தன்மை கொண்டிருந்த அந்த சாராயத்தை அந்த பகுதியை சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் வாங்கி அருந்தியுள்ளனர்.

இதனால் வாந்தி, மயக்கம், வயிற்று வலி ஏற்பட்டது. பாதிக்கப்பட்ட அனைவரும் சிகிச்சைக்காக அருகில் உள்ள மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டனர்.

ஆனால் சிகிச்சை பலனின்றி மறுநாளே 13 பேர் இறந்துபோனார கள். 19 ஆம் திகதி பலி எண்ணிக்கை 55 ஆக உயர்ந்தது. 20ஆம் திகதி மேலும் 35 பேரை விஷச்சாராயம் பலி கொண்டு விட்டது. இதனால் மூன்று நாளில் பலியானோர் எண்ணிக்கை 90 ஆக உயர்ந்தது.

இந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தவர்களில நேற்றுமுன்தினம் பலர் சிகிச்சை பலனின்றி பலியானார்கள். இதன் மூலம் விஷச்சாராயத்திற்கு பலியானவர்களின் எண்ணிக்கை 105 ஆக அதிகரித்து உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வடமாநிலங்களில் கனமழை இயல்பு வாழ்க்கை பாதிப்பு



இந்தியாவின் வட மாநிலங்களான ஆந்திரா மற்றும் தெலுங்கானாவில் கன மழை பெய்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

கனமழை காரணமாக பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. ஏராளமான கிராமங்களுக்குச் செல்லும் பாதைகள் துண்டிக்கப்பட்டுள்ளதோடு வீதிகளில் நீர் தேங்கியுள்ளது.

பல இடங்களிலும் வெள்ள அபாயம் காரணமாக மீட்புப் படையினர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். இதையடுத்து வெள்ள நிலைமை தொடர்பாக உடனுக்குடன் ஆய்வு செய்யப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளவும் மாநிலங்களின் அரசால் உத்தரவிடப்பட்டுள்ளது. வங்கக் கடலில் தொடர்ந்து நீடித்து வரும் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக, கனமழை பெய்து வருவதாக வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

உலகச் செய்திகள்

# பிரான்ஸ் பிரஜைக்கு மரண தண்டனை உறுதிப்படுத்தியது இந்தோனேஷியா



போதைப் பொருள் தொடர்பான குற்றங்களுக்காக மரண தண்டனையை எதிர் நோக்கியுள்ள பிரான்ஸ் நாட்டு பிரஜையின் இறுதி மேன் முறையீட்டையும் இந்தோனேஷிய உயர் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

சேர்ஜ் அட்லவியின் (Serge Atlaoui) கருணை மனுவை இந்தோனேஷிய ஜனாதிபதி ஜோகோ விடோடோ நிராகரித்துள்ள நிலையில உயர் நீதிமன்றம் சேர்ஜ் அட்லவியின் தண்டனையை உறுதிப்படுத்தியுள்ளது.

இந்த தீர்ப்பின் பிரகாரம் அவருக்கு துப்பாக்கியால் சுட்டு மரண தண்டனை நிறைவேற்றப் படவுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட போது இறுதித் தருணத்தில் அட்லவியின் மரண தண்டனையை இந்தோனேஷியா ஒத்திவைத்திருந்தது. போதைப்பொருள் குற்றங்கள் தொடர்பாக இந்தோனேஷியா கடைப் பிடிக்கும் கடுமையான நிலைபாடு சர்வதேச ரீதியில் கடுமையான விமர்சனத்திற்கு உள்ளாகியுள்ளது.

ஜனாதிபதியின் கருணை மனுவே மரண தண்டனையை தவிர்ப்பதற்கான அட்லவிக்கான இறுதி சட்ட ரீதியான நடைமுறையாக உளளதாக இந்தோனேஷிய சட்டமா அதிபர் அலுவகம் குறிப்பிட்டுள்ளது.

# வேகமாக குறைவடையும் இந்திய நிலத்தடி நீர்

## நாசா விஞ்ஞானிகள் அதிர்ச்சித் தகவல்

இந்தியாவின் நீர்த் தேவையை பூர்த்தி செய்யும் சிந்து சமவெளி நீர்ப்பரப்பில் உள்ள நிலத்தடி நீர் மிக வேகமாக குறைந்து வருவதாக அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.

உலகத்தின் நிலத்தடி நீர் மிக வேகமாக குறைந்து கொண்டே வருவதாக நாஸாவின் விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

2003 முதல் 2013 வரை உலகின் மிகப்பெரிய 37 நிலத்தடி நீரப பரப்புகளை ஆராய்ச்சி செய்துள்ளனர்.

இதில் 13 நீர்ப்பரப்புகள் மிகவும் அபாயகரமான கட்டத்தில் இருப்பவை. இதில் இந்தியா மற்றும் பாகிஸ்தானின் நீர் தேவையை பூர்த்தி செய்யும் சிந்து சமவெளி நீர்ப்பரப்பில் உள்ள நிலத தடி நீர் மிக வேகமாக குறைந்து வருவதில் 2ஆவது இடத்தில் உள்ளது.

60 மில்லியன் மக்களின் நீர்த் தேவையை பூர்த்தி செய்யும் அரேபியன் நிலத்தடி நீர்பரப்பு முதல் இடத்தில் உள்ளது.

நாஸாவின் GRACE (Gravity Recovery and Climate Experiment) செய்மதி மூலம் முதல் முறையாக உலகின் நிலத்தடி நீர்ப்பரப்பு குறித்த இந்த ஆராய்ச்சி சாத்தியமாகியுள்ளது.

மேலும், நிலத்தடி நீர் குறையும் வேகம், அது மீண்டும் நிரம்பும் வேகத்தைவிட அதிகமாக உள்ளது.

நீர்ப்பாசனம் மூலம் கொஞ்சம் நீர் மீண்டும் நிலத்தடி நீர்ப்பரப்புக்கு சென்றாலும், அவை பெரும்பாலும் புவியின் வெப்பத்தில் ஆவியாகி விடுகின்றன அல்லது வீணாக கடலில் சென்று கலந்து விடுகின்றன.

மேலும், நாஸாவில் பணிபுரியும் உலக புகழ்பெற்ற நீர் ஆராய்ச சியாளர் Jay Famiglietti, நிலத்தடி நீர் குறைந்துவரும் பிரச்சினையுடன் புவி வெப்பமடைதலும், காலநிலை மாற்றமும் சேருவது இன்னும் சிக்கல் என்று எச்சரித்துள்ளார்.

# சிறுபான்மைக் கட்சிகளை கைகழுவ துணியமாட்டார் மைத்திரி

## யாழ்ப்பாணத்தில் ஹக்கீம் நம்பிக்கை

(யாழ்ப்பாணம்)

முதன்முறையாக அதிகாரத்திலுள்ள ஒரு ஜனாதிபதி சுயமாக தனது அதிகாரத்தைக் குறைப்பது உலக அதிசயமே. இப்படிச் செய்த ஜனாதிபதி தேர்தல் சீர்திருத்த விடயத்தில் அவருக்கு கைகொடுத்த சிறுபான்மைக் கட்சிகளை கைவிடமாட்டார் என தாம் நம்புவதாக நகர அபிவிருத்தி மற்றும் நீர் வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சர் ரவூப் ஹக்கிம் நேற்று யாழ்ப்பாணத்தில் தெரிவித்துள்ளார்.

நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை கட்டடத்தை திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கே மேலும் தெரிவிக்கையில்,

நாளை நாடாளுமன்றில் காராசாரமான விவாதம் ஒனறு இடம்பெறவிருக்கிறது. சிறுபான்மைக் கட்சிகள் புதிய தேர்தல் சீர் திருத்தத்தினால் படுமோசமாக பாதிக்கப்பட்டப்போகின்றோம் என்பது சம்பந்தமாக அரசுடன் முரண்பாடு இப்பொழுது ஏற்பட்டுள்ளது. நாம் சமர்ப்பித்த ஆலோசனைகளை அப்படியே புறந்தள்ளி வெறும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் இருக்கும் உள் முரண்பாடுகளுக்கு தீர்வாக இந்த புதிய தேர்தல் சீர்திருத்தத்தை அறிமுகப்படுத்துகின்றார்களா? என்ற சந்தேகம் எல்லோருக்கும் ஏற்பட்டிருக்கிறது.

எனவே இந்த அநியாயத்திற்கு ஜனாதிபதி துணைபோக மாட்டார். அவர் எங்களுக்கு வெளிப்படையாக எதைச் சொன்னாலும் அவரைச் சூழ இருக்கின்ற ஒரு கூட்டம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பாதுகாக்கின்றோம் என்ற போர்வையில் எங்களைப் படுகுழியில் தள்ளுகின்ற ஒரு புதிய தேர்தல் முறையை அறிமுகப்படுத்தப் பார்க்கின்றார்கள் என்ற விடயத்தில் இப்பொழுது நாம் ஜனாதிபதியுடன் முரண்பட்டுக்கொண்டிருக்கின்றோம்.

இது தொடர்பில் எல்லாக்கட்சிகளும் குறிப்பாக ஜனாதிபதியை பதவிக்கு கொண்டுவர பாரிய பங்களிப்புச் செய்த இந்த நாட்டிலே இருமுறை தெற்கில் ஆயுதப் போராட்டம் செய்த இயக்கமான ஜே.வி.பி.யை மீண்டும் ஒரு ஆயுதப் போராட்டத்திற்கு தள்ளுகின்ற நிலைமையைதான் இந்த புதிய தேர்தல் முறை ஏற்படுத்தப் போகின்றது என்ற அபாய அறிவிப்பை நான் அமைச்சரவையில் செய்திருக்கின்றேன்.



அதையும் புறந்தள்ளிவிட்டு வலுக்கட்டாயமாக ஒரு வர்த்தமானி அறிவித்தலைச் செய்திருக்கின்றார்கள். எனவே அதனை உடனடியாக வாபஸ் பெறவேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாம் இருக்கின்றோம். எனவே இதற்கு கூட்டான ஒரு போராட்டம் அவசியமாகிறது.

ஆட்சி மாற்றத்திற்கு போராயதுபோல் இந்த அநியாயம் நடாக்காது நாங்களே கொண்டு வந்த அரசாங்கம் எங்களை காலை வாரி விடாமல் பாதுகாக்கின்ற போராட்டத்தில் நாம் வெற்றிபெறவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## கூட்டு...

விருத்தி நிலைய மைதானத்தில் நடந்த ஆரம்ப நிகழ்வை அடுத்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் இராணுவத் தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ், பிரதம விருந்தினராகப் பங்கேற்றிருந்தார். இந்தக் கூட்டுப் போர்ப்பயிற்சி மூன்று கட்டங்களாக இடம்பெறவுள்ளது.

நேற்று தொடக்கம் 28 ஆம் திகதி வரை முதற்கட்ட பயிற்சி, கொமாண்டோ படைப்பிரிவின் ஊவா குடாஓயா பயிற்சி பாடசாலையிலும், இரண்டாம் கட்டப்பயிற்சி யூன் 28ஆம் திகதி தொடக்கம் யூலை 5 ஆம் திகதி வரை கணேமுல்லவில் உள்ள கொமாண்டோ படைப்பிரிவு தலைமையகத்திலும், மூன்றாவது கட்டப் பயிற்சி யூலை 5ஆம் திகதி தொடக்கம், யூலை 13ஆம் திகதி வரை மாதுருஓயா சிறப்புப் படைப்பிரிவு பயிற்சிப் பாடசாலையிலும், நடைபெறவுள்ளன.

இந்தக் கூட்டுப் போர்ப்பயிற்சியில், ஆயுதங்களைக் கையாளுதல், மிக முக்கிய பிரமுகர்களின் பாதுகாப்புக் கல்வி, சூட்டுப் பயிற்சி, குறிபார்த்துச் சுடும் பயிற்சி, இடுக்குகளின் ஊடான சூட்டுப் பயிற்சி, உடற்காப்பு பயிற்சி, பதுங்கித் தாக்குதல், வேவு நுட்பங்கள். சிறப்பு நடவடிக்கைக்குத் திட்டமிடல், தேடல் நுட்பங்கள், சூழ்நிலை பயிற்சி ஒத்திகை, கூட்டுப் போர்முறை, அடிப்படை சண்டை பயிற்சி, வாகன பதுங்கித் தாக்குதல், விமான மற்றும் கட்டட பயிற்சிகள் என்பனவற்றை உள்ளடக்கியதாக இருக்கும்.

பட்டுப்பாதை கூட்டுப் பயிற்சியின் முதலாவது கட்டம், சீனாவில் கடந்த மார்ச் 29 ஆம் திகதி தொடக்கம், ஏப்ரல் 17 ஆம் திகதி வரை இடம்பெற்றது. இதில் இராணுவத்தின் கொமாண்டோ மற்றும் சிறப்புப் படைப்பிரிவுகளைச் சேர்ந்த 42 பேர் பங்கேற்றிருந்தனர்.

இந்தநிலையில், நேற்று ஆரம்பமாகியுள்ள கூட்டுப் பயிற்சியில், சீன இராணுவத்தைச் சேர்ந்த லெப்.கேணல் கியூய் கியாங் தலைமையில், 43 பேரும், 43 இலங்கை கொமாண்டோக்களும் பங்கேற்கின்றனர். இந்தக் கூட்டுப் பயிற்சி வரும் யூலை 13 ஆம் திகதி நிறைவடையவுள்ளது.

## ராஜித...

மாகாணசபை உறுப்பினர்கள் காத்திருக்க நேரிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. பேச்சுவார்த்தை நடத்திய விடயங்களை ஊடகங்களுக்கு அம்பலப்படுத்த முடியாது என வும், எதிர்காலத்தில் இது குறி த்து பார்த்துக் கொள்ள முடியும் எனவும் அமைச்சர் சேனாரட்ன ஊடகவியலாளர்களுக்கு தெரிவித்துள்ளார்.

எனினும் நாட்டின் தற்கால அரசியல் நிலைவரங்கள் தொடர்பாக இருவரும் நீண்டநேரம் மனம்விட்டுப் பேசியதாக உத்தியோகப் பற்றற்ற செய்திகள் தெரிவிககின்றன.

## ஆட்சி...

த்த, தமிழ், முஸ்லிம் ஆகிய சிறுபான்மை இன மக்களினதும் வாக்குகள் அவசியம். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினாலோ அல்லது வேறு எந்த கட்சியினாலோ, சிங்கள பௌத்த வாக்குகளால் மட்டும் அரசாங்கத்தை அமைத்துவிட முடியாது.

தனியாக முன்னணி அமைப்பதற்காக அழைக்கும் கூட்டம் இலங்கைக்கு துரோகம் இழைப்பதுடன் இடதுசாரிக் கொள்கைக்கும் துரோகம் இழைக்கிறது. கட்சிக்குள் எவரையும் வெட்டி விடுவதற்கோ, வேரறுக்கவோ வேண்டிய தேவை எனக்கு இல்லை.

எனது தேவை எல்லாம் நீங்கள் அனைவரும் ஒற்றுமையாக சகோதரத்துவத்துடன் இணைந்து செயலாற்றி அரசாங்கத்தை கட்டியெழுப்ப வேண்டும் என்பதேயாகும் என்றும் அவர் கூறினார்.

## தமிழர்...

9 ஆம் திகதி மட்டக்களப்பு, வந்தாறுமுலையில், கிழக்கு மாகாண அமைச்சர் கே. துரைராஜசிங்கத்தின் வரவேற்பு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆட்சியை மாற்றி, தற்போதைய ஆட்சியைக் கொண்டு வந்ததில் தங்களுக்கே பெரும் பங்கு இருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கூறிவூருகின்றனர்.

தற்போதைய அரசு ஆட்சியமைத்ததும் 100 நாட்கள் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தியது.

அந்த வேலைத் திட்டத்தின் பயன்களை தமிழ் மக்கள் அடையக்கூடிய வாய்ப்புக்களை அரசுடன் இணைந்து செயற்பட்டுவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அண்டவிடவில்லை. அதன் பின்னரான அரசின் தொடர் வேலைத்திட்டங்களிலும் எமது மக்களுக்கு எவ்விதப் பயனும் கிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எவ்வித செயற்பாடுகளையும் முன்னெடுப்பதாக இல்லை.

அரசின் இத்தகைய வேலைத திட்டங்களை அரசுடன் இணைந்து செயற்பட்டுவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே தமிழ் மக்களிடம் எடுத்துச் செல்ல வேண்டும். மாறாக, அரசின் இத்திட்டங்களால் தமிழ் மக்கள் எதனையும் பெறவில்லை என வடக்கு முதலமைச்சர் உட்பட கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் தங்களுக்கே உரித்தான பாணியில் விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர்.

இதைவிட, தற்போது தமிழ் மக்கள் சார்பு சுமுகமானதொரு சூழல் நாட்டில் நிலவுகிறது. இனங்களுக்கிடையில் தேசிய நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதில் ஜனாதிபதி மிகுந்த அக்கறை கொண்டிருக்கிறார்.

நாட்டின் கொள்கை வகுப்பின் அதியுயர் அமைப்பான தேசிய நிறைவேற்றுச் சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்கெடுத்துவருகிறது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, தனது பிரதிநிதியாக சுமந்திரனை நியமிக்கக்கூடிய நிலையும் காணப்படுகின்றது.

அதிகாரங்களை சரிவரப் பகிர்வதன் மூலமே தேசிய நல்லிணக்கம் சாத்தியமாகும் என்ற நிலைப்பாட்டில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரணதுங்க இருந்து வருகிறார்.

இவ்வாறு அனைத்து வாய்ப்புகளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு சாதகமாகவ்ுள்ள நிலையில், ஏன் இப்போதே தமிழர்களின் அபிலாஷைகளை நிறைவேற்ற முடியாது? என்ற கேள்வி இயல்பாகவே எழுகிறது.

இந்த அரசு ஆட்சியமைத்து தென்பகுதியில் சில கடினமான விடயங்களைக்கூட செய்து முடித்திருக்கிறது. ஆக, அரசுடன் இணைந்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரால் தமிழ் மக்களின் தேவைகளை நிறைவேற்ற இயலாதுள்ளதேன்? ஆளுமை இல்லையா? இன்றேல், அக்கறை இல்லையா?

அடுத்த பொதுத் தேர்தலுக்குப் பின்னர்தான் இந்த அரசு தமிழர்களின் விடயங்களை செய்யும் என சுமந்திரன் கூறுகிறார். பொதுத் தேர்தலுக்குப் பின் இந்த அரசுதான் ஆட்சிக்கு வ்ரும் என்று உறுதியாகக் கூற முடியுமா? வேறு ஒரு ஆட்சி வந்தால், இந்த அரசு தமிழர்களது தேவைகளை நிறைவேற்றுவது சாத்தியமாகுமா? போன்ற எமது மக்களின் கேள்விகளுக்கு சுமந்திரன் போன்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் என்ன பதில் கூறுகிறார்கள்?

எனவே, அடுத்த தேர்தலின் வெற்றியை எதிர்பார்த்து இவர்கள் கூறிவரும் பொய்களை இனியும் எமது மக்கள் நம்ப வேண்டுமா? என்றும் அந்த அறிக்கையில் கேள்வி எழுப்பப்பட்டிருக்கிறது.

## மகிந்தானந்த...

மகிந்த ஆட்சிக்கால விளையாட்டுத்துறை அமைச்சில் இடம் பெற்றதாகக் கூறப்படும் 39 மில்லியன் ரூபா நிதி மோசடி தொடர்பிலேயே விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## பாடசாலை...

பொலிஸாராகிய நாங்கள் தயாராக இருக்கின்றோம். எனவே மாணவர்களாகிய நீங்கள் மிகவும் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும். உங்களுடைய செயற்பாடுகள் மோச மான முறையில் இடம்பெற்றால் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்தவும் தயங்கமாட்டோம்.

அத்துடன் பாடசாலை வளாகத்திற்குள்ளும் அதற்கு வெளியேயும் பாபுள், வெற்றிலை, சிகரெட், பியர் போன்ற போதைப்பொருட்களை பாடசாலை மாணவர்கள் வைத்திருப்பின் அதற்கான நடவடிக் கையும் உடனடியாகவே எடுக்கப்படும்.

தெரியாதவர்களுடன் தொலைபேசியில் உரையாடுதல், அவர்கள் தரும் பொருட்களை பெறுதல் தவிர்த்துக் கொள்ளப்பட வேண்டும். மேலும் விளையாட்டு நிகழ்வின் போது பியர் உள்ளிட்ட மது வகைகள் மற்றும் சிகரட் ஆகிய எவையும் நிகழ்விடத்திற்குள் கொண்டுவரக் கூடாது. அவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டால் கைது செய்யப்படுவர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

பெற்றோர்களின் அவதானம் பிள்ளைகளின் மீது குறைவாக இருப்பதே சமூகத்தில் வன் செயல்கள் அதிகரிக்க காரணம் என்று யாழ்ப்பாண பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி வூட்லர் தெரிவித்தார்.


நேற்று மாலை 4 மணிக்கு யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரியில் பாடசாலை மாணவர்களுடைய பெற்றோர்களுக்கான சந்திப்பு ஒன்று இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் தனது உரையில்,

மாணவர்களுடைய நடத்தைகள் தொடர்பாக பெற்றோர்கள் அவர்களுக்கு அறிவுரை வழங்க வேண்டும்.குறிப்பாக பாடசாலை மாணவர்கள் மத்தியில் கைபேசிப்பாவனை இருக்கின்றது. அதனை அவர்களிடத்தில் இருந்து தவிர்க்க வேண்டும்.

அத்துடன் மாணவர்கள் பாடசாலை செல்லும் போது புத்தகப்பையில் என்ன உள்ளது எதைக் கொண்டு போகின்றார்கள் என்பதை கவனித்து பாடசாலை அனுப்பி வைக்க வேண்டும்.

மேலும் பிள்ளைகள் யாருடன் கூட்டு சேர்கிறார்கள். குறிப்பாக யாரை நண்பர்களாக தெரிந்து வைத்திருக்கிறார்கள். அவர்களுடைய நடத்தை எவ்வாறு இருக்கின்றது என்பதை பெற்றோர்கள் அறிந்து நல்ல நண்பர்களுடன் கூட்டு சேர வழிகாட்ட வேண்டும். இதேவேளை மாண்வர்கள் இரவு 7 மணிக்கு பிறகும் வீடு வந்து சேராவிடில் அவர்கள் ஏன் தாமதமாக வருகிறார்கள் என்பதை கண்டறியுங்கள்.

இவ்வாறு பிள்ளை என்ன செய்கின்றது, யாருடன் கூட்டு சேர்கின்றது, என்பதை அறிந்து வைத்திருக்க வேண்டியது பெற்றோர்களின் கடமை. ஆகவே சமூகத்தில் நற்பிரஜையாக தமது பிள்ளைகள் திகழ வேண்டும் என்று ஒவ்வொரு பெற்றோரும் நினைக்க வேண்டும். ஆகவே பெற்றோர்களே பிள்ளைகள் மட்டில் விழிப்பாக இருங்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.



கிளிநொச்சி ஜெயபுரம் கிராமத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமாரின் நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்ட ஜிம் இளைஞர்களிடம் கையளிக்கப்பட்டபோது...

# நிரந்தர நியமனம் வழங்கக் கோரி தொண்டராசிரியர்கள் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

நிரந்தர நியமனம் வழங்கக் கோரி வன்னி மாவட்ட தொண்டர் ஆசிரியர்கள் நேற்று மாகாண கல்வி அலுவலகத்தின் முன்னாள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வவுனியா வடக்கு, துணுக்காய், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மடு கல்வி வலய தொண்டர் ஆசிரியர்கள் இப்போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

2010ஆம் ஆண்டுக்கு முன்பிருந்து சேவை செய்த 210 தொண்டராசிரியர்கள் இதுவரை நிரந்தர நியமனம் வழங்கப்படாது இருக்கின்றனர். இவர்கள் அனைவருக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்படவேண்டும் எனக் கோரி பிள்ளைகளுடன் தமது போராட்டத்தைத் தொடர்ந்தனர். நண்பகலுக்குப் பின்னராக கல்வியமைச்சின் செயலாளரினால் இது விடயம் தொடர்பில் இவர்களுக்கு விளக்கம் அளிக்கப்பட்ட நிலையில் இவர்கள் தமது போராட்டத்தைக் கைவிட்டு அங்கிருந்து சென்றனர்.



இது தொடர்பில் அமைச்சரவைப் பத்திரம் தாக்கல் செய்து அதன் மூலம் அனுமதி பெறப்பட்டே நியமனம் வழங்கப்படும் என இதன்போது அமைச்சின் செயலாளரினால் தெரிவிக்கப்பட்டதாக போராட்டத்தில் ஈடுபட்ட தொண்டராசிரியர்கள் தெரிவித்தனர். (இ)

# 20ஐ ஆதரிக்க முடியாது

## வவுனியாவில் மாவை

(வவுனியா)

தேர்தல்முறையை மாற்றியமைப்பதற்கான 20ஆவது திருத்தச்சட்ட யோசனை, சிறுபான்மையினருக்கு மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்தும் என்றும், அதனை ஒருபோதும், ஆதரிக்க முடியாது என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் நேற்று மாலை வவுனியாவில், நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்திலேயே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இடம்பெற்றுள்ள கட்சிகளின் பிரதிநிதிகள் இந்த தீர்மானத்தை எடுத்தனர்.

இந்தக் கூட்டத்தில் முக்கியமாக 20ஆவது திருத்தச் சட்டம் தொடர்பாகவே விரிவாக ஆராயப்பட்டது.

அதேவேளை, நாடாளுமன்றத் தேர்தலில் வேட்பாளர் பட்டியலில் கட்சிகளுக்கான ஆசனப் பங்கீடுகள் தொடர்பாக இந்தக் கூட்டத்தில் முன்னேற்றகரமான கருத்துக்கள் முன்வைகப்பட்ட போதிலும், இறுதி முடிவு எட்டப்படவில்லை..

இந்தக் கூட்டத்தில், தமிழரசுக் கட்சியின் சார்பில் மாவை சேனாதிராசா, ரெலோ சார்பில் செல்வம் அடைக்கலநாதன், வினோ நோகராதலிங்கம், என்.சிறீகாந்தா, ஹென்றி மகேந்திரன், கருணாகரன் ஆகியோரும், ஈ.பி.ஆர்.எல்.எவ். சார்பில் சுரேஸ் பிரேமச்சந்திரன், சிவசக்தி ஆனந்தன் ஆகியோரும், புளொட் சார்பில் தர்மலிங்கம் சித்தார்த்தன், கந்தையா சிவநேசன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# ஆபத்தில் சிக்கிய இலங்கை விமானம் பெங்களூருக்கு திசை திருப்பப்பட்டது

(சென்னை)

சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் புழுதியுடன் சூறைக்காற்று வீசியதால் சென்னை வந்த இலங்கை விமானம் தரையிறங்க முடியாமல் பெங்களூருக்கு திருப்பி அனுப்பப்பட்டது.

இலங்கையிலிருந்து நேற்று இரவு 8.40 மணிக்கு 164 பயணிகளுடன் ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமானம் சென்னை விமான நிலையத்துக்குச் சென்றது.

விமானம் தரையிறங்கும் நிலையில், விமான நிலைய சுற்று வட்டாரப் பகுதியில் திடீரென பலத்த வேகத்துடன் சூறைக் காற்று வீசியது. புழுதியும் கிளம்பியது. இதனால் ஓடுபாதை தெரியவில்லை.

விமானம் தரையிறங்குவதில் சிக்கல் ஏற்பட்டது. இதுபற்றி விமானி கட்டுப்பாட்டு அறைக்கு தகவல் கொடுத்ததன் பேரில் உடனடியாக விமானத்தை பெங்களூர் விமான நிலையத்துக்கு திருப்பி அனுப்பினர்.

அங்கு விமானம் தரை இறங்கியது. பின்னர் சூறைக்காற்று வேகம் குறைந்து காணப்பட்டது. இதன் பின்னர் இரவு 10.30 மணிக்கு மீண்டும் சென்னை விமான நிலையத்துக்கு பத்திரமாக வந்து பயணிகளை இறக்கி விட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அலுகோசு பதவிக்கு ஆட்சேர்ப்பு

(கொழும்பு)

நெடுகாலம் வெற்றிடமாகவுள்ள அலுகோசு (தூக்குத் தண்டனையை நிறைவேற்றுபவர்) பதவிக்கு ஒருவரை நியமித்துக் கொள்ளும் நடவடிக்கையை சிறைச்சாலைகள் திணைக்களம் முன்னெடுத்துள்ளது.

அடுத்த வாரம் இது தொடர்பிலான வர்த்தமானி அறிவித்தலை வெளியிடவும் சிறைச்சாலைகள் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

நாடாளுமன்றம் கலைக்கப்படுவதற்கு முன்னர் இந்த நியமனத்தை மேற்கொள்வதற்கும் முயற்சிக்கப்படுகிறது

இதற்கு முன்னைய மூன்று சந்தர்ப்பங்களில் இப்பதவிக்கென மூவர் தெரிவு செய்யப்பட்டிருந்தபோதும், பயிற்சிக் காலத்திலேயே அவர்கள் பதவியை வேண்டாமென்று உதறிச் சென்றமையும் குறிப்பிடத்தக்கது.

# நாணய மாற்று நிலையம் சுற்றிவளைப்பு

(கொழும்பு)

கண்டி - கொட்டுகொடல்ல பகுதியில் அனுமதிப் பத்திரம் இன்றி இயங்கிவந்த வெளிநாட்டு நாணயமாற்று மத்திய நிலையம் ஒன்று சுற்றிவளைக்கப்பட்டு இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மத்திய வங்கியின் செலாவணி கட்டுப்பாட்டு திணைக்கள அதிகாரிகளின் உதவியுடன் நேற்று மாலை இச்சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்தார். சுற்றிவளைப்பின் போது குறித்த நிலையத்தில் இருந்து 2,21,309 ரூபா வெளிநாட்டு நாணயம் மீட்கப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் கண்டி நீதவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்படவுள்ளனர்.



கரைச்சிப் பிரதேச செயலகத்தில் அங்கவீனமுற்ற தேசிய செயலகத்தின் நிதி அனுசரணையில் இடம்பெற்ற அங்கவீனமுற்றவர்களுக்கான வாழ்வாதார செயலமர்வு கிளிநொச்சி திருநகர் மண்டபத்தில் நேற்று நடைபெற்றபோது...

# மது விற்பனை; மாது கைது

(சாவகச்சேரி)

யாழ்ப்பாணம் - சாவகச்சேரி - தெருடாவில் பிரதேசத்தில் சட்டவிரோதமான முறையில் மது விற்பனையில் ஈடுபட்டு கைது செய்யப்பட்ட பெண் ஒருவரை எதிர்வரும் யூலை மாதம் 2ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த பிரதேசத்தில் இந்தப் பெண் சட்டவிரோதமான முறையில் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டதாக பொது மக்கள் வழங்கிய தகவலுக்கு அமைய விரைந்த பொலிஸார் நேற்று இவரை கைது செய்திருந்தனர். மேலும் குறித்த பெண்ணின் 17 வயதுடைய மகளையும் சம்பவ இடத்தில் வைத்து பொலிஸார் கைது செய்திருந்தனர்.

சந்தேக நபரான பெண் சாவகச்சேரி நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்படுத்தப்பட்ட போது அவரை எதிர்வரும் 2ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவு பிறப்பித்தார்.

அத்துடன் 17 வயது சிறுமியை பிரமானந்தா ஆச்சிரமத்தில் தங்க வைப்பதற்கான ஏற்பாடுகளை செய்யுமாறு நீதவான் அதிகாரிகளுக்கு பணித்துள்ளார்.

இதேவேளை வழக்கு விசாரணையின்போது சாட்சியமளித்த குறித்த சிறுமி, தனது தந்தையின் வற்புறுத்தலினால்தான் மதுவிற்பனையில் ஈடுபட்டதாக கூறியுள்ளார். இதனை கவனத்திற்கொண்ட நீதவான், அவரை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இப்பத்திரிகை இல: 373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 யூன் 23ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.